# தமிழ்நாட்டில் புலம் பெயர்ந்த குழந்தைகள் கல்வி கற்றல் மீது கோவிட்-19 ஏற்படுத்தியுள்ள பாதிப்பு

**2021**






# தமிழ்நாட்டில் புலம் பெயர்ந்த குழந்தைகள் கல்வி கற்றல் மீது கோவிட்-19 ஏற்படுத்தியுள்ள பாதிப்பு 2021

தமிழ்நாட்டில் புலம் பெயர்ந்த குழந்தைகள் கல்வி கற்றல் மீது கோவிட்–19 ஏற்படுத்தியுள்ள பாதிப்பு–2021

நவம்பர் 2021

Creative Commons License 4.0

CC BY NC SA

Aide et Action — Changing the world through Education | actionaid — ActionAid Association (India) | ARUNODHAYA — Centre For Street And Working Children | HRF | TAMILNADU ALLIANCE

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

m: 86680 91451 | e: sdgwatch@hrf.net.in | w: hrf.net.in

# பொருளடக்கம்


| | |
|---|---|
| நன்றி உரைத்தல் | (i) |
| சம-வெற்றிச் சூழலை உருவாக்குதலை நோக்கி | (iii) |
| செயலாற்ற ஓர் அழைப்பு | (v) |
| புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சமத்துவமான கல்வியை நோக்கி | (viii) |
| குழந்தைகளுக்கு ஒரு நியாயமான, வளங்குன்றா எதிர்காலத்தை நோக்கி | (x) |
| தரவுகளை ஆய்ந்தறிந்து கொள்கை வகுத்தல் மற்றும் திட்டமிடலை நோக்கி | (xii) |
| ஆய்வு சுருக்கம் | 1 |
| கண்டறிந்தவை | 2 |
| பரிந்துரைகள் | 7 |
| 1. பின்னணி | 13 |
| 2. கட்டமைப்பு | 15 |
| 2.1. வரையறைகள் | 15 |
| 2.1.1. புலம் பெயர்ந்த தொழிலாளி | 15 |
| 2.1.2. குழந்தை | 16 |
| 2.1.3. புலம் பெயர்ந்த குழந்தைகள் | 17 |
| 2.1.4. குறிப்பிட்ட புவி இடத்துக்குரிய உரிமைகள் | 19 |
| 2.2. அரசமைப்புச் சட்ட உரிமைகள் மற்றும் சட்டப் பாதுகாப்புகள் | 20 |
| 2.2.1. கல்விக்கான உரிமை | 20 |
| 2.2.2. இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டம், 2009-க்கான குழந்தைகளின் உரிமை | 22 |
| 2.3. பயிற்று மொழி | 23 |
| 2.3.1. அரசமைப்புச் சட்ட விதிமுறைகள் | 23 |
| 2.3.2. தேசிய ஆரம்பகால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE) பாடத் திட்டகட்டமைப்பு 2014 | 23 |
| 2.3.3. தேசிய பாடத்திட்ட கட்டமைப்பு, 2005 (NCF) | 24 |
| 2.3.4. குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக் கல்விக்கான உரிமை சட்டம், 2009 | 24 |
| 2.3.5. இலவச மற்றும் கட்டாயக் கல்விச் சட்டம், 2009-க்கான குழந்தைகளின் உரிமை | 25 |

*2.3.6.* ஐக்கிய நாடுகள் மன்றமும் மொழியும் 25

*3.* வாய்ப்பு எல்லை மற்றும் ஆய்வுமுறை 27

*3.1.* நோக்கம் 27

*3.2.* பங்கேற்கும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் 27

*3.3.* காலவரம்பு 27

*3.3.1.* வடிவமைப்பு 27

*3.3.2.* தரவுகள் சேகரித்தல் 27

*3.3.3.* ஆய்வுக்கான கட்டுப்பாட்டு வரம்புகள் 28

*3.4.* கருவிகள் 29

*3.5.* பயிற்சி 30

*3.6.* மாதிரி எடுத்தல் 30

*3.6.1.* மாதிரி தேர்வு செய்தல் 30

*3.6.2.* புவியிடப் பகுதி 31

*3.6.3.* மாதிரி வினியோகம் 31

*3.6.4.* சமூக கட்டமைப்பு 32

*4.* கண்டறிந்தவை 33

*4.1.* பிறந்த மாநிலம் 33

*4.2.* வீட்டுவசதி 34

*4.3.* பள்ளிக்கூடத்தின் வகை 36

*4.4.* பதில் அளிப்பவர்களின் கல்வி 37

*4.5.* தங்கியுள்ள மாநிலத்தில் கற்றல் சூழல் 37

*4.6.* பெற்றோரின் கல்வித் தகுதி 39

*4.7.* பெற்றோரது வேலையின் வகை அல்லது வேலை செய்யும் துறை 41

*4.8.* தினசரி வழக்கம் 41

*4.9.* தாய்மொழி 43

*4.9.1.* அவர்களது தாய்மொழி ஆசிரியர்களை எளிதில் பெறுவதற்கான வாய்ப்பு 43

*4.9.2.* தாய்மொழி அல்லாத ஆசிரியர்களால் ஏற்படும் விளைவுகள் 45

*4.10.* பொதுமுடக்கம் /பள்ளி மூடல்காலத்தில் கற்பதற்கான வாய்ப்பு 45

4.11. நிகழ்நிலைக் (ஆன்லைன்) கல்வி 48
4.12. ஆன்லைன் வகுப்புகளில் பங்கேற்க முடியாமைக்கு காரணங்கள் 49
4.13. எழுத்தறிவு கொண்ட சுற்றுப்புரம் 50
4.14. வாசித்தல் 52
4.14.1. தொடர்ச்சியான வாசித்தல் 52
4.14.2. பாட வாரியாக தொடர்ச்சியாக வாசிப்பவர்கள் 53
4. 14.3. வசிப்பதில் மற்றவர்களின் உதவி 53
4.15. நடப்பு கல்வி ஆண்டிக்காண பாட நூல்கள் 55
4.16. பொருள்களுக்கான அணுகல் 56
4. 16.1. உலர் உணவுப் பொருட்கள் 56
4.16.2. குழந்தைகளை மையப்படுத்திய நிவாரணம் 57
4.17. கற்றல் நடத்தை 58
4.17.1. ஆர்வமுள்ள பாடங்கள் மற்றும் அவர்களின் மதிப்பூடுகள் 58
4. 17.2. கடந்த ஒரு மாதத்தில் கற்றல் 60
4.18. ஆரோக்கியம் 61
4.19. பாதுகாப்பு 62
4.20. பெருந்தொற்று நோய்க்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் 63
4. 21. ஊரடங்கு 64
4.21.1. ஊரடங்கு மற்றும் எதிபார்ப்புகள் பற்றிய பார்வை 64
4.21.2. ஒட்டுமொத்த ஊரடங்கு பற்றிய உணர்வு 65
5. பரிந்துரைகள் 67
5.1. அடித்தளம் 67
5.2. பள்ளிகளை மீண்டும் துவக்குதல் 69
5.3. மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு 70
5.4. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளை பாதுகாத்தல் 72
5.5. சொந்த மாநிலங்கள் (ஆரம்பிக்கும் பகுதி) 73
5.6. தங்கும் மாநிலம் (சேரும் பகுதி) 74
5.7. குடிமைச் சமூக அமைப்புகள் 76

**வரைபடங்கள்**


| | | |
|---|---|---|
| வரைபடம் 01: | பதில் அளித்தவர்களில் வயது வாரியான எண்ணிக்கை | 31 |
| வரைபடம் 02: | பதில் அளித்தவர்களில் சாதி வாரியான எண்ணிக்கை | 32 |
| வரைபடம் 03: | புலம் பெயர்தலின் வகை | 33 |
| வரைபடம் 04: | பெற்றோர்களுடன் வந்துள்ள மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகள் மற்றும் வேலைக்காக வந்துள்ள மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளின் சொந்த மாநிலங்கள் | 34 |
| வரைபடம் 05: | அறைகளின் எண்ணிக்கை | 36 |
| வரைபடம் 06: | தற்போது படித்துவரும் பள்ளிகளின் வகை | 36 |
| வரைபடம் 06: | அறைகளின் எண்ணிக்கை | 36 |
| வரைபடம் 07: | பதில் அளித்தவர்கள் தற்போது படிக்கும் வகுப்பு | 37 |
| வரைபடம் 08: | சொந்த மாநிலத்துக்கு திரும்பியதும் படிப்பைத் தொடருதல் | 39 |


**அட்டவணைகள்**


| | | |
|---|---|---|
| அட்டவணை 1. | மாவட்ட வாரியாக பதில் அளித்தவர்கள் எண்ணிக்கை | 31 |
| அட்டவணை 2: | மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர் குழந்தைகளது பெற்றோர்களின் கல்வித் தகுதி | 40 |
| அட்டவணை 3. | மாநிலத்துக்கு உள்ளேயே புலம்பெயர் குழந்தைகளது பெற்றோர்களின் கல்வித் தகுதி | 41 |
| அட்டவணை 4. | பெற்றோர்கள் வேலையின் வகை / வேலை செய்யும் துறை | 41 |
| அட்டவணை 5. | புலம் பெயர்ந்த குழந்தைகளின் தினசரி வழக்கம் | 42 |
| அட்டவணை 6 | புலம்பெயர்ந்த குழந்தைகள் வகுப்பு வாரியாக தாய்மொழியில் கற்கும் அணுகல் | 43 |
| அட்டவணை 7. | புலம்பெயர்ந்த குழந்தைகள் தாய்மொழியில் கற்பதற்கான அணுகல் | 44 |
| அட்டவணை 8. | தாய்மொழியில் கற்பதற்கான அணுகல் இல்லாமை ஆனால் படிப்பைத் தொடர முயற்சிப்பது: வகுப்பு வாரியாக | 45 |

அட்டவணை 9. ஊரடங்கு / பள்ளி அடைப்பின்போது கற்றல் அணுகல் 46
அட்டவணை 10. ஊரடங்கு/பள்ளி அடைப்பின்போது கற்றலுக்கான அணுகல் 46
அட்டவணை 11. ஊரடங்கு / பள்ளி அடைப்பின்போது பாலின அடிப்படையில் கற்றலுக்கான அணுகல் 46
அட்டவணை 12. ஊரடங்கு / பள்ளி அடைப்பின்போது கற்றலுக்கான அணுகல் 47
அட்டவணை 13. ஊரடங்கு/பள்ளி அடைப்பின்போது வகுப்பு வாரியாக கற்றலுக்கான அணுகல் 47
அட்டவணை 14. ஊரடங்கு / பள்ளி அடைப்பின்போது பாலின அடிப்படையில் கற்றலுக்கான அணுகல் 48
அட்டவணை 15. பாலினம் வாரியாக நிகழ்நிலை வகுப்புகளில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை 48
அட்டவணை 16. நிகழ்நிலைக் (ஆன்லைன்) கல்வி 48
அட்டவணை 17. படிப்பு வாரியாக நிகழ்நிலை வகுப்புகளில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை 49
அட்டவணை18. பாலினம் வாரியாக நிகழ்நிலை வகுப்புகளில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை 49
அட்டவணை 19. நிகழ்நிலை வகுப்புகளுக்குச் செல்லாததற்கான காரணங்கள் 50
அட்டவணை 20. பாலின வாரியாக எழுத்தறிவுச் சூழல் 51
அட்டவணை 21. சாதி வாரியாக புலம் பெயர்ந்த குழந்தைகளுக்கு எழுத்தறிவு பெறும சூழல் 51
அட்டவணை 22. புலம் பெயர்ந்த குழந்தைகளின் வாசிப்புப் பழக்கம் 52
அட்டவணை 23. புலம்பெயர்ந்த குழந்தைகள் வாசிப்பதில் மற்றவர்களிடமிருந்து உதவி பெறுகிறார்கள் 53
அட்டவணை 24. நடப்பு கல்வி ஆண்டிற்கான பாட நூல்களைப் பெறும் குழந்தைகளின் விழுக்காடு 53
அட்டவணை 25. படிப்பு வாரியாக நடப்பு கல்வி ஆண்டிற்கான பாட நூல்களைப் பெறும் குழந்தைகளின் விழுக்காடு 54

அட்டவணை 26. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளுக்கான பொருட்களை அணுகுதல் (உலர் உணவுகள்) 56

அட்டவணை 27. மாநிலத்திற்குள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளுக்கான பொருட்களை அணுகுதல் (உலர் உணவுகள்) 57

அட்டவணை 28. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குாந்தைகளை மையப்படுத்திய நிவாரணம் பெறுகின்றனர் 57

அட்டவணை 29. மாநிலத்திற்குள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளை மையப்படுத்திய நிவாரணம் பெறுகின்றனர் 57

அட்டவணை 30. மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயர்ந்த குழந்தைகளின் விருப்பமுள்ள பாடங்கள் மற்றும் அவற்றின் விகிதங்கள் 58

அட்டவணை 31. மாநிலத்திற்குள்ளே இடம் பெயர்ந்த குழந்தைகளின் விருப்பமுள்ள பாடங்கள் மற்றும் அவற்றின் விகிதங்கள் 59

அட்டவணை 31. மாநிலத்திற்குள்ளே இடம் பெயர்ந்த குழந்தைகளின் விருப்பமுள்ள பாடங்கள் மற்றும் அவற்றின் விகிதங்கள் 59

அட்டவணை 32. மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த குழந்தைகளால் கடந்த ஒரு மாதத்தில் கற்றல் நடவடிக்கைகள் 60

அட்டவணை 33. இடம்பெயர்ந்த குழந்தைகள் உடல் ஆரோக்கியத்திற்காக அணுகுமிடம் 61

அட்டவணை 34. மாநிலத்திற்குள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளால் கடந்த ஒரு மாதத்தில் கற்றல் நடவடிக்கைகள் 62

அட்டவணை 35. தொற்றுநோய்களின் போது துணபிரயோகத்தை எதிர்கொள்ளும் புலம்பெயர்ந்த குழந்தைகளின் விழுக்காடு 63

அட்டவணை 36. தொற்றுநோய்க்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள் 64

அட்டவணை 37. ஊரடங்கு மற்றும் எதிர்பார்ப்புகள் பற்றிய கருத்துகள் 65

அட்டவணை 38. ஊரடங்கு பற்றிய ஒட்டுமொத்த உணர்வு 66

## *நன்றி உரைத்தல்*

இதுபோன்ற ஓர் ஆய்வு என்பது மிகவும் சாதகமான காலச் சூழலிலும் கூட சவால்கள் மிக்கதாக இருக்கும். நெருக்கடி நிலைக் காலங்களில் இந்த சவால்கள் மேலும் பன்மடங்கு அதிகரிக்கும். இந்நிலையில், தங்களது செயலூக்கமான பங்கேற்பு மற்றும் ஆதரவின் மூலம் இந்த ஆய்வை சாத்தியமாக்கிய அனைவருக்கும் நாங்கள் முழுமனதுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாட்டில் செயலாற்றி வருகின்ற அருணோதயா (Arunodhaya), ஆக்ஷன் எய்டு அசோசியேஷன் (ActionAid Association), எய்ட் எட் ஆக்ஷன் (Aide et Action), தமிழ்நாடு அல்லையன்ஸ் (Tamil Nadu Alliance), மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (Human Rights Advocacy and Research Foundation) ஆகிய ஐந்து சமூக அமைப்புகளின் கூட்டு முயற்சியின் விளைவுதான் இந்த ஆய்வு.

இந்த ஆய்வினை வடிவமைத்து வழிகாட்டியவர் டாக்டர் எஸ். வெங்கடராமன்.

களத்தில் விவரங்கள் சேகரிக்கும் பணியில் The Tamil Nadu Alliance அமைப்பைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர்கள் ஏ.சீனிவாசன், கே.முனியாண்டி, எஸ்.நாகலட்சுமி, வி.பவித்ரா, எஸ்.சசிகலா, டி.ரத்னா, கே.சுசீலா, எம்.தமிழ்ச்செல்வி, ஆர்.மலர், ஜே.உஷாராணி, எஸ்.வித்யா, எஸ். சத்ரக் தினகரன் மற்றும் பி.தினேஷ்குமார், செல்வி, பூங்கோதை, ஆர்.ஆனந்தி, பி.பழனிசாமி மற்றும் Aide et Action (India) அமைப்பின் திட்ட அலுவலர் பென் டேவிஸ், சென்னை மண்டல புலம்பெயர் திட்ட கள ஒருங்கிணைப்பாளர் லொச்சன் சாஹு மற்றும் Arunodhaya அமைப்பின் கள அமைப்பாளர்கள் பாக்யா, தமிழரசி மற்றும் ActionAid Association அமைப்பைச் சேர்ந்த கள அமலாக்கப் பிரிவு தலைவர் நிரஞ்சனா சாட்டர், புரோகிராம் அசோசியேட் எட்வர்ட் பிரதாப் சிங், திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஜே.மார்ட்டின் பிலிப்ஸ், ஜி.சுனில் மற்றும் Human Rights Advocacy and Research Foundation (HRF) அமைப்பைச் சேர்ந்த முதுநிலை ஒருங்கிணைப்பாளர் என்.சித்ரா, இணை ஒருங்கிணைப்பாளர்கள் திவ்யா, நமிதா ஜேயசங்கர், ஜெ.முருகேசன் ஆகியோர் பங்கேற்றனர்.

2021 ஏப்ரல்-மே மாதங்களில் வழக்கறிஞர் ஷெஹனாஸ் லத்தீப் HRF அமைப்புக்கு பயிற்சிபெற வந்ததை நாங்கள் தனிச் சிறப்பாகக் கருதுகிறோம். சட்டப் பிரிவுகளில் கணிசமான பகுதியை அந்த நேரத்தில் அவர்தான் எழுதினார்.

தரவுகளை பகுத்தாய்வு செய்து, ஆய்வறிக்கையின் முன்வடிவை எழுதித் தந்தவர் HRF அமைப்பின் இணை ஒருங்கிணைப்பாளர் ஜெ. முருகேசன்.

LISSTAR அமைப்பின் மூத்த நபர் பேராசிரியர் பெர்னார்ட் டி சாமி, குறுகிய காலத்தில் ஆய்வறிக்கையின் ஆரம்ப முன்வடிவைப் பார்த்து கருத்துக்களைத் தெரிவித்தார்.

வடிவமைத்தல் மற்றும் தளவமைத்தல் பணியை HRF அமைப்பின் இணை ஒருங்கிணைப்பாளர் சே. அனிதா செய்து தந்தார்.

இவர்கள் அனைவரது பணியையும் அங்கீகரித்து பாராட்டுவதுடன், இவர்கள் ஒவ்வொருவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். மன அழுத்தம் மிகுந்த இந்த காலகட்டத்தில் இந்த ஆய்வில் பங்கேற்பதற்கு நேரம் எடுத்துக் கொண்ட சமூகங்களுக்கு குறிப்பாக நாங்கள் நன்றி கூறுகிறோம். இந்த ஆய்வறிக்கை கண்டறிந்து கூறியிருப்பவற்றின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள், இனி எப்போதும் அமைப்பின் தவறுகள் மீண்டும் மீண்டும் நிகழாமல் தடுப்பதை உறுதிப்படுத்தும் என நம்பிக்கை கொள்வோம். நமது குழந்தைகள் எதையும் குறைவாகப் பெறுவதற்கு அல்ல-எல்லாவற்றையும் பெறுவதற்கு தகுதியானவர்கள்.

**பி.தமிழரசி,**
துணை இயக்குநர்,
HRF

# சம-வெற்றிச் சூழலை உருவாக்குதலை நோக்கி

கோவிட்-19 பொதுமுடக்கமானது இந்தியாவில் கோடிக் கணக்கான அமைப்பு சாரா புலம்பெயர் தொழிலாளர்களின் வாழ்க்கையை மிகப்பெரும் அளவில் பாதித்திருக்கிறது. ஆண்கள், பெண்கள், வளரிளம் பருவத்தினர், குழந்தைகள் என பல்லாயிரக் கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் நகரங்களில் இருந்து இடம்பெயர்ந்து கிராமங்களுக்கு வெறும் கால்களுடன் நடந்தே சென்றிருக்கிறார்கள். கோவிட் 19 பெருந்தொற்றினால், திட்டமிடாமல் அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் மனமுடைந்து நம்பிக்கை இழந்தது போன்ற, ஆதரவின்றி தவியாய் தவித்தது போன்ற ஒரு நிலையை இந்தியா ஒருபோதும் சந்தித்தது இல்லை.

முறைசாரா பணியிடங்களில் தங்களது பெற்றோர்களுடன் வாழ்ந்து வந்த புலம்பெயர் தொழிலாளர்களது குழந்தைகளின் வாழ்க்கையையும், உயிர்களையும் பெருந்தொற்று பெருத்த அளவில் பாதித்திருக்கிறது. புலம்பெயர் தொழிலாளர்கள் பற்றிய மற்றும் அவர்களுடன் அருகில் உள்ள பகுதிகளில் வசிக்கும் அவர்களது குடும்பத்தினர் குறித்த விரிவான தரவுகள் அடங்கிய தகவல் தளம் இந்தியாவில் இன்னும் உருவாக்கப் படவில்லை. இதன் விளைவாக, உடன் வாழும் குழந்தைகள் தங்களுக்கு உரிய அடிப்படைத் தகுதிகளும், அடிப்படை உரிமைகளும் மறுக்கப்படும் நிலையை எதிர்கொள்கிறார்கள்.

எய்ட் எட் ஆக் ஷன் (Aide et Action), அருணோதயா (Arunodhaya), தமிழ்நாடு அல்லையன்ஸ் (Tamil Nadu Alliance), ஆக் ஷன் எய்டு அசோசியேஷன் (ActionAid Association) ஆகிய அமைப்புகளின் நெருங்கிய ஒத்துழைப்புடன் மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (Human Rights Advocacy and Research Foundation) மேற்கொண்டுள்ள இப்போதைய ஆய்வானது, பெருந்தொற்றுக் காலத்திலும் அதற்குப் பின்னரும் பணியிடங்களில் வாழும் புலம் பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களுடன் இருக்கும் குழந்தைகளின் அவல நிலைமைகளை துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டும் நேர்மையான முயற்சியாகும்.

புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள் எவ்வாறு கண்ணுக்குத் தெரியாமல் இருக்கிறார்கள் என்பதையும், சென்று சேர்ந்துள்ள இடங்களில் சத்துணவு, ECCE, கல்வி, குழந்தைகள் பாதுகாப்பு போன்ற பல்வேறு அரசு உதவிகளைப் பெறும் தகுதிகளில் இருந்தும், சொந்த கிராமங்களில் ஒன்றிணைய முடியாமலும் அவர்கள் எவ்வாறு ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது. தங்கள் தாய் மொழியில் எளிதில் கல்வி கற்பதற்கான

வாய்ப்புகள், சிறந்த கட்டமைப்பு வசதிகள், கற்றல் உதவிப் பொருட்கள், தரமான முறையில் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஆகியவை இல்லாமல் இருப்பதுதான் குழந்தைகளுக்கு மாபெரும் தடையாக உள்ளது. பணியிடங்களில் உள்ள வாழ்க்கை நிலைமையானது படு மோசமாகவும், ஆரோக்கியமான வாழ்க்கைக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுவான குறைந்தபட்ச சேவைகள் கூட இல்லாமலும் இருக்கின்றன.

சென்று சேர்ந்துள்ள மாநிலங்களில் புலம்பெயர் குழந்தைகளின் பாதுகாப்பு, கல்விக்கான உரிமை, உணவு பாதுகாப்பு தொடர்பான சில அடிப்படையான பிரச்சினைகளை இந்த ஆய்வு எழுப்புகிறது. புலம்பெயர்ந்தவர்களுக்காகவும், அவர்களுக்கு சம வாய்ப்பு அளிப்பதற்காகவும் ஒரு சமத்துவமான, பாகுபாடற்ற கொள்கையின் அவசியத்தை வளங்குன்றா வளர்ச்சி இலக்குகள் (SDG) வலியுறுத்துகின்றன. உள்நாட்டுக்குள் புலம்பெயர்வதால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளை சென்றடையும் வகையில் பயனுள்ள சில கொள்கை திசைவழிகளை தமிழ்நாடு மாநிலம் உருவாக்கக் கூடும்.

பாதுகாப்பான, ஆரோக்கியமான சூழலுக்கும், கல்விக்கும் சத்துணவுக்கும், குழந்தை தொழிலாளர் முறையில் இருந்து பாதுகாப்பதற்கும் வழிவகுக்கும் நோக்கில் எய்ட் எட் ஆக் ஷன் (Aide et Action) அமைப்பானது திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள செங்கல் சூளை பகுதிகளிலும், கட்டிட கட்டுமானப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகிறது. மாநிலங்களுக்கு இடையில் புலம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான குழந்தைகளுக்கு எளிதில் கல்வி கிடைக்கச் செய்யும் நோக்கில் தமிழ்நாடு அரசானது எய்ட் எட் ஆக் ஷன் (Aide et Action) அமைப்புடனும் செங்கல் சூளை உரிமையாளர்களுடனும் கட்டிட அமைப்பாளர்களுடனும் இணைந்து பணியாற்றி வருகிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தொழிலாளர்கள் புலம்பெயர்தல் முக்கியமானது. என்றாலும், புலம்பெயர் தொழிலாளர்களும் சம-வெற்றி பெறும் நிலையை அடைவதற்காக சமவாய்ப்பு அளிக்கும் ஒரு கொள்கையை இந்தியா இனிமேல்தான் உருவாக்க வேண்டியிருக்கிறது, எனவே, புலம்பெயர்தல் குறித்து ஒரு தேசியக் கொள்கையை வகுப்பதற்கும், புலம்பெயர் தொழிலாளர்களின் கண்ணியம், உரிமைகள் மற்றும் நலனுக்கான ஒரு செயல்திட்டத்தை உருவாக்குவதற்கும் பெரும் அவசியம் உள்ளது.

**உமி டேனியல்,**
இயக்குநர் புலம்பெயர்தல் கல்வி ,
Aide et Action South Asia, India

# செயலாற்ற ஓர் அழைப்பு

கோவிட்-19 பெருந்தொற்று என்பது வெறும் மக்களின் நலவாழ்வை பாதிக்கும் பெருந்தொற்று மட்டும் அல்ல: உலகம் முழுவதும் பல்லாயிரக் கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை, வேலைவாய்ப்பை, பொருளாதாரத்தை பாதித்திருக்கிறது. விளிம்புநிலை மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாகும் நிலைக்குத் தள்ளியிருக்கிறது. இந்தப் பொருளாதார பேரதிர்ச்சியில் இருந்து, உலகில் ஏழ்மையிலும் ஏழ்மையான நிலையில் வாழும் மக்கள் மீள்வதற்கு பத்தாண்டுக் காலத்துக்கு மேல் ஆகும் என ஆக்ஸ்பாம் ஜிபி (Oxfam GB) தன்னார்வ அமைப்பு 'ஏற்றத்தாழ்வு வைரஸ்' என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. பெருந்தொற்று பரவலைத் தடுப்பதற்காக பொதுமுடக்கம், பள்ளிகள் மூடல், தனி மனித இடைவெளி போன்ற அரசுகள் எடுத்துவரும் நோய்த் தணிப்பு நடவடிக்கைகள் குழந்தைகளின் வாழ்க்கையின் மீதும் வளர்ச்சியின் மீதும் நீண்ட கால பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன. இது வன்முறை, சுரண்டல், முறைதவறி நடத்தப்படுதல், புறக்கணிப்பு போன்றவற்றுக்கு ஆளாகும் பேராபத்துக்கு குழந்தைகளை கொண்டு செல்கிறது.

2020 மார்ச்சில் நாடு தழுவிய அளவில் அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கமானது, ஆயிரக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்களை ஒரே இரவில் வேலையிழக்கச் செய்து, அவர்களது கிராமங்களுக்குத் தப்பியோட வைத்தது. ஆயிரக்கணக்கான புலம்பெயர் தொழிலாளர்கள் அவர்கள் சேர வேணடிய இடங்களுக்கு நீண்ட தொலைவு மைல் கணக்கில் நடந்தே சென்றார்கள். பலர் வழியிலேயே இறந்து போயினர். தெலங்கானாவின் பூபாலபள்ளி மாவட்டத்தில் வேலை செய்து வந்த இடத்தில் இருந்து, பக்கத்து மாநிலம் சத்தீஸ்கரின் பீஜப்பூர் மாவட்டத்தில் உள்ள தனது சொந்த கிராமத்துக்கு நடந்து சென்ற 12 வயதுச் சிறுமியின் சோக மரணம், சொந்த மாநிலமான மத்தியப் பிரதேசத்துக்கு நடந்து சென்று கொண்டிருந்தபோது வழியில் ஜால்னா மற்றும் அவுரங்காபாத் மாவட்டங்களுக்கு இடையே சரக்கு ரயில் மோதி புலம்பெயர் தொழிலாளர்கள்16 பேர் கொல்லப்பட்டது ஆகிய சம்பவங்கள், புலம்பெயர் தொழிலாளர்களின் அவல நிலையை வெளிப்படுத்தும் சில உதாரணங்கள். இத்தகைய சம்பவங்கள் நடந்த பிறகும், புலம்பெயர்ந்தவர்கள் உயிரிழப்பு குறித்து எந்த விவரங்களும் இல்லை என இந்திய அரசு அறிவித்தது.

புலம் பெயர்ந்த பெரியவர்கள் பற்றியே எந்த விவரங்களும் இல்லாத நிலையில், புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் உடன்

வராமலேயே புலம்பெயர்ந்த (கடத்தப்பட்ட) குழந்தைகளின் நிலவரம், அவர்கள் கண்ணுக்குத் தெரியாமல் இருப்பதால் மிக மிக ஆபத்தானதாக இருக்கிறது. 'தமிழ்நாட்டில் புலம் பெயர்ந்த குழந்தைகள் கல்வி கற்றல் மீது கோவிட்-19 ஏற்படுத்தியுள்ள பாதிப்பு' என்ற தலைப்பிலான இந்த ஆய்வானது, புலம்பெயர்ந்த குழந்தைகள் மீது பெருந்தொற்று நடவடிக்கைகள் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை வெளிச்சமிட்டு காட்ட முயல்கிறது; மேலும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்துவதற்கும் அவர்களது கற்றல் நடைமுறைக்குத் தேவையான வழி வகைகளை செய்வதற்கும் பரிந்துரைகளை முன்வைக்கிறது. SDG இலக்குகளை நிறைவேற்றுவதற்கு கோவிட்-19 தடை ஏற்படுத்தி இருக்கிறது. குழந்தை தொழிலாளர் முறைக்கு எதிரான சர்வதேச தினம் 2021-ன் போது, ILO மற்றும் UNICEF அமைப்புகள் கூட்டாக வெளியிட்ட 'குழந்தை தொழிலாளர் முறை 2020 போக்குகளும் முன்னுள்ள வழியும்' என்ற ஆய்வறிக்கையானது, கோவிட் 19 உருவாக்கியுள்ள வறுமையின் காரணமாக 2022-ல் மேலும் 8.9 மில்லியன் (89 லட்சம்) குழந்தைகள் தொழிலாளர்களாக சேருவார்கள் என எச்சரிக்கை செய்துள்ளது. பள்ளிகள் மூடல் காரணமாக 1 பில்லியனுக்கும் (100 கோடிக்கும்) அதிகமான குழந்தைகள் கல்வியில் பின்தங்கும் ஆபத்து உள்ளது என்று UNICEF தரவுகள் கூறுகின்றன.

குாந்தை தொழிலாளர் முறையை அகற்றுவதையும், கல்வி உரிமைக்கு ஊக்கம் அளிப்பதையும் முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ள அமைப்பு என்ற முறையில் அருணோதயா (Arunodhaya) அமைப்பானது, இந்த ஆய்வில் ஒரு பகுதியாக இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. வட சென்னை பகுதியில் பொம்மை தயாரிப்பு, ஜோதிடம், விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள, கட்டுமானத் தொழில் செய்கிற, கம்பெனிகளில் வேலை செய்கிற புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளின் நிலைமையை இந்த ஆய்வின் மூலமாக அருணோதயா வெளிப்படுத்தி இருக்கிறது. இந்தக் குடும்பங்கள் ராஜஸ்தான், ஒடிசா, மகாராஷ்டிரா, பீகார் ஆகிய மாநிலங்களில் இருந்து புலம்பெயர்ந்து வந்தவை. எந்தவித ஆவணச் சான்றும் இல்லாத நிலையில், அரசு திட்ட உதவிகளைப் பெறுவதற்கும், தங்கள் குழந்தைகளுக்கு கல்வி கிடைக்கச் செய்வதற்கும் அவர்களுக்கு எந்த வாய்ப்பும் இல்லை. அரசு உதவிகளைப் பெறுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லாதிருப்பதால், அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களின் உதவிகளைத்தான் அவர்கள் நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள இத்தகைய குரலற்ற, முகமற்ற புலம்பெயர் குழந்தைகளின் நிலைமையை இந்த ஆய்வு முதன்மையாக எடுத்துக் கூறுகிறது. மிகவும் சென்றடைய முடியாத நிலையில் இருப்பவர்களை, மிகுந்த பாகுபாட்டுக்கு ஆளாக்கப்பட்டிருப்பவர்களை சென்றடைவதற்கு இது முயற்சி செய்கிறது. குழந்தைப் பருவத்துக்கான உரிமைகளை இந்தக் குழந்தைகள் அனுபவிப்பதற்கும், கல்விக்கும் வளர்ச்சிக்குமான வாய்ப்புகளைப் பெறுவதற்கும், எவரையும் பின்தங்க விட்டுவிடக் கூடாது (Leave No One Behind - LNOB) என்ற வளங்குன்றா வளர்ச்சி இலக்குகளுக்கான (Sustainable Development Goals) 2030 செயல்திட்டத்தின் மையமான உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கும் உதவும் வகையில் செயல் ஆற்றுவதற்கு இது அழைப்பு விடுக்கிறது.

**டாக்டர் விர்ஜில் டி சாமி,**
செயல் இயக்குநர்,
அருணோதயா,
சென்னை

# புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சமத்துவமான கல்வியை நோக்கி

கோவிட்-19 பெருந்தொற்றானது அமைப்பு சாரா தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமைகள் மற்றும் வேலை நிலைமைகள் மீது பேரழிவை ஏற்படுத்தி உள்ளது. மாநிலங்களுக்கு இடையிலும் மாநிலத்துக்கு உள்ளேயும் புலம்பெயரும் தொழிலாளர்களையும், குறிப்பாக அவர்களது குழந்தைகளையும் கடுமையாக பாதித்துள்ளது. கடும் துன்பத்துக்கு ஆளாகியிருக்கின்ற மாநிலங்களுக்கு இடையிலான புலம்பெயர் தொழிலாளர்கள் வேலைகளையும், ஊதியங்களையும், இழப்பீடுகளையும், மாற்று வாழ்வாதார வாய்ப்புகளுக்கான வழிகளையும் இழந்து நிற்கின்றனர். புலம்பெயர்ந்தவர்களது குடியிருப்புகளிலும் வேலை இடங்களிலும் குடும்பத்துடன் வாழும் அவர்களது குழந்தைகள் படுமோசமான நிலவரத்தை எதிர்கொண்டிருக்கிறார்கள். கற்றலில் இழப்பு, அதிக முன்னேற்பாடு இல்லாமல் திடீரென இணைய வழி (ஆன்லைன்) முறைக்கு மாறியது, அடிப்படையான நலவாழ்வு-மருத்துவ பராமரிப்பு, பாதுகாப்பு, சத்துணவு ஆகியவற்றைப் பெற வாய்ப்பில்லாமல் இருப்பது முதலியவைதான் கடந்த 18 மாதங்களாக முன் வைக்கப்படுகின்ற பிரச்சினைகள். சொந்த மாநிலங்களுக்குத் திரும்பிச் செல்கின்ற வேளையிலும் கூட, மாநிலங்களுக்கு இடையே புலம்பெயரும் தொழிலாளர்கள் எண்ணற்ற இடர்ப்பாடுகளை சந்திக்கின்றனர்.

இந்த முக்கியமான வேளையில், புலம்பெயர்ந்த குழந்தைகளது வாழ்க்கையின் மீது பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள பாதிப்பை புரிந்து கொள்வதற்காகவும், குறிப்பாக கற்றல் மற்றும் அடிப்படை சேவைகளைப் பெறுவதற்கான வாய்ப்பில் ஏற்பட்டுள்ள இழப்பை கண்டறிவதற்காகவும் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து உள்ளன. ‘தமிழ்நாட்டில் புலம் பெயர்ந்த குழந்தைகள் கல்வி கற்றல் மீது கோவிட்-19 ஏற்படுத்தியுள்ள பாதிப்பு’ என்ற இந்த ஆய்வானது ஆதார வள பொருட்கள் இல்லாமை, தாய்மொழிக் கல்வி இல்லாதிருத்தல், குறிப்பிட்ட பாடத்துக்கென ஆசிரியர்கள் இல்லாமல் இருப்பது, கற்றலுக்கான சூழல் இல்லாமை என கல்வி கற்றலில் பல்வேறு பிரச்சினைகளை புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள் எதிர்கொள்கிறார்கள் என்ற உண்மை நிலவரத்தை வெளிக்காட்டியிருக்கிறது. மாநிலங்களுக்கு இடையில் புலம்பெயரும் குழந்தைகள், அருகில் அமைந்துள்ள, சமூக-கலாச்சார பின்னணிக்கு பொருத்தமான கற்பிக்கும் முறையுடன் கூடிய பொதுக் கல்வி அமைப்பில் சேருவதற்கான வாய்ப்பை பெறுவதற்கு தகுதிஉரிமை

படைத்தவர்கள். துன்பத்தில் உழலும் புலம்பெயர் சமூகங்கள் மருத்துவ-நலவாழ்வு வசதிகளையும் கண்ணியமான மருத்துவ-நலவாழ்வு பராமரிப்பையும் பெறுவதற்கு முயலும் நடத்தைகளையும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகிறது.

புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு அருகில் உள்ள பகுதிகளிலும் பணியிடங்களிலும், குறிப்பாக ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தி துறைகளில், இலவசமான, கட்டாயமான, சமத்துவமான, தரமான கிடைப்பதற்கான வாய்ப்பை உருவாக்கும் வகையில் கொள்கையில் ஆக்கபூர்வமான மாற்றங்களைக் கொண்டு வர இந்த ஆய்வு வழிவகுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். புலம்பெயர் குழந்தைகள் அனைவரும் கல்வி பெறுவதை உறுதிப்படுத்துவதற்கு அருகமைந்த பள்ளிகள் முக்கியமாகும்.

புலம்பெயர் குழந்தைகளின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு இடம் வழங்கியுள்ள மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களின் வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளிலும் புலம்பெயர் குழந்தைகளின் வாழ்க்கையிலும் நீடித்து நிலைக்கும் மாற்றங்களை உருவாக்குவதற்காக தொழில் நிறுவனங்கள், அரசு துறைகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிறருடன் ஒத்துழைப்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் அழைப்பு விடுக்கின்ற இந்த முக்கியமான ஆய்வில் ஈடுபடுத்திக் கொண்டதற்காக தமிழ்நாடு அல்லையன்ஸ் (Tamil Nadu Alliance) அமைப்பு நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**டாக்டர் பி. பாலமுருகன்,**
நிறுவன உறுப்பினர்,
தமிழ்நாடு அல்லையன்ஸ் (Tamil Nadu Alliance)

# குழந்தைகளுக்கு ஒரு நியாயமான, வளங்குன்றா எதிர்காலத்தை நோக்கி

குழந்தைகளின் நலவாழ்வு, வளர்ச்சி, கல்வி, நடத்தை, அவர்களது குடும்பங்களின் பொருளாதாரப் பாதுகாப்பு உள்பட வன்முறை, முறைதவறி நடத்தப்படுதல், புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு என எல்லாமும் கோவிட்-19 பெருந்தொற்று மற்றும் 2020 மார்ச் 22-ல் இருந்து ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் திணித்த இதுவரை கண்டிராத கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றின் விளைவாக சீர்குலைந்துவிட்டன. குாந்தைகள், வளரிளம் பருவத்தினர், பெண்கள், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், சிறுபான்மையினர் என பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய எல்லாக் குழுக்களின் மீதும் பெருந்தொற்று ஒரு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. புலம்பெயர் தொழிலாளர்களின் சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினர், அவர்களது அடிப்படை உரிமைகளுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ள நிலையில், மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் பற்றிய கடுமையான உண்மை நிலவரத்தை பெருந்தொற்றானது தனிக் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது.

2 கோடிக்கு மேற்பட்ட குழந்தைகள் வாழ்கிற தமிழ்நாட்டில், நாட்டிலேயே மிகச் சிறந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும், விரிவான மருத்துவ-நலவாழ்வு பராமரிப்பு அமைப்புகளையும் (அரசு மற்றும் தனியார்), 80.09% எழுத்தறிவும் (2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி) கொண்டுள்ளதாக பெருமைப்படும் தமிழ்நாட்டில், இதுவரை கண்டிராத வகையில் திடீரென கோவிட்-19 பெருந்தொற்று நோய் பரவியது, குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கு பேரிடர் தரும் விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது. இந்தப் பின்னணியில் குழந்தைகளின் உரிமைகளுக்கு புத்துணர்ச்சி அளிப்பதற்கும், UNCRC, 1989-ல் குறிப்பிட்டுள்ள அடிப்படை உரிமைகளை அவர்கள் பெறுவதற்கான வாய்ப்பை உறுதிப்படுத்துவதற்கும் வலுவான அவசியம் ஏற்பட்டுள்ளது.

இந்த நெருக்கடி நீடித்து புதிய வடிவங்களை எடுத்து வரும் நிலையில், சாதி, மத, பாலின அடிப்படையிலான பிரிவினைகளை ஆழப்படுத்தி வருவதால் இதுவரை கண்டிராத இந்தக் காலகட்டத்தை ஆவணப்படுத்த வேண்டிய உடனடித் தேவை ஏற்பட்டுள்ளது. கொள்கை வகுப்பதற்கு சிறந்த முறையில் தகவல் அளிப்பதற்காக களத்தில் இருந்து சான்றுகளைத் தர வேண்டிய அவசரமும் எழுந்துள்ளது. ஞனுமு வழியில் கோவிட் பாதிப்பை ஆவணப்படுத்துவதற்கான முன்முயற்சி இந்த காலகட்டத்தில் முக்கியமானது.

புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள தீய விளைவுகளை இந்த ஆய்வு தெளிவாக விளக்கியுள்ளது. புலம்பெயர் தொழிலாளர்களது குழந்தைகள் பற்றி சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வை ஆக் ஷன் எய்டு அசோசியேஷன் (ActionAid Association) பெரிதும் பாராட்டுகிறது. செங்கல் சூளைகள் மற்றும் கட்டுமானப் பணி இடங்களில் உள்ள, மாநிலங்களுக்கு இடையில் மற்றும் மாநிலத்துக்கு உள்ளே புலம்பெயர்ந்த தொழிலாளர்களது குழந்தைகளின் நிலைமையை ஆவணப்படுத்தியது தான் இந்த ஆய்வுக்கு ஆக் ஷன் எய்டு அசோசியேஷன் தந்த பங்களிப்பாகும்.

பெருந்தொற்றும், அதனால் விளைந்த பல்வேறு சிக்கல்களும் புலம்பெயர் தொழிலாளர்களது குழந்தைகளின் வாழ்க்கையில் எவ்வாறு வெளிப்பட்டுள்ளன என்பது பற்றிய நமது கூட்டுப் புரிதலுக்கு இந்த ஆய்வு மேலும் பங்களிப்பு செய்யும் என்று நாங்கள் நம்புகிறோம். ஒரு குறிப்பிட்ட வரம்புக்குள் இருந்து இந்த நெருக்கடிக்கு எங்கள் செயல்பாடுகள் மூலமாக நாங்கள் தீர்வு காண முயன்று வரும் தேவைகளைப் பற்றி இந்த ஆய்வில் கண்டறிந்தவை தகவல் அளிக்கின்றன மற்றும் எதிரொலிக்கின்றன. பல்வேறு தரப்பினர் சொல்லி வருவதை மீண்டும் வலியுறுத்தும் வகையிலும் அவற்றிலிருந்து எடுத்துக் கொண்டும் இந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பரிந்துரைகள், அமைப்பு சாரா தொழிலாளர்களின் தேவைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் அவர்களைப் பாதுகாப்பதற்கும் ஏற்ப செயலாக்கப்படுவதை நாங்களும் பார்க்க விரும்புகிறோம்.

நாம் செய்ய வேண்டிய கொள்கைத் தேர்வுகள் பற்றியும், நெருக்கடிகளின்போது நாம் பயன்படுத்த வேண்டிய வழிமுறைகள் பற்றியும், விரைவில் மீண்டு வரும் ஆற்றல் பெற்றவையாக நமது சமூகங்களை ஆக்குவதற்காக நாம் கட்டியமைத்து வலுப்படுத்த வேண்டிய நிறுவனங்கள், அமைப்புகள் குறித்தும் இந்த ஆய்வு படிப்பினைகளை உருவாக்கும் என்பது எமது தொடர்ச்சியான நம்பிக்கை. புலம்பெயர் தொழிலாளர்களது குழந்தைகளின் நலன்களை முன்னிறுத்துகின்ற, இன்னும் அதிக பொறுப்புவாய்ந்த ஒரு கொள்கை கட்டமைப்பை நோக்கி நாம் எவ்வாறு முன்னேறுவது என்பது பற்றி இந்த ஆய்வில் இருந்து பெற்ற ஆழமான புரிதலை, மக்கள் அனைவரிடமும் சம்பந்தப் பட்டவர்கள் கொண்டு செல்வார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

**எஸ்தர் மரியசெல்வம்,**
இணை இயக்குநர்,
ஆக் ஷன் எய்டு அசோசியேஷன் (ActionAid Association)

# தரவுகளை ஆய்ந்தறிந்து கொள்கை வகுத்தல் மற்றும் திட்டமிடலை நோக்கி

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்தியாவில் ஏறக்குறைய 93 மில்லியன் (9 கோடியே 30 லட்சம்) புலம் பெயர் குழந்தைகள் இருந்தனர். நாடு முழுவதிலும் புலம் பெயர்ந்தவர்களில் ஒவ்வொரு ஐந்தாவது நபரும் குழந்தை என்பதும் அதில் கண்டறியப்பட்டது. தேசிய மாதிரி சர்வே அமைப்பின் (NSSO) 64-வது சுற்று கணக்கடுப்பில் புலம்பெயர்ந்த 62.7% குடும்பங்களில் குறைந்தபட்சமாக 0-8 வயதுடைய ஒரு குழந்தையாவது இருப்பது தெரியவந்துள்ளது[1]. இந்தியாவில் குழந்தைகள் புலம்பெயர்தல் நிகழ்வு என்பது மாபெரும் அளவுக்கு இருப்பதை இந்த புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. குழந்தைகள் புலம் பெயர்தலின் நேரடி விளைவு என்பது அவர்கள் கல்வி கற்பதில் ஏற்படும் இழப்பாகும். ஏனெனில், இயல்பாக பள்ளிக்குச் செல்வது தடைப்படுவதால் அந்தக் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் சென்றடைந்த இடங்களில் அவர்கள் மீண்டும் பள்ளிக்குச் செல்ல நேர்ந்தாலும், கற்றுத் தருவதன் தரமும் கற்றுக்கொள்வதன் தரமும் பல்வேறு பிரச்சினைகளை எழுப்புகின்றன. இன்னும் மோசம் என்னவென்றால், கோவிட்-19 பெருந்தொற்று பரவலானது, ஒட்டுமொத்த குழந்தைகள் கல்வியின் மீதும் குறிப்பாக புலம்பெயர் குழந்தைகள் உள்ளிட்ட பின்தங்கிய குழுக்களை சேர்ந்த குழந்தைகளின் கல்வியின் மீதும் ஏற்படுத்தியுள்ள தீங்கு விளைவிக்கும் பாதிப்பானது நிலவரத்தை மேலும் தீவிரமடையச் செய்துள்ளது. இத்தகைய குழுக்களைச் சேர்ந்த குடும்பங்களில் நிலவும் கல்வியறிவுச் சூழலானது, புலம் பெயர் குழந்தைகளின் துன்பங்களை மேலும் அதிகரிக்கச் செய்வதால், இது கவலைக்குரிய இன்னொரு பிரச்சினையாக இருக்கிறது.

HRF அமைப்பானது, குழந்தைகளின் கல்வி உரிமையை பாதுகாக்க முயல்கிற, எதிர்காலத் தேவையை முன்னுணர்ந்து செயலாற்றுகிற அதன் செயல்திட்டத்தின் தொடர்ச்சியாக, அதனுடன் இணைந்து செயலாற்றும் அமைப்புகளுடன் சேர்ந்து கூட்டாக இந்த ஆய்வை மேற்கொண்டது பாராட்டுக்குரியது. இதற்கு, புலம்பெயர் குழந்தைகளின் கல்விக்கு என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது பற்றிய, அவர்களுக்கு எந்த அளவுக்கு கல்வி இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதைக் கண்டறிவதை மையமாகக் கொண்ட ஒரு தெளிவான புரிதல் தேவைப்படுகிறது.

[1] https://www.unicef.org/india/media/3416/file/Child-migration-India2020-policy-brief.pdf [accessed 1 October2021]

எனவேதான், இந்தியாவில் தமிழ்நாடு மாநிலத்தில் புலம்பெயர் குழந்தைகள் கல்வி கற்றல் மீது கோவிட்-19 ஏற்படுத்தியுள்ள பாதிப்பு குறித்துவே HRF அமைப்பு இந்த ஆய்வினை நடத்தியுள்ளது.

இந்த ஆய்வானது, இரண்டு காரணங்களின் அடிப்படையில் காலத்துக்குத் தேவையான, முன்னோடியான ஆய்வாகும். முதலாவது, இத்தகைய குழந்தைகளின் கல்வி மீது புலம் பெயர்தல் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை இது ஆராய்கிறது. இரண்டாவது, அவர்களது கல்வி மீது கோவி-19 ஏற்படுத்தியுள்ள பாதிப்பு குறித்து இது தனி கவனம் செலுத்துகிறது. இதுபோன்ற ஓர் ஆய்வின் பயன்பாடு என்பது சேகரிக்கப்பட்ட தரவுகள் வலுவான நம்பகத் தன்மை கொண்டுள்ளனவா என்பதை சார்ந்திருக்கிறது. அதேபோல, ஒரு கொள்கை அல்லது திட்ட முன்முயற்சி பொருத்தமாக இருக்கிறதா என்பது எந்த அடிப்படையின் மீது தரவுகளின் தரம் அமைந்திருக்கிறது என்பதற்கு நெருக்கமானது.

இந்த ஆய்வில் கண்டறியப்பட்டவை, நுண்ணிய அளவில் கல்வி சம்பந்தபட்டவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்பது மட்டும் அல்லாமல், கொள்கை வகுப்பாளர்களுக்கும் பெரும் மதிப்புள்ளதாக இருக்கும். ஏனெனில், இந்த ஆய்வானது, தரவுகள் சேகரிப்புக்காக வலுவான ஆய்வு முறைகளை பின்பற்றியிருக்கிறது. ஆன்லைன் வகுப்புகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பு, கல்வியறிவுச் சூழல், பெற்றோரின் உதவி, தாய் மொழியில் கல்வி கற்பதற்கான வாய்ப்பு, இணைப்பு முறை கற்றல் குறித்த அணுகுமுறைகள், பெருந்தொற்றும் மற்றும் பள்ளி மூடல் குறித்த அணுகுமுறைகள், குடும்பத்துக்கு ஆதரவாக இருக்க வேண்டிய தேவை, ஊட்டச் சத்துக்கான துணை உணவுகள், நிதி உதவி முதலிய வடிவங்களில் அரசாங்கத்திடம் இருந்தும் சம்பந்தப்பட்ட மற்றவர்களிடம் இருந்தும் கிடைத்த உதவி முதலிய முக்கியமான அம்சங்கள் குறித்த கேள்விகள் தரவுகள் சேகரிப்பில் இடம்பெற்றிருக்கின்றன.

மாநிலங்களுக்கு இடையே பெற்றோர்களுடன் புலம் பெயரும் குழந்தைகள், பெற்றோர்கள் உடன் வராமல் புலம் பெயர்கின்ற குழந்தைள், இதே போல மாநிலத்துக்கு உள்ளேயே புலம் பெயரும் குழந்தைகள் என வெவ்வேறு வகையான புலம் பெயர் குழந்தைகள் மாதிரி விவரம் சேகரிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். மறுபடியும் இவர்கள் பணியிடங்கள் மற்றும் தொழில் இடங்கள் சார்ந்தும் வகைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்த அணுகுமுறையானது, தரவுகள் சேகரிப்புக்கான மாதிரியை, புலம் பெயர் வகைகள் மற்றும் தொழில்கள் முழுவதையும் பிரதிபலிக்கக் கூடியதாக ஆக்கியிருக்கிறது. தரவுகள் சேகரித்தலும் பகுத்தாராய்தலும், அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட களப்பணியாளர்களையும் ஆய்வாளர்களையும் உள்ளடக்கிய பங்கேற்பாளர் குழுக்களால் செய்யப்பட்டுள்ளன. கண்டறிந்தவை வலுவாகவும், நம்பகமாகவும் இருப்பதற்கு இது வழிவகுத்துள்ளது. அந்த வகையில், புலம்பெயர் குழந்தைகளுக்கு கல்விக்கான உரிமையை அதிலும் தரமான கல்விக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்காக கொள்கை வகுப்பதற்கும், திட்டமிடலுக்கும், செயலாக்கத்துக்கும் இது பயனுள்ளதாக இருக்கும்.

**டாக்டர் எஸ்.வெங்கட்ராமன்,**
முதுநிலை ஆலோசகர், UNESCO
அறங்காவலர், HRF

# ஆய்வு சுருக்கம்

தமிழ்நாட்டில் புலம்பெயர் குழந்தைகள் கல்வி கற்றல் மீது, கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கம் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை கண்டறிந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக ஆக் ஷன் எய்டு அசோசியேஷன் (ActionAid Association), எய்ட் எட் ஆக் ஷன் (Aide et Action), அருணோதயா (Arunodhaya), மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (Human Rights Advocacy and Research Foundation), தமிழ்நாடு அல்லையன்ன்ஸ் (Tamil Nadu Alliance) ஆகிய அமைப்புகளினால் 2021 ஜனவரி முதல் 2021 அக்டோபர் வரையில் ஒட்டுமொத்தமாக நடத்தப்பட்ட ஆய்வில் கண்டறிந்தவற்றை இந்த ஆய்வறிக்கை முன்வைக்கிறது. மாநிலம்விட்டு மாநிலம் தங்கள் பெற்றோர்களுடன் புலம் பெயர்ந்த குழந்தைகள், மாநிலம் விடடு மாநிலம் குறிப்பிட்ட தொழில்களில் பணி செய்வதற்காக புலம்பெயர் குழந்தைகள், மாநிலத்துக்கு-உள்ளேயே (மாவட்டங்களுக்கு-இடையில்) குறிப்பிட்ட தொழில்களில் வேலை செய்வதற்காக தங்கள் பெற்றோர்களுடன் புலம் பெயர்ந்த குழந்தைகள் முதலிய பிரிவுகளை உள்ளடக்கியதாக இந்த ஆய்வு அமைந்துள்ளது. இந்த ஆய்வுக்கான தரவுகள் செல்போன் ஆப்-ஐ பயன்படுத்தி 2021 மார்ச் 27 முதல் 2021 ஏப்ரல் 4 வரை சேகரிக்கப்பட்டன.

கோவிட் பெருந்தொற்றானது கற்பித்தல் மற்றும் கற்றுக் கொள்ளல் நடைமுறைகளில் முழுமையான வேகமான மாற்றத்துக்கான தேவையை வலியுறுத்துகிறது. நமது பாரம்பரியப் பள்ளிகள் கிட்டத்தட்ட ஒரே இரவில் ஆன்லைன் முறையில் கல்வி கற்பதற்கு மாறிவிட்ட போதிலும், இந்த மாற்றமானது திட்டமிடாமல் செய்யப்பட்டதன் காரணமாக, கல்வி கற்பதில், குறிப்பாக புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி கற்பதில் கடுமையான இடையூறுகளை ஏற்படுத்தி உள்ளது. ஆன்லைன் வகுப்புகளில் மாணவர்களை ஈடுபடுத்தல், திட்டமிடல், செயல்படுத்தல், கற்பித்தலுக்கான ஆதார வளங்கள் இல்லாதிருத்தல், தொழில்நுட்பத்தை பெறுவதில் இடர்ப்பாடுகள் ஆகியவை, உயர் தரமான சர்வதேசப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் கூட பெரிய தடையாக உள்ளன. அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், அறிவாற்றல், ஆன்லைன் முறையில் கல்வி கற்கும் சூழலைப் பெறுவதற்கான வாய்ப்பு ஆகியவை இல்லாத நிலையில் புலம் பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இந்த மாற்றமானது கற்பனை செய்துகூட பார்க்க முடியாத விளைவுகளை ஏற்படுத்தி உள்ளது.

மிக மோசமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்திய பள்ளிக் கல்வி முறையின் ரகசியத்தை - பள்ளிக் கல்வி முறையில் துணைநிலை ஆதரவு என்பது அத்தியாவசியமான அதன் பகுதியாக இருக்கிறதே தவிர கூடுதலான விருப்பத் தேர்வுக்குரியதாக இல்லை என்ற ரகசியத்தை - பொது முடக்கம் தனி கவனத்துக்கு கொண்டு வந்துள்ளது. வசதி படைத்தவர்களின் குழந்தைகள் பள்ளி நேரத்துக்கு முன்னும் பின்னும் டியூஷனுக்கு செல்கிறார்கள், ஆனால் ஏழைக் குழந்தைகளோ, தங்கள் குடும்பங்களை, பெரும்பாலும் தங்கள் தாயார்களையே நம்பி இருக்கிறார்கள். புலம்பெயர் குடும்பங்களில் சிறுவர்களும், ஆடவர்களும் கூட உதவி செய்கிறார்கள். குடும்பங்களில் பள்ளிப் படிப்பு இல்லாதிருப்பது கற்றல் விளைவுகளின் மீது பாதிப்பு ஏற்படுத்துகிறது. புலம் பெயர் குழந்தைகளுக்காக மட்டும் அல்லாமல் பொதுவாகவே பள்ளிக் கல்வி முறையில் இது தீர்வு காண வேண்டிய அவசியமுள்ள இடைவெளி என்றாலும் இந்த ஆய்வின் எல்லைக்கு இது அப்பாற்பட்டது.

ஆய்வுக் கேள்விகளுக்கு பதிலளித்த 466 பேரில், 221 பேர் தங்கள் பெற்றோர்களுடன் மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகள். குறி சொல்பவர்கள், பொம்மை தயாரிப்பவர்கள் போன்ற நாடோடிகள் இருந்த போதிலும், முதன்மையாக இந்தக் குடும்பங்கள் செங்கல் சூளைகள், நூற்பு ஆலைகள், ஆடை தயாரிப்பு நிறுவனங்கள், கட்டுமானம் மற்றும் அது சார்ந்த துறைகளில் வேலை செய்வதற்காக புலம் பெயர்ந்தவை. கூலி வேலை செய்பவர்கள் வாழ்வாதார வாய்ப்புகள் எங்கே இருக்கிறதோ அங்கே இடம் பெயர்வார்கள், குழந்தைகளும் அவர்களோடு இடம் பெயர்வார்கள்.

## கண்டறிந்தவை

பெருந்தொற்று காரணமாக பள்ளிகள் மூடப்பட்டபோது, 2009-ம் ஆண்டின் கல்வி உரிமைச் சட்டமானது (RTE), புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளை பாதுகாக்கத் தவறிவிட்டது. நவீன தகவல், தொடர்பு தொழில்நுட்ப வாய்ப்புகளைப் பெறுவதில் நிலவும் இடைவெளி, தனிச் சலுகை, அணுகும் வாய்ப்புகள் ஆகியவற்றின் விளைவுகளை பெருந்தொற்று இன்னும் அதிகப்படுத்திவிட்டது. ‘இலவச, கட்டாயக் கல்வி’ என்பது கானல் நீராகிவிட்டது.

'ஒரு குழந்தை ஒரு பள்ளியில் இருந்து இன்னொரு பள்ளிக்கு மாற வேண்டிய தேவை இருந்தால், வேறு எந்தப் பள்ளிக்கு வேண்டுமானாலும் இடமாற்றம் கோருவதற்கு அந்தக் குழந்தைக்கு உரிமை உண்டு' என்ற விதி சுகூநு சட்டம், 2009-ல் அடங்கியிருந்த போதிலும், புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு இந்த வாய்ப்பு கிடைப்பது இல்லை என்பதுதான் உண்மை. பொதுவாக புலம்பெயர் தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்துடன் வேலை செய்யும் இடத்தில் குறிப்பிட்ட காலம் வரையில், மூன்று மாதங்களில் இருந்து ஆறு மாதங்கள் வரை, தங்கியிருப்பார்கள், பின்னர் வேறு இடத்துக்குச் செல்வார்கள். இந்தக் குழந்தைகளில் சிலர் அவர்களது சொந்தக் கிராமத்துப் பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்த போதிலும், கல்வி கற்பதற்கான வாய்ப்பு இல்லாமல், நீண்ட காலம் பள்ளிக்குச் செல்லாமல், கடைசியில் பள்ளியிலிருந்து இடையிலேயே நின்றுவிடுகிறார்கள்.

கேள்விகளுக்கு பதில் அளித்த 147 புலம்பெயர் குழந்தைகளில், 97 பேர் (65.9 %) பொது முடக்க காலத்தில், ஆன்லைன் வகுப்புகள் எதிலும் அவர்கள் பங்கேற்கவில்லை என்று தெரிவித்தார்கள். ஆண்ட்ராய்டு செல்போன்கள் இல்லாதகாரணத்தால் பெரும் பகுதியினர் ஆன்லைன் வகுப்புகளில் கலந்துகொள்ள முடியவில்லை. 42% பேருக்கு வீட்டில் லேப்டாப் அல்லது டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்கள் இல்லை. 39% பேருக்கு டி.வி. இல்லை. பிரீபெய்டு செல்போனுக்கு ரீசார்ஜ் செய்ய பணம் இல்லாத காரணத்தால் 31% பேர் ஆன்லைன் வகுப்புகளில் பங்கேற்கவில்லை.

மாநிலத்துக்கு-உள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளைக் காட்டிலும் மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த குழந்தைகள், பொதுமுடக்கம் மற்றும் பள்ளி மூடல் காலத்தில், கல்வி கற்பதற்கு அதிக வாய்ப்புகளைப் பெற்றிருந்தனர் என்பது கவனத்தை ஈர்ப்பதாகும். மாநிலத்துக்கு-உள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளில் 41% பேருக்கு பள்ளி மூடல் காலத்தில் கல்வி கற்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. அதே காலத்தில், மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த குழந்தைகளில் 28.7% பேருக்கு மட்டுமே கல்வி கற்பதற்கு வாய்ப்பு இருந்தது. மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த குழந்தைகள், அவர்களுக்கான சொந்த மாற்று ஏற்பாட்டை செய்துகொண்டிருந்த காரணத்தால் அந்த அளவுக்கு அவர்கள் அரசு அமைப்பை சார்ந்திருக்கவில்லை என்பதால் அது சாத்தியமாகி இருக்கும்.

மாநிலம் விட்டு மாநிலம் பெற்றோர்களுடன் புலம் பெயர்ந்த 221 குழந்தைகளில் 74 பேர் (33.4%) ஆண்டுக்கு ஒரு தடவை புலம் பெயர்கிறார்கள் என்பதையும், 36 பேர் (16.2%) ஆண்டுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட முறை புலம் பெயர்கிறார்கள் என்பதையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தி உள்ளது. இவர்களில் 46 (20.8%) குழந்தைகள், தங்களது பெற்றோர்கள் வேலைக் காலத்தை முடிக்கும் வரையில், 6 மாதங்கள் மட்டுமே தங்குவதாக தெரிவித்தனர். புலம் பெயர்தலுக்கும் பள்ளிக் கல்விக்கான கல்வி ஆண்டு காலண்டருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தொழில் தேவைகளையும், வாழ்வாதார வாய்ப்புக்கள் கிடைக்கின்ற இடங்களையும் பொருத்து புலம் பெயர்தல் எந்த நேரத்திலும் நிகழலாம். இந்த தடைகள் எல்லாம் பல்வேறு சவால்களுக்கு வழி வகுக்கின்றன. இதில் முக்கியமான சவால், பள்ளியில் இடைக் காலத்தில் ஒரு குழந்தையை சேர்ப்பதாகும்.

இந்த ஆய்வில் அடங்கியுள்ள, தமிழ்நாட்டில் இருக்கின்ற, மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த 221 குழந்தைகளில், 176 பேர் (79%) அவர்களது தந்தையர்களுடன் தங்கியிருக்கின்றனர். இந்த தந்தையர்களில் 68 பேர் (38.6%) எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், 39 பேர் (22%) ஆரம்பக் கல்வியை மட்டுமே பூர்த்தி செய்தவர்கள். இவர்களில் 0.5% மட்டுமே பட்டதாரிகள். 161 (72%) குழந்தைகளில் 14 (7.9%) பேர் மட்டுமே தங்கள் தாயார்களுடன் தங்கியிருக்கிறார்கள். இந்தத் தாயார்களில் 76 பேருக்கு (47%) முறையான கல்வியறிவு எதுவும் இல்லை. இந்தியாவில் ‘கல்விக்கான உரிமை’ என்பது, அதிகபட்சமாக, பள்ளிக் கல்வியை மட்டுமே வழங்குகிறது. மிகவும் குறைந்தபட்சமான இந்த பள்ளிக் கல்விக்கும் கூட டியூஷன் என்ற துணைநிலை ஆதரவு (குடும்பத்தால் இதை தாங்க முடியும் என்றால்) வேண்டியிருக்கிறது, அல்லது, பெரும்பாலும் இருப்பதைப் போல, தாயார்தான் வீட்டுப் பாடத்துக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும். ‘வீட்டுப் பாடத்தில்’ குடும்பத்தின் உதவி என்பது கல்வி அமைப்பைச் சேர்ந்த வடிவமைப்பு அம்சமாக உள்ளது. குடும்பம் உதவி செய்யவில்லை என்றால் அமைப்பு தோல்வி அடைகிறது. 38.6% தந்தையர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், 22% பேர் ஆரம்பக் கல்வியை மட்டுமே பூர்த்தி செய்தவர்கள் (வெறும் 0.5% தந்தையர்கள் மட்டுமே பட்டதாரிகள்), 47% தாயார்களுக்கு முறையான கல்வியறிவு எதுவும் இல்லை என்ற நிலையில், குழந்தைகளுக்கு எத்தகைய தீங்கு விளைவிக்கும் பாதிப்பு ஏற்படும் என்பது முன்கூட்டியே எல்லொருக்கும் தெரிந்த ஒன்றுதான்.

இந்தியா பல மொழிகள் பேசும் ஒரு நாடு என்பதால், பெரும்பகுதி அரசு பள்ளிகளில் மாநில மொழிதான் பயிற்று மொழியாகும் தமிழ்நாட்டில் தமிழ். இந்த ஆய்வில், கேள்விகளுக்கு பதில் அளித்த 419 பேரில் 288 பேர் (69%) அரசு பள்ளிகளில் படித்துக் கொண்டிருந்தவர்கள். மாநிலங்களுக்கு-இடையே புலம்பெயர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு பயிற்று மொழி என்பது ஒரு தடையாகவே இருக்கிறது. தங்கள் தாய்மொழியில் கற்றுத் தரும் மொழி ஆசிரியர்களை பெறும் வாய்ப்பு தங்களுக்கு கிடைத்திருப்பதாக புலம்பெயர்ந்த குழந்தைகள் 101 பேர் (46%) தெரிவித்தனர். இறுதியில் இந்த சவால்கள் எல்லாம் சமுதாயத்தின் இந்தப் பிரிவைப் பொறுத்தவரையில் RTE சட்டம் 2009ஐ தோல்வி அடையச் செய்வதில்தான் முடிகிறது.

புலம்பெயர் தொழிலாளர்கள் வேலை செய்யும் இடங்களிலேயே கல்வி அளித்தல் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண சில சமூக அமைப்புகள் முயன்று வருகின்ற போதிலும், வேலை செய்யும் இடங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இருக்க வேண்டியது மிகவும் அடிப்படையானது. பள்ளிகள் மூடப்பட்டதன் காரணமாக, தொழில் பகுதியில் அமைந்துள்ள சிமென்ட் தரையும் ஆஸ்பெஸ்டாஸ் மேற்கூரையும் கொண்ட ஒரு சிறிய அறையில்தான் பெரும்பாலும குழந்தைகள் இருக்கிறார்கள். குழந்தைகளுக்கு குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகள் கிடைப்பதில்லை. ஆகவே, இந்த திட்டங்களின் மூலமாக வழங்கப்படும் கல்வியானது, ஒரு அடிப்படையான இணைப்பு வகுப்பாக மட்டுமே இருக்க முடியுமே தவிர பள்ளியில் அளிக்கப்படும் முறையான கல்விக்கு அது மாற்றாக இருக்க முடியாது.

பெருந்தொற்றின்போது, புலம்பெயர் தொழிலாளர்களது குழந்தைகளின் நல வாழ்வுக்கும், பாதுகாப்புக்கும் கூட அதிக ஆபத்து இருந்திருக்கிறது. ஆய்வுக் கேள்விகளுக்கு பதில் அளித்த 466 பேரில், 49% பேர் மட்டுமே வெளியில் போகும்போது முகக் கவசம் அணிவதாக குறிப்பிட்டனர். 42% பேர் மட்டுமே கைகளை சோப்பு/சானிட்டசைர் போட்டு கழுவுவதாகத் தெரிவித்தனர். 37% பேர் மட்டுமே வெளியில் செல்லும்போது தனிமனித இடைவெளியைக் கடைப்பிடிப்பதாக கூறினர்.

தங்கள் தாய் மொழியில் கற்றுத் தரும் மொழி ஆசிரியர்கள் மற்றும் பொருட்கள் இல்லாதிருந்த போதிலும், ஒத்த வயதினருடன் கலந்துறவாடுவதற்கும் ஆதரவை

நாடுவதற்கும், நலவாழ்வு மற்றும் நோய்த்தடுப்பு சேவைகளுக்கான வாய்ப்புகளைப் பெறுவதற்கும், சத்துணவுக்கும், சிறந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கும் பெரும்பான்மை புலம்பெயர் குழந்தைகள் பள்ளிக் கூடங்களையே சார்ந்திருக்கிறார்கள். ஓரளவுக்காவது எதையெல்லாம் பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருந்ததோ அவையெல்லாம் பள்ளிகள் மூடப்பட்டதால் தடைப்பட்டுப் போயின. மாநிலத்துக்கு உள்ளேயே (மாவட்டங்களுக்கு இடையில்) புலம் பெயர்ந்தவர்களின் குழந்தைகளுக்கு இந்த பாதிப்பு இன்னும் அதிகம்.

ஒட்டுமொத்தமாக சேர்த்துப் பார்க்கையில், 'ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும், சட்டத்தின் மூலாக அரசு தீர்மானிக்கும் முறையில், இலவச, கட்டாயக் கல்வியை அரசு வழங்கும்' என சந்தேகத்துக்கு இடமில்லாமல் அரசமைப்புச் சட்டத்தின் 21A பிரிவில் குறிப்பிட்டுள்ள பொறுப்புகளையும், கல்விக்கான உரிமை சட்டம், 2009-ஐயும் நிறைவேற்றுவதில் அரசின் தோல்வியானது, 'ஆறு வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் இடையிலான அவரது குழந்தைக்கு அல்லது அவரது பாதுகாப்பில் உள்ள குழந்தைக்கு கல்வி வாய்ப்புகளை பெற்றவர் அல்லது காப்பாளர் வழங்க வேண்டும்' என அரசமைப்புச் சட்டத்தின் 51A(k) பிரிவு கோரியிருப்பதை பெற்றோர் அல்லது காப்பாளர் நிறைவேற்ற முடியாதபடி ஆக்கியிருக்கிறது.

எவ்வளவு நீண்டகாலம் பள்ளிகள் மூடப்பட்டிருக்கின்றனவோ அவ்வளவு நீண்ட காலத்துக்கு, குழந்தைப் பருவத்தின் இந்த முக்கியமான அம்சங்களில் இருந்து புலம் பெயர் குழந்தைகள் துண்டிக்கப்பட்டிருப்பார்கள். ஒரு மணி நேரத்துக்கு மேல் உட்கார முடியாத நெரிசலான இடத்தில் தொடர்ந்து அடைத்து வைக்கப் பட்டிருப்பார்கள். கற்றலில் கடுமையான இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை ஒப்புக்கொள்வதும், கவலைக்குரிய பகுதிகளை அறிவியல் அளவுகோல்களை பயன்படுத்துவதும், தீர்வுகளை வடிவமைப்பதும், புலம் பெயர் குழந்தைகளின் தேவைகளுக்கு ஏற்ற திட்டவட்டமான நீண்ட கால திட்டத்தை தயாரிப்பதும்தான் முன்னேற்றத்துக்கான வழியாகும்.

## பரிந்துரைகள்

புலம் பெயர்தல் அதிகரித்து வருகிறது, புலம் பெயர்பவர்களின் எண்ணிக்கையும், பல்வகைத்தன்மையும் முன்னறிதற்குரிய வருங்காலத்தில் தொடர்ந்து அதிகரிக்கவே செய்யும். குறுகிய கால மற்றும் நீண்ட காலத் தேவைகளை மனதில் கொண்டே பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிற இந்த நெருக்கடியானது நீண்ட காலத்துக்குப் பிறகு வந்திருக்கிறது. குழந்தைகளுக்கு மிகவும் பயனுள்ளவற்றை உறுதிப்படுத்துவதற்காக, உள்ளடங்கியிருக்கும் காரணங்களுக்கு தீர்வு காண வேண்டியது அவசியம்.

1. பல்வேறு- மாநிலங்களின் அரசுகளுக்கு-இடையிலான அணுகுமுறையே நிலைத்த தீர்வுக்கு வழி. குழந்தைகளுக்கு மிகவும் பயனுள்ளவற்றை உறுதிப்படுத்துவதற்காக சொந்த மாநில அரசும் பிளைப்புத் தேடி சென்றுள்ள மாநில அரசும் நல்லிணக்கத்துடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டியது அவசியம். தரவுகள் சேகரிப்பில் இருந்து பள்ளியில் கல்வி கற்றல் வரை, தகுதிஉரிமைகள், பாடப் புத்தகங்கள், பாதுகாப்பு என பல்வேறு நடவடிக்கைகளை ஒரு மாநிலம் மட்டும் அல்லது அடுத்த மாநிலத்தின் உதவி இல்லாமல் செய்ய முடியாது. சென்றுள்ள இடத்தில் கல்வி, குழந்தைகள் உரிமை, சத்துணவு ஆகியவற்றுக்கான ஒருங்கிணைப்புக்காக மாநில அரசுகளின் கல்வி, தொழிலாளர், நலவாழ்வு, மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு ஆகிய துறைகளுக்கு இடையே கூட்டு முயற்சி அவசியம்.

   கல்வி தொடர்பான அனைத்து சட்ட விதிகள் மற்றும் அரசமைப்பு சட்ட விதிகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு - இடையில் பள்ளியில் கல்வி அளிப்பதற்கு நிகரான அமைப்புகள், புலம்பெயர் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது தடைப்படுவதை தடுப்பதற்கான மாநிலங்களுக்கு-இடையிலான நடைமுறைகள், மாநிலங்களுக்கு இடையே மற்றும் மாநிலத்துக்கு உள்ளே அரசுகள் மற்றும் துறைகளுக்கு மத்தியில் தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை வலுப்படுத்தி, நெறிப்படுத்த வேண்டும். கல்விக்கான உரிமையை, எல்லாக் குழந்தைகளுக்கும் அவர்கள் வாழும் இடம் எதுவாக இருந்தபோதிலும், உறுதி செய்ய வேண்டும். பயனுள்ள

விளைவுகளுக்கு ஒத்திசைவு முன்தேவையாகும். இதற்கு அரசியல் உறுதியும், நிர்வாக ரீதியிலான அறிவுக் கூர்மையும் தேவை. இந்த ஆய்வுக்குரிய மாநிலங்களில் இந்த இரண்டுக்குமே பற்றாக்குறை இல்லை.

2. அமைப்புகளுக்கு இடையிலான இணைப்புகள்: புலம்பெயர் தொழிலாளர்களை குடும்ப விவரங்களுடன், குறிப்பாக குழந்தைகள் பற்றிய தகவலுடன் பதிவு செய்வதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் புலம்பெயர் தொழிலாளர்கள் நல வாரியங்கள் அமைக்கப்பட வேண்டும். இவை மற்ற மாநிலங்களில் உள்ள இதே போன்ற அமைப்புகளுடன் ஒருங்கிணைப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். புலம்பெயர் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டை ஒரு திட்டவட்டமான பொறுப்பாக, குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்புக்கான மாநில ஆணையங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். புலம் பெயர் குழந்தைகள் அனைவருக்கும் சட்டப்படியான தரங்கள் பாரமரிக்கப் படுகின்றனவா என்பதை அவர்களை விருந்தினராக ஏற்றுக் கொண்டுள்ள மாநிலம் முறையாக கண்காணிக்க வேண்டும்.

3. திட்டமிட்ட புலம்பெயர்தல் என்பது நெறியாக மாற வேண்டும். இடர்ப்பாடுகள் காரணமாக புலம்பெயர்தலை தடுக்க வேண்டியது அவசியம். பிளைப்பு தேடிச் சென்றுள்ள மாநிலமும், சொந்த மாநிலமும் புலம்பெயர் குழந்தைகள் பற்றிய தகவல்களை தரவுதளத்தில் சேகரித்து பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் தங்களது உரிமைகள், தகுதிகள், சமூகப் பாதுகாப்பு விதிகள் பற்றி புலம் பெயர்ந்தவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல் மற்றும் பள்ளிகள், அந்தந்தப் பகுதிகளில் புலம்பெயர்வோருக்கான ஆதரவு அமைப்புகள், சமூக அமைப்புகள் பற்றிய தரவுதளம் அமைத்தல் உள்ளிட்ட - தகுந்த தயாரிப்புகளை, புலம்பெயர்வோர் தங்களது பயணத்தை மேற்கொள்வதற்கு முன்பாக இரு தரப்புகளிலும் செய்ய முடியும்.

4. நடவடிக்கை எடுக்கத் தகுந்த தரவுகளை சேகரிக்கவும்: புறப்படும் இடத்திலும் சென்று சேரும் இடத்திலும் குழந்தைகள் புலம்பெயர்தல் குறித்து ஆய்ந்தறிய வேண்டும். புலம் பெயர்பவர்கள், பணியிடங்கள், மாநிலங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு ஆகியவை குறித்த துல்லியமான தகவல்களை

அடிப்படையாகக் கொண்டு, கண்டறியப்பட்ட குறிப்பிடத்தக்க சொந்த மாநிலம் மற்றும் விருந்தினர்களாக ஏற்றுக் கொள்ளும் மாநிலம் முழுவதும் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குழந்தைகள் பற்றி அரசாங்கம் விரிவான வரைபடம் தயாரிக்க வேண்டும். பெற்றோர்களுடன் உள்ள குழந்தைகள் புலம்பெயர் குழந்தைகளாக கணக்கிடப்பட வேண்டும். உழைப்புக்காக குழந்தைகள் (18 வயதுக்கு கீழுள்ளவர்கள்) தனியாக புலம்பெயர்தல் ஆட்கடத்தலாக கருதப்பட வேண்டும். கல்வித் துறை நடத்தும் ஆய்வுகளில், பள்ளிக்கே போகாத மற்றும் பள்ளியில் இருந்து இடைநின்ற குழந்தைகள் பற்றிய தரவுகள் சேகரிக்கப்படுவதோடு, அவர்களை பள்ளிக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பள்ளிகளில் தாய் மொழியிலேயே கற்றுத் தருவதை உறுதிப்படுத்துவதற்கு, தரவுகளை பயன்படுத்திக் கொண்டு சொந்த மாநிலங்கள் நடவடிக்கை எடுக்கத் தொடங்க வேண்டும். சேகரிக்கப்பட்ட தரவுகள், புலம் பெயர்ந்தவர்களுக்கு சிறப்பு தகுதி உரிமைகளை வழங்குவதற்கும், கல்வியில் சம வாய்ப்பு அளிப்பதற்குமானவை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். வேறு எந்த நோக்கத்துக்காகவும் இந்தத் தரவுகளை, நேரடியாகவோ மறைமுகமாகவோ பயன்படுத்துவதை, சந்தேகத்துக்கு இடமில்லாமல் தடை செய்ய வேண்டும்.

5. பொது விநியோக அமைப்பு (PDS), ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம் (ICDS), நலவாழ்வு, காப்பீடு, தாய்மொழியில் பள்ளியில் கல்வி கற்பித்தல் ஆகிய தகுதிஉரிமைகளை இடம் மாற்றிக்கொள்ளும் வசதி வேண்டும். இடைத் தரகர்களின் வேலைகளுக்கு இடமில்லாமல், புலம்பெயர்ந்தவர்களே மேற்கொள்ளும் வகையில், மாநிலங்களுக்கு இடையே இந்தத் தகுதிஉரிமைகளை இடம் மாற்றிக் கொள்வதற்கு வழிகோலும் வகையில் எளிதான நடைமுறைகளை உருவாக்குதல்.

6. சொல்லிலும் செயலிலும் கல்விக்கான உரிமையை உறுதி செய்தல் என்பது பெருமளவு மிக முக்கியமான இடைவெளியாக கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தொழிலாளர்களின் வசிப்பிடத்துக்கு அல்லது பணியிடத்துக்கு அருகில், தாய் மொழியை பயிற்று மொழியாகக் கொண்ட பள்ளிகளை திறக்க வேண்டும். புலம்பெயர் குழந்தைகளை கல்விக்கான உரிமை சட்டத்தின் வரம்புக்குள்

கொண்டுவருவதற்காக, அவர்களது சிறப்புத் தேவைகளை நிறைவேற்ற உதவும் வழிவகைகளுடன், சிறப்பு விதிகள், நடைமுறைகள், வழிகாட்டி நெறிகளை வகுக்க வேண்டும். கற்றலுக்கான உதவிப் பொருட்கள் கிடைப்பது மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதால், அவை குறித்த காலத்தில் வழங்கப்பட வேண்டும்.

7. பள்ளிகள் திறப்புக்கு தயாராக வேண்டும்: ஏற்கெனவே வலுவிழந்துள்ள கற்றல் தளமானது மேலும் வலுவிழக்கும். சில சமூக திறன்களையும், கற்றலுக்கான திறனையும் பெறுவதற்கு ஆண்டுகள் ஆகலாம். போதிய விவரங்களை சேகரிக்காமல் துவங்குவது நிலவரத்தை கடுமையாக்குவதுடன் குழந்தைகளை மேலும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கும். கோவிட் பெருந்தொற்றுக்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடுகையில் கல்வி கற்றுக் கொள்வதில் கணிசமான இழப்பு ஏற்பட்டுள்ளது. மீண்டும் துவங்குவதற்கு முன்பாக கற்றல் குறித்து மதிப்பீடு செய்வதும், கற்றலின் விளைவுகள் குறித்து தொடர்ந்து குறிப்பிட்ட கால இடைவெளியில் தரவுகள் சேகரிப்பதும், மீட்சிக்கான முயற்சியில் தனி கவனம் செலுத்துவதற்கு பெரும் உதவியாக இருக்கும்.

8. அடிப்படைக் கட்டமைப்பு: குடியிருப்புகளுக்கும், செங்கல் சூளைகள் போன்ற வேலை இடங்களுக்கும், வசிப்பிடமாகவும் உள்ள ரெடிமேட் ஆடைகள் தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கும் அருகில், புலம்பெயர் குழந்தைகளின் தாய்மொழியில் பயிற்றுவிக்கிற, பதிவு செய்யப்பட்ட முழுமையாக செயல்படக்கூடிய பள்ளிகள் அமைக்கப்பட வேண்டும். நலவாழ்வு மற்றும் துப்புரவுத் தேவைகளுக்கு ஏற்ப பள்ளியின் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்த வேண்டியது அவசியம். வணிகரீதியில் வெற்றிகரமாக இருக்காது என்ற போதிலும், இதில் கல்வி மற்றும் தகவல்தொடர்பு கட்டமைப்புக்கான வழி வகையும் இதில் அடங்கும். மருத்துவ மற்றும் துப்புரவுத் தேவைகளுக்கு உகந்த வகையில் புலம்பெயர்ந்தவர்களுக்கான வீட்டு வசதி போன்ற மற்றவையும் இணையான முக்கியத்துவம் உடையவை. புலம் பெயர் குழந்தைகள் படிக்கின்ற, குறிப்பிட்ட காலம் மட்டுமே செயல்படும் பள்ளிகள், இடைவழிப் பள்ளிகள் உள்ளிட்ட பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்புகளில் பாதுகாப்பான பொழுதுபோக்கு வசதிகளும், விளையாட்டுத் திடல்களும அடங்கியிருக்க

வேண்டும். பள்ளிகள் மூடப்பட்டிருந்தாலும், கற்பித்தலுக்கும் படிப்பதற்குமான பொருட்கள், இயன்றவரையில் எல்லா நேரமும் கிடைக்க வேண்டும். பள்ளி நேரத்துக்குப் பிறகும் கூட நூலக மற்றும் வாசிப்பு அறைகள் வசதி கிடைக்க வேண்டும்.

9. கற்பித்தல் மற்றும் சமூக உளவியல் திறன்கள்: பல குழந்தைகள் ஆன்லைன் கல்வி வாய்ப்பை பயன்படுத்தாத நிலையில், சம வயதினரோடு கலந்துறவாடுவதற்கான வாய்ப்பு, குழந்தைகள் பள்ளிக்குத் திரும்பி வருவதற்கு பெரிதும் ஊக்கம் அளிப்பதாக இருக்கும். வகுப்பறைக்கு குழந்தைகளை மகிழ்ச்சியுடன் திரும்பச் செய்வதற்கு மீண்டும் பெரும் உற்சாகத்துடன் கற்றுக் கொள்வதற்கு வேறு வகையான திறன்கள், மனநிலை, கற்பித்தல் முறைகள் குறிப்பாக உயர் வகுப்புகளுக்கு தேவைப்படுகின்றன. மனக்கவலை, பாலியல் வன்முறை மற்றும் இதர வன்முறைகளை அனுபவித்த குழந்தைகளின் தேவைகளை நிறைவேற்ற ஆசிரியர்களுக்கு கற்பிக்கும் திறனும், சமூக உளவியல் திறனும் தேவை. ஆசிரியர்கள் இந்தத் திறன்களை மாணவர்களுக்கு சொல்லித் தரவேண்டியது அவசியம், அப்போதுதான் குழந்தைகள் தங்களது வழக்கத்துக்கு மாறான அனுபவத்தை எதிர்கொள்ளவும், எதிர்காலத்துக்கு தயாராகவும் முடியும். ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாக வீட்டிலேயே இருக்கும் குழந்தைகள் கல்வி கற்பதற்கு உதவும் திறன்களுடன், கூடுதலாக இந்தத் திறன்களும் தேவை. 'வயதுக்கு பொருத்தமான' என்பதை மறு வரையறை செய்ய வேண்டியது அவசியம்.

10. சம்பந்தப்பட்ட-பல தரப்பினருடனும் அரசு, சமூக அமைப்புகள், தொழில்துறையினர் கூட்டாக செயலாற்றுதல். இப்போதுள்ள பிரச்சினை மிகப்பெரியதாகவும் பதற்றத்துக்கு உரியதாகவும் இருப்பதால், புறப்படும் பகுதிகள் மற்றும் சென்று சேரும் பகுதிகள் இரண்டிலும் சமுதாயம் முழுவதுக்குமான ஓர் அணுகுமுறையை உருவாக்க வேண்டியதும், சமூக அமைப்புகள் மற்றும் சமுதாய நிறுவனங்களுடன் முறையாக இணைந்து பணியாற்ற வேண்டியதும் அரசுக்கு அவசியமாகும். எதிர்காலத்தில் எந்த இடையூறுகள் வந்தாலும், தடங்கல் இல்லாமல் கல்வி கற்பதை இது மட்டுமே

உறுதிப்படுத்த இயலும். புலம்பெயர் தொழிலாளர்களை கணிசமான எண்ணிக்கையில் வேலையில் அமர்த்தியிருக்கிற துறைகளில் உள்ள MSME மற்றும் SMSE தொழில் நிறுவனங்களின் அமைப்புகளுடன் அரசு தொடர்பு கொண்டு விவாதிக்க வேண்டும். புலம்பெயர் குழந்தைகளின் கல்வியில் எதிர்காலத்தில் இடையூறுகள் ஏற்படாமல் தடுப்பதற்காக வலுவான அமைப்புகள் ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்காக, சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரை உள்ளடக்கிய அமைப்புகளை அரசு அமைக்க வேண்டும். இவ்வாறு கல்வி கற்பதற்கு ஆதரவாக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை இயன்ற அளவுக்கு விரைவாக ஏற்படுத்த வேண்டும்.

# *பின்னணி*

## 1. பின்னணி

கோவிட்-19[2] பெருந்தொற்றின் காரணமாக 2020 மார்ச் 20-ல் இருந்து பல்வேறு கால அளவுகளுக்கு அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கங்கள் 2021 மே வரையில் தொடர்ந்தது. குழந்தைகள் கல்வி கற்றல் மீது இது ஏற்படுத்திய தீங்கான பாதிப்பு இதன் விளைவுகளில் ஒன்றாகும். இந்தியாவில் உள்ள குழந்தைகள் 6-14 வயது வரை 'கல்விக்கான உரிமை'யை பெற்றிருந்தபோதிலும், இந்த நடைமுறையில் எங்கேயோ 'கல்வி' என்பது 'பள்ளியில் பெறும் கல்வி' ஆக மாறி பின்னர் 'பள்ளியில் பெறும் கல்வி' என்பது 'எப்படியோ பாடத் திட்டத்தை பூர்த்தி செய்வதாக' மாறிவிட்டது. பெருந்தொற்று தொடர்பான பொதுமுடக்கங்கள் காரணமாக இதுவும் கூட நடக்கவில்லை.

சமூக ரீதியில் ஒதுக்கப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த குழந்தைகளை பொது முடக்கங்கள் (இன்னொரு பெயரில் ஊரடங்குகள்) சமமற்ற முறையில் பாதித்திருக்கிறது. பள்ளிக்குச் செல்லாமல் இருக்கும்போது - ஆண்டு விடுமுறைகள் போன்ற அட்டவணைப் படியான இடைவெளிகளின்போது கூட - கல்வி கற்பதில் இந்தக் குழந்தைகள் பின்தங்க நேரிடுகிறது என்பதை பல்வேறு ஆய்வுகள் காட்டுகின்றன.

பாதுகாப்பு காரணங்களுக்காக, 2020 மார்ச் முதல் 2021 ஜூன் வரையில் (இதை எழுதும் நேரத்தில்) பள்ளிகள் மூடப்பட்டிருந்தன. முன்னறியக்கூடிய வருங்காலத்திலும்பள்ளிகள் மூடப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. இந்த காலகட்டமானது ஏற்கெனவே மூன்று கல்வி ஆண்டுகளுக்கு நீண்டுவிட்டது. 2019-2020 கல்வி ஆண்டு முடிவதற்கு முன்பாகவே பள்ளிகள் மூடப்பட்டன. இறுதித் தேர்வுகள் நடத்தப்படவில்லை. 2020-21 கல்வி ஆண்டு முழுவதும் அவை மூடப்பட்டிருந்தன. 2021-2022 கல்வி ஆண்டிலும் அவை சிறிது காலம் மீண்டும் திறக்கப்படாது. கலப்பு முறை கற்றல், இணைப்பு முறை கற்றல் ஆகிய சொற்கள் விவாதிக்கப்பட்டு வரும் நிலையில், பள்ளிகள் எப்போது திறக்கப்படும், பெருந்தொற்றுக்கு முந்தைய என்ற சொல்லின் உணர்வுக்கு ஏற்ப செயல்படும் என்பது தெளிவாகவில்லை.

---

[2] Severe acute respiratory syndrome coronavirus 2, SARS-CoV-2, popularly 2019 novel coronavirus or, in short,Covid-19.

பள்ளிகள் மூடப்பட்டது பயனுள்ளதா அல்லது அதன் விளைவுகள் பெருந்தொற்றினால் ஏற்படக்கூடிய பாதிப்பைக் காட்டிலும் மோசமானதா என்பது பற்றி வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. உலகளாவிய அளவில் பெருந்தொற்றின் முதல் அலையானது பெருமளவுக்கு குழந்தைகளை பாதிக்காமல் விட்டுவிட்டது. பள்ளிகள் மூடல் என்பது ஒருபுறம் வைரஸ் தொற்றில் இருந்து குழந்தைகளையும் ஆசிரியர்களையும் பாதுகாப்பதில் பயனுள்ளதாக இருக்கிறது எனக் கருதப்படுகிறது. மறுபுறம் குழந்தைகள் கல்வி கற்றுக் கொள்ளும் ஆற்றலில் பெரும் இடையூறு ஏற்படுத்தி இருக்கிறது. பள்ளி மூடல் காரணமாக அவர்கள் கல்வி கற்றுக் கொள்ளும் ஒரு பாணியை இழந்திருக்கின்றனர்.

இத்தகைய கல்வி கற்றல் இழப்பை மதிப்பிட வேண்டியது முக்கியமானது. ஏனெனில் இது மாணவர்களின் எதிர்கால வாய்ப்புகள் மீது பலவகையான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. பள்ளி என்பது கல்வி கற்றுக் கொள்வதற்கான இடம் மட்டுமல்ல. குழந்தைகளது வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் குறிப்பாக சமூகமயமாக்கலிலும், வாழ்நாள் முழுவதுக்குமான உறவுகளை கட்டியெழுப்புவதிலும், சமூகத்துடன் தொடர்பு கொள்வதற்கும், ஆரோக்கியமான உறவுகளுக்கும் வயது வந்தவர் என்ற முறையில் ஒருவருக்கு தேவையான சமூகத் திறன்களுக்கும் இது முக்கியமான பங்காற்றுகிறது.

பொதுமுடக்க காலத்தில் விரும்பத் தக்க முறையியல் ஆக மாறியுள்ள ஆன்லைன் வகுப்புகளில் இவற்றில் பலவற்றை அப்படியே பிரதிபலிக்கச் செய்ய முடியாது. ‘பாடத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கான’ விருப்பத்தேர்வு முறையியல் ஆக ஆன்லைன் வகுப்புகள் மாறியிருந்த போதிலும், இது எல்லாக் குழந்தைகளையும் சென்றடைகிறதா என ஆரம்பத்திலேயே கேள்விகள் எழுப்பப்பட்டன. அப்பட்டமான டிஜிட்டல் கல்வி இடைவெளியானது பொதுமுடக்க காலத்தில் மூடி மறைக்க முடியாத வழிகளில் தெளிவாக கண்ணுக்குத் தெரிந்தது.

பட்டியல் பழங்குடி மக்களில் பெரும்பகுதியினரிடம், மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களில் பலரிடம் தலித்துகள், புலம்பெயர் தொழிலாளர்கள், மீனவர்கள் மொபைல் போன்கள் அல்லது அவர்களது பகுதிகளில் இன்டர்நெட் செயல்பாடு இல்லை என்பதால் அவர்கள் விலக்கப்படுவது மாற்ற இயலாத முடிவாகும். இவ்வாறு விலக்கப்பட்டிருப்பதால் ஏற்படும் பாதிப்பை, குறிப்பாக புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள் மத்தியில் ஏற்படும் பாதிப்பை, இதன் வடிவங்களை மதிப்பிடுவதற்காக இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

## 2. கட்டமைப்பு

### 2.1. விளக்கங்கள்

### *2.1.1. புலம்பெயர் தொழிலாளர்*

'புலம்பெயர் தொழிலாளர்' என்ற சொல்லுக்கு 'ஒரு நபரின் அல்லது நபர்களது குழுவின், சர்வதேச எல்லையைக் கடந்த அல்லது ஒரு மாநிலத்துக்கு உள்ளேயான, இடம்பெயர்வு' என உலக நலவாழ்வு அமைப்பு (World Health Organization - WHO) விளக்கம் அளித்துள்ளது[3]. இந்தியாவில் புலம்பெயர் தொழிலாளர்கள் பற்றி நெருக்கமான குறிப்புடன் கூடிய சட்டமான, மாநிலங்களுக்கு-இடையேயான புலம்பெயர் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்தல்) சட்டம், 1979 (இது தொழில் ரீதியான பாதுகாப்பு, நலவாழ்வு மற்றும் வேலை நிலைமைகள் சட்டம், 2020 ஆக 2021 ஏப்ரல் 1-ல் மாற்றப்பட்டது), 'இன்னொரு மாநிலத்தில் உள்ள ஒரு நிறுவனத்தில் வேலைசெய்வதற்காக ஒரு உடன்பாட்டின் கீழ் ஒரு மாநிலத்தில் ஒரு கான்ட்ராக்டரால் வேலைக்கு எடுக்கப்பட்ட எந்த நபரும்'[4] மாநிலங்களுக்கு- இடையேயான புலம்பெயர் தொழிலாளர்கள் ஆவார்கள் என வரையறை செய்துள்ளது.

இந்த இரண்டு விளக்கங்களிலும் புலம்பெயர் தொழிலாளர்களின் வகுப்பு பண்பு உள்ளடங்கியிருக்கிறது. மிகவும் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய வகுப்புகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் மட்டுமே இந்தப் பெயருக்கு உரிமையானவர்கள். உயர் நிலையில் இருப்பவர்கள், பெரும்பாலும் வெளிநாட்டில் வாழ்பவர்கள் என அழைக்கப்படுகிறார்கள், அவர்கள் இந்தப் பிரிவின் கீழ் வருவதில்லை. முழுநேர அரசு பணியாளர்களும் இதில் அடங்குவதில்லை.

இந்தியாவில் 1967-ல் இருந்து புலம்பெயர்தல் என்பது பிறந்த இடத்தின் மூலமான புலம்பெயர்வு, கடைசியாக வசிக்கும் இடத்தின் மூலமான புலம்பெயர்வு என இரண்டு வழிகளில் வகைப்படுத்தப்பட்டு வருகிறது. உள்நாட்டுக்குள் மொத்தம் புலம் பெயர்ந்தவர்களில் 70% பெண்கள் என்பது வியப்பூட்டுவதாகும்.[5] சமூக முதலீடு

---

3 https://www.who.int/migrants/about/definitions/en/. The definition of a State under international law namelyArticle1oftheMontevideoConventionontheRightsandDutiesofStates,1933whichreferstoStateas a person of international law which possesses a) a permanent population; b) a defined territory; c) government;andd)thecapacitytoenterintorelationswiththeotherstates[accessed17May2021].

4 https://censusindia.gov.in/Ad_Campaign/drop_in_articles/08-Migration.pdf

5 http://www.unesco.org/new/fileadmin/MULTIMEDIA/FIELD/New_Delhi/pdf/ Policy_briefs_full_ low_ 01.pdf

அல்லது பொருளாதார முதலீடு எதையும் ஏற்கெனவே வைத்திராதவர்கள், பொருளாதார ரீதியான அகதிகள் அல்லது மோதல் காரணமாக தப்பி ஓடி வருகிறவர்கள் ஆகியோர் புலம்பெயர்வதால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். சாதி சமுதாயத்தில் இருந்து எடுத்து வரப்பட்டு இன்றும் தொடர்கிற, ஆதிக்கம் செலுத்தும் சமூகக் குழுக்கள் 'அமைப்புசார்ந்த' துறையில் 7%-ஐ ஏகபோகமாக தங்கள் கைகளில் வைத்திருக்கின்ற, சாதி அமைப்பின் கீழ்த் தட்டில் உள்ளவர்களுக்கு நிச்சயமற்ற நிலையை அதிகரிக்கின்ற, வேலைகள் தற்காலிகமயமாவது அதிகரித்து வருகின்ற, மிகவும் கீழ்நிலையில் இருப்பவர்கள் கொத்தடிமை முறையிலும், அடிமை முறையிலும் சிக்கியிருக்கின்ற ஓர் அமைப்பாகத்தான் இன்றைய உழைப்பு உலகம் இருக்கிறது என்பது ஒருவகையான சிந்தனை முறையாகும். ஆழமாக சாதி-வேரோடிய இந்தியாவின் இன்றைய வேலை கட்டமைப்பை குழப்புவதற்காக வகுப்பு, பொருளாதாரம் ஆகிய மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன என்று இந்த சிந்தனை முறை வலியுறுத்துகிறது.

### *2.1.2. குழந்தை*

'குாந்தை' என்ற சொல்லுக்கு இந்திய சட்டத்தின் கீழ் நிலையான விளக்கம் இல்லை. இந்தியாவில் உள்ள வெவ்வேறு சட்டங்கள் குழந்தை என்பதை அதன் நோக்கத்துக்கு ஏற்றவாறு வெவ்வேறு வழிகளில் விளக்குகின்றன.[6] குழந்தை தொழிலாளர்கள் (தடை மற்றும் முறைப்படுத்தல்) சட்டம், 1986-ன் கீழ் ஒரு குழந்தை என்பதற்கு[7] 14 வயதை நிறைவு செய்யாத ஒரு நபர் என்று பொருளாகும். அதே வேளையில் இந்திய வயதுவந்தோர் சட்டத்தின் கீழ், வயது வந்தவருக்கான வயது என்பது 18 ஆகும். இது 21 வயதுக்கு உட்பட்ட எந்த ஒரு தனிநபரின் சொத்துக்களை பாதுகாப்பதற்காகவும் ஒரு காப்பாளரை நியமிக்கலாம் என்றிருப்பதற்கு முரணாகத் தோன்றலாம்.[8] சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000 (2015-ல் திருத்தப்பட்டது), 18 வயதுக்கு உட்பட்ட ஒரு தனிநபரை குழந்தை என வரையறுக்கிறது. கொடிய குற்றங்களைப் பொறுத்தவரையில் 16 வயதுக்கு உட்பட்டவர்களை குழந்தை என விளக்கம் அளிக்கிறது. இந்தப் பலவகை விளக்கங்களுடன், ஆண்களுக்கும் பெண்களுக்கும்

---

6 http://www.legalserviceindia.com/legal/article-346-laws-and-policies-for-protection-of-interest-of-children-a-critical-analysis.html

7 ChildLabour(ProhibitionandRegulation)Act,1986,Section2(ii).

8 TheIndianMajorityAct,1875,Section3.

வெவ்வேறாக உள்ள திருமண வயது (பெண்களுக்கு 18, ஆண்களுக்கு 21), மது அருந்துவதற்கு தகுதியான வயது (18 முதல் 25 வரை எனமாநிலத்துக்கு மாநிலம் வேறுபடும்) ஆகியவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தியா அங்கீகரித்துள்ள, குழந்தைகள் உரிமைகள் பற்றிய ஐ.நா. உடன்படிக்கை (CRC) எனப்படும் சர்வதேச சட்டத்தின் கீழ், குழந்தை என்பது 18 வயதுக்கு உட்பட்ட ஒரு தனிநபர் என விளக்கம் தரப்பட்டுள்ளது. தீங்கு விளைவிக்கும் வேலையைப் பொறுத்தவரையில், 18 வயதுக்கு உட்பட்ட ஒருவரை பணியில் அமர்த்தக் கூடாது என பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு (ILO) குறிப்பிடுகிறது. வேலைக்கான அடிப்படை குறைந்தபட்ச வயது என்பது, கட்டாய பள்ளிக் கல்வியை முடிக்கும் வயதுக்கு முன்னதாக இருக்கக்கூடாது என்றும் அது கூறியிருக்கிறது. பொதுவாக இது 15 வயது என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.[9] மேலே குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு விதிகளில் இருந்து, ஒரு குழந்தை என்பது 18 வயதுக்கு உட்பட்ட ஒரு தனிநபர் என்பதை அறிந்து கொள்ள முடியும். சர்வதேச சட்டத்தின் கீழும் இதுவே மிகவும் பொதுவான விளக்கமாக இருக்கிறது.

### *2.1.3. புலம்பெயர் குழந்தைகள்*

உள்நாட்டுக்குள் புலம்பெயர்தல் என்பது நிலையாக அதிகரித்து வருகிறது என்பதை பத்தாண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு வெளிப்படுத்துகிறது. 2011-ம் ஆண்டு எடுக்கப்பட்ட இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு, புலம்பெயர் குழந்தைகளின் எண்ணிக்கை 92.95 மில்லியன் எனக் குறிப்பிடுகிறது. இது 1991 மக்கள் தொகை கணக்கெடுப்பில் உள்ள எண்ணிக்கையைக் காட்டிலும் இரு மடங்காகும்.[10] புலம்பெயரும் ஐந்து பேரில் ஒருவர் குழந்தை என்பது இதன் பொருள். ‘புலம்பெயர் குழந்தைகள்’ என்பவர்கள் புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகளாக அல்லது அவர்களே புலம்பெயர் தொழிலாளர்களாக இருக்கலாம். தங்கள் பெற்றோர்களுடன் சேர்ந்து வேலை பார்க்கும் புலம்பெயர் தொழிலாளர்களின் குழந்தைகள் அல்லது தனித்து வேலை செய்யும் குழந்தைகள் ஆகிய இருவகையினர் இதில் சங்கமிக்கின்றனர். மாவட்டங்களுக்கு-இடையே (அல்லது மாநிலத்துக்கு-உள்ளே), மாநிலங்களுக்கு-இடையே (தேசிய அளவில்) மற்றும்

[9] MinimumAgeConvention,1973.

[10] https://censusindia.gov.in/DigitalLibrary/Archive_home.aspx

[11] https://www.unicef.org/socialpolicy/files/Access_to_Civil_Economic_and_Social_ Rights_for_Children.pdf

சர்வதேச அளவில் புலம்பெயர்பவர்கள் ஆகிய வகைகள் இன்னொரு இணைப்பாகும். குறைந்த வருமானம் உள்ள தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், வறுமைக் கோட்டில் அல்லது வறுமைக் கோட்டுக்கு கீழே இருப்பவர்கள் மற்றும் தொலைவைக் காட்டிலும் பாதிப்புக்கு அதிகம் ஆளாகக் கூடியவர்களை பொதுவாக இது குறிப்பிடுகிறது. தீங்கிழைப்பு, வறுமை, சமூக ரீதியில் ஒதுக்கி வைக்கப்படுதல் ஆகியவற்றினால் அதிக அளவில் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருந்தபோதிலும், இந்தியாவில் பல்வேறு சட்டங்கள் மூலம் எடுக்கப்படுகின்ற அடிப்படையான சமூக, பொருளாதார பாதுகாப்பு நடவடிக்கைகளில் இருந்து புலம்பெயர் தொழிலாளர்களாக இருக்கும் குழந்தைகள்தான் விலக்கி வைக்கப்படுகிறார்கள்.[11] பெற்றோர் புலம்பெயர் தொழிலாளர்களாக இருக்கும் நிலையில், அவர்கள் தங்கள் குழந்தைகளை அவர்கள் புலம்பெயரத் துவங்கும் மாநிலத்தில் (சொந்த மாநிலத்தில்), நிதி ஆதரவுடன் அல்லது நிதி ஆதரவு இல்லாமல் விட்டுச் செல்கின்றனர். அந்தக் குழந்தைகள் சமூக நல உதவிகளைப் பெறுவதில் அதிகம் இடர்ப்பாடுகளை சந்திக்க நேரிடுகிறது. புலம்பெயர் குழந்தைகள் தகுதிபடைத்தவர்கள் என சட்டம் அனுமதித்த போதிலும், மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடுகையில் அவர்கள் சென்றடையும் (விருந்தோம்பும்) மாநிலத்தில் குறைவான ஆதரவையே பெறுகிறார்கள். சமூக நலத் திட்ட உதவிகளை பெறுவதற்கு வாய்ப்பு வழங்கும் சட்டங்களுக்கும், தகுதி இருந்தும் நடைமுறையில் குழந்தைகள் விலக்கி வைக்கப்படுகிற உண்மை நிலவரங்களுக்கும் இடையே உள்ள பாகுபாட்டை இங்கே நாம் பார்க்கலாம். புலம் பெயர்ந்த குடும்பங்களுக்கு வீட்டு வசதி ஆதரவு வரம்புக்கு உட்பட்டதாகவே இருக்கிறது என்பதாலும், ஆவணப்படுத்தப்படாத அல்லது ஆரம்பக் கல்வி இல்லாத குழந்தைகளுக்கு இது முற்றிலும் சாத்தியமில்லை என்பதாலும் வீட்டு வசதி மிகவும் பிரச்சினைக்குரியதாக இருக்கிறது என யூனிசெப் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. வீட்டு வசதி வழங்கப்பட்டாலும் கூட, அவற்றில் போதுமான துப்புரவு வசதிகள் இல்லாமலும், வாழ்வதற்கான நிலைமைகள் மோசமானதாகவும்தான் இருக்கிறது.

புலம்பெயர் குழந்தைகள், ஒரு தனிப்பட்ட குழுவாக இருந்தபோதிலும், அவர்கள் ஒரே மாதிரியானவர்களாக இல்லை. ஏனெனில் அவர்கள் புலம்பெயர்வதற்கான காரணங்கள் குடும்பத்துடன் இடம்பெயர்தல் அல்லது திருமணத்துக்குப் பிறகு, கல்விக்காக, வேலைக்காக[12] என புலம்பெயர்தலுக்கான சூழ்நிலைகள் - பல்வேறாக

[12] https://www.unicef.org/india/media/3416/file/Child-migration-India2020-policy-brief.pdf,page3.

இருக்கின்றன. புலம் பெயர்வதற்கான காரணங்கள் எதுவாக இருந்தபோதிலும், முறையாக மேலாண்மை செய்தால், வறுமை நிலையைக் குறைப்பதற்கும், சிறந்த வாழ் நிலைமைகளுக்கு ஊக்கம் அளிப்பதற்கும் புலம்பெயர்தலால் முடியும் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

தனிப்பட்ட தேவைகளுக்கும், பலவகையான பாதிப்புகளுக்கும் தீர்வு காணும் நோக்கில் அவரவர்க்கு ஏற்ற வகையில் மாற்றம் செய்து உரிய நடவடிக்கைகளை வகுப்பதற்காக, வெவ்வேறு புலம்பெயர் குழந்தைகளுக்கான திட்டவட்டமான தேவைகளை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

### *2.1.4. புவி இடம் சார்ந்த உரிமைகள்*

இந்தியாவில் இடத்தை சார்ந்து, பெரும்பாலும் குடியிருக்கும் இடம் சார்ந்து, சில உரிமைகளும் பாதுகாப்புகளும் கிடைக்கின்றன. அத்தகைய ஒன்று பட்டியல் வகுப்பினர்களுக்கு (பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர்) கிடைக்கும் பாதுகாப்பு. அவர்கள் மாநில எல்லைகளைக் கடந்தால் இந்தப் பாதுகாப்புகள் விலக்கிக் கொள்ளப்படும்.

மறுபுறம், இந்தியாவில், 6-14 வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் தாய் மொழியில் பள்ளிக் கல்வி பெறுவதற்கான உரிமை போன்ற பெரும்பகுதி உரிமைகளும் தகுதிகளும் புவி இடங்களுக்கு பொதுவானவை (geo-agnostic – நாடு தழுவியவை). அவர்கள் எந்த இடத்தில் இருந்தாலும் அல்லது எங்கே போனாலும் அவர்களுக்கு அந்த உரிமை உண்டு. இந்த உரிமையானது ‘படிப்படியாக நிறைவேற்றுதல்’ என்ற பிரிவின் கீழ் வருவதால், மாநிலங்கள் அவற்றின் (நிதி) ஆற்றலுக்கு ஏற்ப படிப்படியாக செயல்படுத்த முடியும் என்பது இதன் பொருள். ஆனால் அதிகமாக இது மீறப்படுகிறதே தவிர பின்பற்றப்படுவதில்லை. சொந்த மாநிலம், சென்றுள்ள மாநிலம் இரண்டுமே இந்தக் குடும்பங்களை கைவிடவே செய்கின்றன.

பட்டியல் வகுப்பினருக்கு மானியத்துடன் கூடிய கடனுக்கான உரிமை என்பது மாநில, சர்வதேச - எல்லை கடந்தது, அவர்கள் எந்த மாநிலத்துக்கு அல்லது நாட்டுக்கு சென்றாலும், இந்திய அரசு அல்லது சம்பந்தப்பட்ட மாநிலம் அவர்களது கல்விக் கடனுக்கு பொறுப் பேற்கிறது. இதே போல, வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்கள் மானிய விலையில் உணவு பெறுவதற்கான உரிமையை நாடு

தழுவியதாக மாற்ற வரவேற்கத் தக்க முயற்சி இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முன்பெல்லாம், இடமாற்ற மேலாண்மை சவாலாக இருப்பதாக காரணம் காட்டி அரசுகள் அதற்கு பின்னால் ஒளிந்து கொண்டு, மிகவும் பாதிக்கப்படக்கூடிய இந்தக் குடும்பங்களை, தொடர்புடைய எல்லா இடர் பாடுகளுடனும் என்ன செய்வதென்று தெரியாமல் தவிக்கும் நிலைக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தன. ஏனெனில் அவர்களுக்கு தங்கள் ரேஷன் கார்டுகளை சொந்த மாநிலத்தில் இருந்து நீக்கிவிட்டு, பின்னர் சென்றிருக்கும் மாநிலத்தில் மீண்டும் பதிவு செய்வதற்குத் தேவையான வசதி, வாய்ப்புகள் இல்லாமல் இருந்தன.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள எல்லா உரிமைகளும் புலம்பெயர் குழந்தைகளுக்கு நாடு தழுவியதாக மாற்றப்பட வேண்டும் இந்த ஆய்வறிக்கையில் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

## 2.2. அரசியலமைப்பு சட்ட உரிமைகள் மற்றும் சட்டப் பாதுகாப்புகள்

### *2.2.1. கல்விக்கான உரிமை*

கல்விக்கான உரிமையானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19 (1)(g) பிரிவு, 21 மற்றும் 21 (A) பிரிவு ஆகியவற்றில் இடம் பெற்று பட்டியலிடப்பட்டுள்ளது. இது இடம் சார்ந்த உரிமை அல்ல. 14 வயதுக்கு உள்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் இலவச, கட்டாய கல்வி வழங்குவதில் நீதித்துறையும் கூட ஆர்வம் காட்டியிருக்கிறது.

TMA பாய் பவுண்டேஷன் வழக்கில்தான் முதல் முறையாக, அரசியலமைப்புச் சட்டத்தின் 19 (1)(g) பிரிவின் கீழ் 'வேலை' என்ற சொல்லின் ஒரு பகுதியாக கல்வி என்ற கருத்தாக்கம் சேர்க்கப்பட்டது.[13] இங்கே கல்வி அறிகூட்டுவதற்கான உரிமை என்பது இந்தப் பிரிவின் கீழ் அடிப்படை உரிமையாகும். இது 19 (6) பிரிவின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது.[14]

19-வது பிரிவுடன் நேரடியாகத் தொடர்புடைய கல்விக்கான உரிமையானது, உயிர் வாழ்வதற்கான உரிமைக் கோட்பாட்டை போற்றிப் பாதுகாக்கிற 21-வது பிரிவாகும். 'சட்டத்தினால் நிலைநாட்டப்பட்ட நடைமுறைக்கு ஏற்ப செயல்படுவதை தவிர்த்து

[13] Article 19(1)(g) states that all citizens shall have the right to practise any profession, or to carry on any occupation, trade or business.

[14] P.A Inamdar v State of Maharashtra, (2005) 6 SCC 537.

மற்றபடி எவருக்கும் அவரது உயிர் வாழ்க்கையும், தனிப்பட்ட சுதந்திரமும் மறுக்கப்படக் கூடாது' என 21-வது பிரிவு குறிப்பிடுகிறது. உயிர் வாழும் உரிமையில் இருந்து எழுகின்ற, அதில் உள்ளடங்கியுள்ள, ஒரே குடையின் கீழ் வரும் பல உரிமைகளில் ஒன்றுதான் கல்விக்கான உரிமையாகும். இந்தப் பிரிவின் கீழ் 14 வயது வரையிலான ஒவ்வொரு குழந்தைக்கும் இலவசக் கல்வி அடிப்படை உரிமையாகும். இது மாநிலத்தின் பொருளாதார ஆற்றலுக்கும் வளர்ச்சிக்கும் உட்பட்டது.[15]

'ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும், சட்டத்தின் மூலமாக அரசு தீர்மானிக்கும் முறையில், இலவச, கட்டாயக் கல்வியை அரசு வழங்கும்' என அரசமைப்புச் சட்டத்தின் 21A பிரிவு அறிவிக்கிறது. இந்த 21A பிரிவின்கீழ், பின்பற்றி செயல்படுத்தல் என்பதற்கு, ஆறு வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் இடைப்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் கல்வி வழங்குதல் மற்றும் அவர்கள் முறையாக தொடர்ந்து பள்ளிக்குச் செல்வதற்கு வழி வகுத்தல் என்று பொருளாகும்.[16] வியப்பூட்டும் வகையில் 'ஆறு வயதுக்கும் பதினான்கு வயதுக்கும் இடையிலான அவரது குழந்தைக்கு அல்லது அவரது பாதுகாப்பில் உள்ள குழந்தைக்கு கல்வி வாய்ப்புகளை வழங்க வேண்டியது பெற்றவர் அல்லது காப்பாளர்' ஆகிய ஒவ்வொரு குடிமகனின் கடமை என அரசமைப்புச் சட்டத்தின் 51A(k) பிரிவு ஆக்கியிருக்கிறது.

கல்விக்கான உரிமை என்பது வெறும் இலவச, கட்டாயக் கல்வியோடு மட்டும் முடிவதில்லை. மாறாக குழந்தையின் பொருளாதார, சமூக, கலாச்சார பின்னணியைப் பார்க்காமல் தரமான கல்வி வழங்குவது வரைக்கும் நீள்கிறது. இந்த உரிமை மீறப்படுமானால், நிதி ஆற்றல் இல்லாமையை காரணம் காட்டி அதை நியாயப்படுத்தக் கூடாது, பொறுப்பில் இருந்து விடுவித்துக் கொள்ளக் கூடாது என நீதிமன்றங்கள் தீர்ப்பளித்திருக்கின்றன.[17] சமச்சீர் கல்வி வழங்குவதற்காக இந்த வழிகாட்டி நெறிகளைப் பின்பற்றி தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறை சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

---

[15] Unni Krishnan v State of A.P, (1993) 1 SCC 645; Mohini Jain case, (1992) 3 SCC 666.

[16] Ashoka Kumar Thakur v Union of India, (2008) 6 SCC1.

[17] In State of Bihar v Bihar Secondary Teachers Struggle Committee (2019) 18 SCC 301.

### 2.2.2. குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக் கல்விக்கான உரிமை சட்டம், 2009

இந்தச் சட்டம் 2009 ஆகஸ்ட் 4-ம் தேதி நிறைவேற்றப்பட்டது. பள்ளிகள் மற்றும் இதர கல்வி நிறுவனங்களுக்கு கல்வி தொடர்பாக நிறுவனரீதியான அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக இந்தச் சட்டம் அமலாக்கப்பட்டது. அப்போதுதான் 6-14 வயதுக்கு இடையிலான குழந்தைகளுக்கு கல்விக்கான அடிப்படை உரிமையை செயலாக்க முடியும். அந்த வயதுப் பிரிவுக்குள் உள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் முறையான கல்வி வழங்குவதை மாற்ற முடியாதபடி செய்வதும், வசதிக் குறைவான சமூகங்களுக்காக 1-வது வகுப்பு வரை 25% இடங்களை ஒதுக்குமாறு தனியார் கல்வி நிறுவனங்களுக்கு ஆணையிடுவதும் தான் இதன் நோக்கம். வகுப்பு அறைகளில் மற்றக் குழந்தைகளிடம் இருந்து இந்தக் குழந்தைகளை பிரித்து வைக்காமல் இருப்பதை அல்லது வெவ்வேறு நேரம் ஒதுக்காமல் இருப்பதை, தனியார் பள்ளிகள் உள்ளிட்ட பள்ளிகள் உறுதி செய்ய வேண்டும். எனினும், மாணவர் சேர்க்கை இடங்களுக்கான இடஒதுக்கீட்டுக்கு தேவையான அளவுகோல்கள் குறித்து இந்தச் சட்டம் தெளிவாக குறிப்பிடவில்லை.

இந்தச் சட்டத்தின் இன்னொரு முக்கிய கூறு, ‘அருகில் உள்ள பள்ளிகள்’ என்ற கருத்தாக்கம் ஆகும். ஒரு கிலொ மீட்டருக்குள்ளே அருகில் உள்ள பகுதியில் நான்காவது வகுப்பு வரைக்குமான தொடக்கப் பள்ளி அமைந்திருப்பதையும், மூன்று கிலொ மீட்டருக்குள்ளே அருகில் உள்ள பகுதியில் ஐந்தாம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் படிக்கும் குழந்தைகளுக்கான பள்ளி செயல்படுவதையும், இந்த சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் உறுதிப்படுத்த வேண்டியது அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும்.

கல்விக்கான உரிமையும், இந்த சட்டத்தின் இதர விதிகளும் செயல்படுத்தப் படுவதை தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (National Commission for the Protection of Child Rights - NCPCR)[18] அல்லது மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (State Commission for the Protection of Child Rights - SCPCR)[19] கண்காணிக்க வேண்டும். உரிமைகளை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளை ஆய்வு செய்து, மேம்பாட்டுக்கான பகுதிகளை பரிந்துரை செய்கிற,

[18] Section 3, RTE Act.
[19] Section 4, RTE Act.

உரிமைகள் தொடர்பாக ஏதேனும் புகார்கள் வந்தால் அவற்றை விசாரிக்கிற கடமை அவற்றுக்கு பணிகளாகத் தரப்பட்டுள்ளது.

### 2.3. பயிற்று மொழி

#### *2.3.1. அரசமைப்புச் சட்ட விதிகள்*

மொழிச் சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பான, அரசமைப்புச் சட்டத்தின் 29 பிரிவானது, தங்கள் மொழியை பாதுகாப்பதற்கும், மொழி அடிப்படையிலான பாகுபாட்டை தடுப்பதற்கும் குடிமக்கள் அனைவருக்கும் உள்ள உரிமையை அங்கீகரிக்கிறது.

மொழிச் சிறுபான்மையினரைச் சேர்ந்த குழந்தைகளுக்கான கல்வியின் ஆரம்ப கட்டத்தில் தாய் மொழியில் பயிற்றுவிப்பதற்கு போதுமான வசதிகளை வழங்க வேண்டியது ஒவ்வொரு மாநிலமும் மற்றும் மாநிலத்துக்கு உள்ளே இருக்கின்ற ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் முயற்சி எடுக்க வேண்டும் என அரசமைப்புச் சட்டத்தின் 350A பிரிவு குறிப்பிடுகிறது.

கல்விக்கான உரிமை என்பது நாடு தழுவிய உரிமையாகும். புலம் பெயர் குழந்தைகள் அவர்கள் எங்கே இருந்தபோதிலும், தங்கள் தாய் மொழியில் பள்ளிக் கல்வி பெறும் உரிமை என்பது மறுக்க இயலாத ஒன்றாகும்.

#### *2.3.2. தேசிய ஆரம்பகால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்விக்கான (ECCE) கல்வித்திட்ட கட்டமைப்பு 2014*

வளர்ச்சி விகிதத்தின் அடிப்படையில், ஒரு குழந்தையின் வாழ்க்கையில் முதல் ஆறு ஆண்டுகளின் முக்கியத்துவத்தை இந்தக் கொள்கை அங்கீகரிக்கிறது. ஒரு நிலையான சுற்றுச்சூழலுக்குள் கவனிப்பு, நலவாழ்வு, சத்துணவு, விளையாட்டு, ஆரம்ப கால கல்வி கற்றல் ஆகிய அம்சங்களை ECCE உள்ளடக்கியிருக்கிறது.[20] தொடர்பு கொள்வதிலும், தகவல் பரிமாற்றத்திலும் மொழியின் முக்கியத்துவத்தை இந்தக் கொள்கை வலியுறுத்துகிறது. வீட்டில் பேசும் மொழி/ தாய் மொழியின் மூலமாக உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டியது முதலில் முக்கியம் என ECCE குறிப்பிடுகிறது. அடிக்கடி மொழி எல்லைகளைக்

[20] National Early Childhood Care and Education, Policy by Rajeev Ranjan, available at: https://www.rajeevelt.com/ early-childhood-care-and-education-ecce-curriculum-framework-policy-india-ncert/rajeev-ranjan/.

கடந்து பயணம் செய்யும் புலம் பெயர் குழந்தைகளுக்கு இது முக்கியமானது. எழுத்து, வாசிப்பு வாயிலாக அவர்கள் தொடர்புகொள்ளும் முறையின் மீது இது தாக்கம் செலுத்தும்.

### *2.3.3. தேசிய கல்வித் திட்ட கட்டமைப்பு, 2005 (National Curriculum Framework, 2005 NCF)*

கல்வி பெறுவதற்கு குழந்தையின் தாய் மொழியை செயல்படுத்த வேண்டும் என NCF வலியுறுத்துகிறது. ஒரு குழந்தையின் தாய் மொழியைத்தான் சிறந்த பயிற்று மொழியாகக் கருத வேண்டும். ஒரு குழந்தையின் தொடக்கப் பள்ளி கல்வியானது அந்தக் குழந்தையின் வீட்டில் பேசும் மொழியில்தான் வழங்கப்பட வேண்டும். இதை மதித்து நடக்க வேண்டியது கட்டாயம். இது, குழந்தையின் தாய் மொழியில் பயிற்றுவிப்பதற்கு போதிய வசதிகளை வழங்க வேண்டும் எனக் குறிப்பிடும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 350A பிரிவுடன் தொடர்புடையது. 'மனிதர்களுடன் தொடர்புகொண்டு பழகுவதற்குத் தேவையான அடிப்படைத் திறன்களுடன்தான் குழந்தைகள் பள்ளிகளுக்கு வருகிறார்கள் என்பதால், அவர்கள் மொழியில் நன்கு முன்னேறிய நிலையிலான அறிவாற்றலைப் பெற வேண்டியது அவசியம் என்றும் பள்ளிகளில் இந்திய மொழிகளை கற்றுக் கொள்வதை வலுப்படுத்துவதற்குத் தேவையான எல்லாவற்றையும் நாம் செய்ய வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று எனவும்' குறிப்பிடப்படுகிறது.

### *2.3.4. குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக் கல்விக்கான உரிமை சட்டம், 2009 (Right of Children to Free and Compulsory Education Act, 2009- RTE)*

'பயிற்று மொழிகள், இயன்ற வரைக்கும், குழந்தையின் தாய் மொழியில் இருக்க வேண்டும்' என குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக் கல்விக்கான உரிமை (RTE) சட்டம், 2009-ன் 29(2)(f) பிரிவு குறிப்பிடுகிறது. இது அனைத்து குடிமக்களும் போற்றிப் பின்பற்ற வேண்டிய உரிமையாகும். 2020-21-ல் இருந்து அனைத்து நிர்வாகங்களின் கீழுள்ள மேல் தொடக்கப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் I முதல் VI வரையிலான வகுப்புகளில் ஆங்கிலம்தான் கட்டாய பயிற்று மொழி என ஆந்திர அரசு பிறப்பித்த ஆணை செல்லாது என ஆந்திர உயர் நீதிமன்றம் 2020 ஏப்ரல் 15-ல் அறிவித்துவிட்டது.[21] மனுதாரர்களின்

[21] GO No. 85 Dated November 20, 2019

கருத்துக்களுக்கு உடன்பாடு தெரிவித்த உயர் நீதிமன்றம், அரசு ஆணையானது RTE சட்டம், 2009-ன் விதிகளுக்கு எதிரானது என்றும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 14, 21, 21A பிரிவுகளை மீறுவதாகும் என்றும் கூறியிருக்கிறது. உயர் நீதிமன்றத்தின் ஆணைக்கு இடைக்காலத் தடை விதிக்க உச்ச நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்ச் மறுத்துவிட்டது.

### 2.3.5. தேசிய கல்விக் கொள்கை 2020 *(National Education Policy -NEP) 2020*

குாந்தைகள் தங்கள் வீடு மற்றும் சமூகச் சூழலில் இருந்து இயல்பாகவே கற்றுக் கொள்ளும் வகையில் வீட்டிலும், விரிவான உறவுக்காரர்கள் மத்தியிலும், குழுக்களிலும், வீதிகளிலும், அருகில் உள்ள பகுதிளிலும் பேசும் மொழிகளை உள்ளடக்கியவைதான் வீட்டு மொழி அல்லது தாய் மொழி என தேசிய கல்விக் கொள்கை, 2005 விளக்கம் அளித்துள்ளது. உயர் கல்வி நிலையில் குழந்தையின் தாய்மொழியில் பயிற்றுவிக்கும் வழிவகைகள் ஒரு பள்ளியில் இல்லை என்றாலும் கூட, கட்டாயம் அது தொடக்கப் பள்ளி நிலையில் தாய் மொழியின் மூலாக கல்வி அளிக்க வேண்டும். 5ஆம் வகுப்பு வரையிலான, விரும்பத் தக்க நிலையில் 7ஆம் வகுப்பு வரையிலான கல்வி குழந்தைகளின் தாய் மொழியில் அல்லது உள்ளூர்/மாநில மொழியில் வழங்கப்பட வேண்டும் என NEP 2020 முன்மொழிந்துள்ளது.

### 2.3.6. ஐக்கிய நாடுகள் அமைப்பும் மொழியும்

சிறுபான்மையினர் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஐ.நா.வின் சிறப்பு ஆய்வறிக்கையாளர், சிறுபான்மையினரின் கல்வி, மொழி, மனித உரிமைகள் குறித்து 2020 மார்ச்சில் ஓர் அறிக்கை தயாரித்து அளித்திருக்கிறார். சிறுபான்மையினரின் தாய் மொழியிலான கல்வியும், அதனுடன் சேர்த்து ஆட்சிமொழியை தரமான முறையில் கற்பித்தலும் நீண்ட கால நோக்கில் நல்ல விளைவுகளைத் தரும்; பள்ளியிலிருந்து மாணவர்கள் இடை நிற்கும் விகிதங்களைக் குறைக்கும்; கல்வியில் குறிப்பாக மாணவிகளுக்கு, குறிப்பிடத் தக்க சிறந்த விளைவுகளுக்கு வழிவகுக்கும்; எழுத்தறிவு நிலைகளையும் தாய் மொழியிலும் ஆட்சி மொழியிலும் தங்கு தடையின்றி பேசவும் எழுதவுமான ஆற்றலையும் மேம்படுத்தும்.

UNESCO அமைப்பானது 1953-ல் இருந்தே (UNESCO, 1953) தொடக்கக் கல்வியில் தாய் மொழியில் பயிற்றுவிப்பதை ஊக்கப்படுத்தி வந்திருக்கிறது. ஆரம்பத்தில் இருந்தே தாய் மொழிக் கல்வியின் நன்மைகளை UNESCO முன்னிலைப்படுத்தி வருகிறது: பள்ளியில் சேரவும், படிப்பை வெற்றிகரமாக முடிக்கவும் குழந்தைகளுக்கு அதிகம் வாய்ப்புள்ளது (Kosonen, 2005); ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு பழகவும், தங்கள் குழந்தைகள் கல்வி கற்பதில் பங்கேற்கவும் பெற்றோர்களுக்கு அதிக வாய்ப்பு கிடைக்கும் (Benson, 2002); ஆதிக்க மொழிக்கு அதிகம் பழக்கப்பட்டிராத பெண் குழந்தைகளும்,கிராமப்புற குழந்தைகளும் பள்ளியில் நீடிப்பதற்கும், அடிக்கடி ஒரே வகுப்பில் தங்கி விடுவது குறைவதற்கும் வழிவகுக்கும் (Hovens, 2002; UNESCO Bangkok, 2005).

சிறுபான்மை மொழிகளை பயன்படுத்துவதை நிறைவேற்றாமல் இருப்பது, சர்வதேச சட்டத்தில் பாகுபாடாகவும், 'கல்விக்கான உரிமை போன்ற மனித உரிமைப் பொறுப்புகளை' மீறுவதாகவும் கருதப்படும்.

## 3. வாய்ப்பு எல்லை மற்றும் ஆய்வு முறை

### 3.1. நோக்கம்

பெருந்தொற்று தொடர்பான (ஆதரவளிக்கிற மற்றும் கட்டுப்படுத்துகிற) நடவடிக்கைகள் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் மத்தியில் ஏற்படுத்தி உள்ள பாதிப்பை மதிப்பீடு செய்தல். வளங்குன்றா வளர்ச்சி இலக்கு (SDG) 4 குறித்து தனி கவனம் செலுத்துகிற அதே வேளையில், பங்களிப்பு செய்கிற மற்றும் கட்டுப்படுத்துகிற அம்சங்களைக் கண்டறிவதற்காக வெளியில் உள்ள சுற்றுச்சூழல் பற்றியும் சிந்தித்தல்.

### 3.2. பங்கேற்கும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகள்

இந்த ஆய்வினை வடிவமைத்து செயல்படுத்துவதில் பின்வரும் அமைப்புகள் பங்கேற்றுள்ளன: எய்ட் எட் ஆக் ஷன் (Aide et Action), ஆக் ஷன் எய்டு (ActionAid), தமிழ்நாடு அல்லையன்ஸ் (Tamil Nadu Alliance), அருணோதயா (Arunodhaya Centre for Street Children) மற்றும் மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (Human Rights Advocacy and Research Foundation).

### 3.3. கால வரம்பு

#### *3.3.1. வடிவமைப்பு*

ஒரு மாதத்துக்கும் மேலாக பல சுற்றுக்கள் கலந்துரையாடியதற்குப் பிறகு இந்த ஆய்வு கூட்டு முயற்சியில் வடிவமைக்கப்பட்டது. வடிவமைப்பு முடிவு செய்யப்பட்ட பிறகு, கள ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது, கருவிகள் உருவாக்கப் பட்டன, களம் பரிசோதிக்கப்பட்டது, பின்னர் ஆய்வுப் பணி துவக்கப்பட்டது. ஆய்வு அறிக்கை தொடர்பாகவும் முழுமைப்படுத்தும் வரையில் இதே கூட்டு செயல்நிகழ்வுதான் பின்பற்றப்பட்டது. பின்னர் மொழியாக்கம் செய்யப்பட்டது. பங்கேற்கும் அமைப்புகள் செயல்பட்டு வருகிற குடியிருப்பு பகுதிகளில் இருந்துதான் மாதிரிகள் எடுக்கப்பட்டன. பங்கேற்பு அமைப்புகளின் செயல்பாட்டு எல்லை விகிதத்தின் அடிப்படையில் மாதிரி அளவு தேர்ந்தெடுக்கப்பட்டது.

#### *3.3.2. தரவுகள் சேகரித்தல்*

2021 மார்ச் 21 முதல் 25 வரையில் களப் பரிசோதனை நடத்தப்பட்டது. 2021 மார்ச் 27 முதல் 2021 ஏப்ரல் 04 வரையில், மொபைல் ஆப்-ஐ பயன்படுத்தி நேர்காணல்கள் மூலமாக புலம்பெயர்ந்த குழந்தைகளின் குடியிருப்பு பகுதிகளில் இருந்து ஆய்வாளர்கள் தரவுகளை சேகரித்தனர்.

### 3.3.3. ஆய்வுக்கான கட்டுப்பாட்டு வரம்புகள்

பெருந்தொற்று அதன் விளைவான பொது முடக்கங்கள், பள்ளி மூடல்கள், வலியுறுத்தி அமலாக்கப்பட்ட வீட்டுத் தங்கல் காரணமாக புலம்பெயர் தொழிலாளர்களது குழந்தைகளின் கல்வி கற்றல் மீது ஏற்பட்டுள்ள பாதிப்பை புரிந்துகொள்ளுதல் என்ற வரம்புக்குட்பட்ட நோக்கத்துக்காகவே இந்த ஆய்வு நடத்தப்பட்டது. பெருந்தொற்றினால் தூண்டப்பட்ட பொது முடக்கத்தின் விளைவாக கற்றலில் ஏற்பட்ட இழப்பை கண்டறிவதற்காக குழந்தை தொழிலாளர்களை ஆய்வு செய்ததை தவிர, பொதுவாக கொத்தடிமைத் தொழிலாளர் முறை அல்லது குழந்தை தொழிலாளர் முறை நிலவுவது பற்றி அல்லது அவர்களின் பொதுவான நிலைமைகள் குறித்து இந்த ஆய்வு ஆராயவில்லை. இதில் மட்டுமே தனி கவனம் செலுத்தும் கட்டமைப்புக்குள் விரைவாக, விரிவாக ஆய்வு செய்வதே நோக்கம். மேலும், மாதிரி வடிவமானது பங்காளர் அமைப்புகள் பணிபுரியும் பகுதிகளை உள்ளடக்கிக்கியது. ஆய்விற்கு எடுக்கப்பட்ட மாதிரியானது, அதிக சதவீத பதில் விகிதத்துடன், பிரதிநிதித்துவம் வாய்ந்த, இந்த அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள பகுப்பாய்விற்கு போதுமான அடிப்படையை வழங்கியுள்ளது.

பெருந்தொற்று தொடர்பான கட்டுப்பாடுகள், மிகவும் தெளிவாகத் தெரியும் நடமாட்டத்துக்கான கட்டுப்பாடுகள் காரணமாக,எந்த ஒரு ஆய்வை நடத்துவதிலும் சில உள்ளார்ந்த சவால்கள் உள்ளன. பள்ளிகள் மூடப்பட்டிருந்தபோது தரவுகள் சேகரிக்கப்பட்டன. எனவே, புலம்பெயர்ந்த குழந்தைகள் படிக்கும் பள்ளிகளின் நிலவரத்தை கண்டறியவோ அல்லது ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்யவோ சர்வே எடுத்தவர்களால் இயலவில்லை.

மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரும் குழந்தைகளில் பெரும்பகுதியினருக்கு தமிழ் தெரியாது. மொழிபெயர்ப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும், அவர்களது சொந்த மொழியில் அவர்களுடன் நேரடியாக கலந்துரையாடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இதனால் நேர்காணல்களுக்கு மிகவும் அதிக நேரம் ஆனது.

செங்கல் சூளைகள் போன்ற இடங்களில், குழந்தைகள் வசதியாக பதில் அளிக்க முடியாத நிலையில் இருந்தனர். அங்கு போதிய அடிப்படைக் கட்டமைப்பு வசதி இல்லாதுதான் இதற்குக் காரணம். சிறிய குறுகலான அறைக்குள் நீண்டநேரம் தங்கியிருப்பது அவர்களுக்கு கடினமாக இருந்தது. தொழில்நுட்ப வசதியின் காரணமாக ஆய்வில் பெரும்பகுதியை மேற்கொள்ள முடிந்தது என்றாலும், அது

எல்லா நேரங்களிலும் தடையில்லாமல் எளிதாக இருக்கவில்லை. தொழில் நுட்பமானது அதற்கே உரிய சவால்களையும் தனிப் பண்புகளையும் அதனுடன் கொண்டு வந்தது. கேள்விப் பட்டியல் டிஜிட்டல் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்ட காரணத்தால், சில தவறுகள் காரணமாக தரவுகள் சேகரிப்பின்போது இடர்ப்பாடுகளை சந்திக்க நேரிட்டது.

## 3.4. கருவிகள்

இந்த ஆய்வுக்காக, II வது பகுதியில், நான்கு கூறுகளுடன் (A, B, C1, மற்றும் C2) இரண்டு பகுதிகளைக் கொண்ட கேள்விப் பட்டியல் தயாரிக்கப்பட்டது. அனைத்து நான்கு கூறுகளுடன், கேள்விப் பட்டியலின் இரண்டு பகுதிகளும் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு டிஜிட்டல் சர்வே கருவியான முடிவில் பதிவேற்றப்பட்டது.

கேள்விப் பட்டியலை சீரமைப்பதற்காகவும், சிக்கலைத் தவிர்ப்பதற்காகவும், கேள்விப் பட்டியலானது, வடிகட்டும் கேள்விகளுடனும் (filter-Part I) மூன்று கூறுகளுடனும் உள்ளதாக பகுதி II (Part II) வடிவமைக்கப்பட்டது.

பகுதி I (Part I) அடையாளம் கண்டறியும் விவரங்கள் மற்றும் வடிகட்டும் கேள்வி ஆகியவற்றைக் கொண்டது. பதில் அளித்த அனைவரிடம் இருந்தும் இவை சேகரிக்கப்பட்டன. பதில்களை சார்ந்து, கருவியானது பகுதி II (Part II)-I சேர்ந்த 3 கூறுகளில் ஒன்றுக்கு நகரும்.

பகுதி II (Part II), புலம்பெயர்ந்த குழந்தைகளின் மூன்று வகையினருக்கு செயல் படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட மூன்று கூறுகளை (A, B மற்றும் C) உள்ளடக்கியது. புலம்பெயர்ந்த குழந்தைகளின் மூன்று வகையினர் வருமாறு:

அ) தங்களது பெற்றோர்களுடன் வந்திருக்கும் மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த குழந்தைகள் (Module A),

ஆ) குறிப்பிட்ட தொழில்களில் பணி செய்வதற்காக மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகள் (Module B),

இ) மாநிலத்துக்கு-உள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகள் (Module C) வகையில் இண்டு உட்கூறுகள் அடங்கியுள்ளன ஒன்று, குறிப்பிட்ட தொழில்களில் வேலை செய்வதற்காக வந்துள்ள குழந்தைகள், இன்னொன்று தங்களது பெற்றோர்களுடன் வந்துள்ள குழந்தைகள்.

ஆகவே, பகுதி II (Part II)-ல் அடங்கியுள்ள கூறுகள் வருமாறு:

Module A : தங்களது பெற்றோர்களுடன் வந்திருக்கும் மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர் குழந்தைகள்.

Module B : குறிப்பிட்ட தொழில்களில் பணி செய்வதற்காக மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர் குழந்தைகள்.

Module C1 : குறிப்பிட்ட தொழில்களில் பணி செய்வதற்காக வந்துள்ள மாநிலத்துக்கு-உள்ளேயே (மாவட்டங்களுக்கு இடையே) புலம் பெயர்ந்த குழந்தைகள்.

Module C2 : தங்களது பெற்றோர்களுடன் வந்துள்ள மாநிலத்துக்கு - உள்ளேயே (மாவட்டங்களுக்கு இடையே) புலம் பெயர் குழந்தைகள்.

## 3.5. பயிற்சி

மொபைல் போன் அடிப்படையிலான கருவியை எப்படிப் பயன்படுத்துவது என்பது குறித்து 2021 மார்ச் 20-ம் தேதி ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் கேள்விப் பட்டியல் குறித்து அவர்களுக்கு விளக்கிக் கூறப்பட்டது. களப் பரிசோதனைக்குப் பிறகு, 2021 மார்ச் 26-ம் தேதி அது குறித்து ஒரு சுற்று பின்னூட்டங்களை தெரிந்து கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னூட்டங்களின் அடிப்படையில் கருவி குறித்து முடிவு செய்யப்பட்டது.

## 3.6. மாதிரி எடுத்தல்

மாதிரி எடுப்பதற்காக ரேண்டம் சாம்பலிங் மாதிரி எடுக்கும் முறை இரண்டு கட்டமாக பயன்படுத்தப்பட்டது. மாதிரி எடுக்கும் நோக்கத்துக்காக ஐந்து மாவட்டங்களில் இருந்து நான்கு வகையான புலம் பெயர் குழந்தைகள் (கீழே பார்க்கவும்) கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டனர்.

### *3.6.1. மாதிரி தேர்வு செய்தல்*

இந்த ஆய்வானது பின்வரும் நான்கு வகையினரைப் பற்றி விவாதிக்கிறது:

1. தங்களது பெற்றோர்களுடன் வந்திருக்கும் மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயரந்த குழந்தைகள்.
2. குறிப்பிட்ட தொழில்களில் பணி செய்வதற்காக புலம்பெயர் குழந்தைகள்.
3. குறிப்பிட்ட தொழில்களில் பணி செய்வதற்காக வந்துள்ள மாநிலத்துக்கு-உள்ளேயே (மாவட்டங்களுக்கு இடையே) புலம் பெயர்ந்த குழந்தைகள்.

4. தங்களது பெற்றோர்களுடன் வந்துள்ள மாநிலத்துக்கு-உள்ளேயே (மாவட்டங்களுக்கு இடையே) புலம் பெயர்ந்த குழந்தைகள்.

### 3.6.2. புவியிடப் பகுதி


இந்த ஆய்வு சென்னை 24 (5.1%), திண்டுக்கல் 48 (10%), ஈரோடு 78 (16.7%), நாமக்கல் 49 (10%), திருவள்ளூர் 267 (57%) ஆகிய தமிழ்நாட்டின் ஐந்து மாவட்டங்களில் நடத்தப்பட்டது.

**அட்டவணை 1. மாவட்ட வாரியாக பதில் அளித்தவர்கள் எண்ணிக்கை**

| | | |
|---|---|---|
| சென்னை | 24 | 5.1 |
| திண்டுக்கல் | 48 | 10 |
| ஈரோடு | 78 | 16.7 |
| நாமக்கல் | 49 | 49 |
| திருவள்ளூர் | 267 | 57 |
| **மொத்தம் = 466** | | |

### 3.6.3. மாதிரி பரவல்


தேர்ந்தெடுக்கப்பட்ட 480 மாதிரிகளில், 466 குழந்தைகளிடம் இருந்து தரவுகள் பெறப்பட்டன. இவர்களில் 252 பேர் (54%) ஆண்கள், 214 பேர் (46%) பெண்கள். இவர்களில் 221 பேர் (47.4%) தங்களது பெற்றோர்களுடன் வந்துள்ள மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த குழந்தைகள் (Module A-வில் அடங்குவர்). 23 பேர் (4.9%) பணி செய்வதற்காக வந்தவர்கள் (Module B-யில் அடங்குவர்). 24 பேர் (5.1%) குறிப்பிட்ட தொழில்களில் பணி செய்வதற்காக மாநிலத்துக்கு உள்ளே (மாவட்டங்களுக்கு இடையே) புலம் பெயர்ந்த குழந்தைகள் (Module C- 1-ல் அடங்குவர்). 198 பேர் (42%) தங்கள் பெற்றோர்களுடன் வந்தவர்கள் (Module C 2-ல் அடங்குவர்).




*வரைபடம் 01: பதில் அளித்தவர்களில் வயது வாரியான எண்ணிக்கை*

வயதுப் பிரிவு பரவல்:

9 வயதுக்கு உள்பட்ட குழந்தைகள் 41 (9.4%), 9 வயது 52 (11.1%), 10 வயது 58 (12.4%), 11 வயது 39 (8.3%), 12 வயது 53 (11.3%), 13 வயது 51 (10.9%), 14 வயது 31 (6.6 %), 15 வயது 40 (8.5%), 16 வயது 32 (6.8%), 17 வயது 43 (9.2%), 17 வயதுக்கு மேலே 18 வயதுக்கு கீழே 26 (5.5%).




*வரைபடம் 02: பதில் அளித்தவர்களில் சாதி வாரியான எண்ணிக்கை*

### *3.6.4. சமூகப் பிரிவுகளின் அமைப்பு*

பதில் அளித்தவர்கள் (மொத்தம் பதில் அளித்தவர்கள் 466) சமூக அமைப்பில் எந்தப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பார்க்கும்போது, 25% பட்டியல் சாதிகளையும், 9.8% பட்டியல் பழங்குடி வகுப்புகளையும் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். மீதியுள்ள மற்றவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் (18%) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகள் (14.8%), மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்புகளை (1%) சேர்ந்தவர்களாக இருந்தார்கள். அவர்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது பல குழந்தைகளுக்குத் தெரியவில்லை. தாங்கள் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியாது என 23.6% பேர் குறிப்பிட்டனர். 7% குழந்தைகள் இந்தக் கேள்விக்கு பதில் அளிக்க மறுத்துவிட்டனர்.


மதப் பிரிவுகளை பொருத்தவரையில், இந்துக்கள் 380 பேர் (81%), முஸ்லிம்கள் 60 பேர் (12%), கிறிஸ்தவர்கள் 7 பேர் (1.5%) ஆக இருந்தனர்.

## 4. கண்டறிந்தவை

### 4.1. பிறந்த மாநிலம்

பதில் அளித்த 466 பேரில், 419 குழந்தைகள் தங்கள் குடும்பங்களுடன் புலம் பெயர்ந்தவர்கள். இவர்களில் 198 பேர் மாநிலத்துக்கு உள்ளேயே புலம் பெயர்ந்தவர்கள். 10% குழந்தைகள் வேலை செய்வதற்காக மட்டும் அவர்களது குடும்பங்கள் இல்லாமல் புலம் பெயர்ந்தவர்கள். இவர்களில் 4.9% மாநிலத்துக்கு உள்ளேயே புலம் பெயர்ந்த குழந்தைகள்.

**புலம் பெயர்தலின் வகை**





*வரைபடம் 03: புலம் பெயர்தலின் வகை*

பெரும்பான்மை குழந்தைகள் ராஜஸ்தான், ஒடிசா, பீகார், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய ஐந்து மாநிலங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களில், ஒட்டுமொத்த குழந்தைகளில் (பதில் அளித்த 245 பேர்களில்), 40% ஒடிசாவைச் சேர்ந்த குழந்தைகள். 25% பீகாரையும், 15% மேற்கு வங்காளத்தையும், 8% உத்தரப் பிரதேசத்தையும், 5% ராஜஸ்தானையும் சேர்ந்த குழந்தைகள். வேறு சிலர் சத்தீஸ்கர், அசாம், ஜார்க்கண்ட் மாநிலங்களில் இருந்து புலம் பெயர்ந்திருப்பதாக தெரிவித்தனர்.

புலம் பெயர்தல் பெரிய அளவுக்கு மூன்றுவிதமான முறைகளில் நடந்திருக்கிறது. புலம் பெயர்ந்த குடும்பங்களில் 40% அவர்களோடு வேலை செய்யும் மற்ற

தொழிலாளர்களால் அழைத்து வரப்பட்டுள்ளனர். 24% ஏஜெண்டுகளாலும், 22% ஒப்பந்ததாரர்களாலும் கொண்டு வரப்பட்டவர்கள்.




*வரைபடம் 04: பெற்றோர்களுடன் வந்துள்ள மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகள் மற்றும் வேலைக்காக வந்துள்ள மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளின் சொந்த மாநிலங்கள்.*


## 4.2. வீட்டு வசதி

பொது முடக்கமானது, ஒவ்வொருவரையும் குறிப்பிட்ட காலத்துக்கு அவர்களது வீடுகளோடு கட்டுப்படுத்தி வைத்துவிட்டது. நல்ல நாட்களிலேயே குழந்தைகளால் நீண்ட காலம் வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடக்க முடியாது. ஒரு நாளின் பெரும்பகுதி நேரம் பள்ளிக்கூடம் வீட்டுக்குள்ளேயே வரும் நிலையில், ஆன்லைன் வகுப்புகளுக்கு வீட்டு வசதி முக்கியம். வீட்டின் தரம், அறைகளின் எண்ணிக்கை, தனிமை, கட்டமைப்பு வசதிகள் (முதன்மையாக மின்சாரம், மொபைல் போன்கள் செயல்படும் எல்லைக்குள் இருப்பது, இன்டர்நெட் இணைப்பு, தண்ணீர், துப்புரவு) ஆகியவை முக்கியமாகும். பதில் அளித்தவர்களில் பெரும்பான்மையினர் (62%) ஒற்றை அறை குடியிருப்புகளில் வசிப்பதால், இவற்றில் பெரும்பகுதி வசதிகளுக்கு வாய்ப்பில்லை.

போதிய வீட்டு வசதியைப் பெறுவதற்கான அடிப்படை உரிமை என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 21-வது பிரிவினால் பாதுகாக்கப்பட்டுள்ள உயிர் வாழ்வதற்கான உரிமையில் இருந்து எழுந்ததாகும். 2022-க்குள் அனைவருக்கும் வீட்டு வசதி என்பது இந்திய அரசின் அறிவிக்கப்பட்ட இலக்காகும். ஒவ்வொரு வீட்டுக்கும் 24 மணி நேரமும் குழாய் மூலம் குடிநீர் வழங்குதல் உள்பட தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய வீட்டு வசதி என்பதுதான் தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டம் 2023 ஆகும். 2030-க்குள் அனைவருக்கும் போதுமான, கண்ணியமான வீட்டு வசதி வழங்க வேண்டும் என்று வளங்குன்றா வளர்ச்சி இலக்கு (SDG) 11, குறியீடு11.1 ஆகியவை குறிப்பிடுகின்றன.

புலம்பெயர் தொழிலாளர்களின் வீட்டு வசதி நிலைமைகள் அதிக நெரிசலாகவும், மோசமான கட்டமைப்புகளுடனும், தண்ணீர், மின்சாரம், துப்புரவு வசதிகள் இல்லாமலும் இருப்பதாக இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. செங்கல் சுவர்கள், சிமென்ட் தரை, ஆஸ்பெஸ்டாஸ் கூரையுடன் கூடிய வீடுகளில் தங்கியிருப்பதாக நமது மாதிரியில் ஆய்வு செய்யப்பட்ட 182 (39%) குழந்தைகள் தெரிவித்தனர். செங்கல் சுவர்கள், சிமென்ட் தரை, கான்கிரீட் அல்லது ஓட்டுக் கூரையுடன் கூடிய வீடுகளில் இருப்பதாக 157 (33.6%) குழந்தைகள் கூறினர். 205 (43%) பேர் வாடகை வீடுகளில் இருந்தனர்.138 பேருக்கு (29.6%) அவர்களுக்கு வேலை அளிப்பவர்கள் வீடுகள் ஏற்பாடு செய்திருந்தனர். 40 பேர் (8.5%) வீட்டு உரிமையாளரிடம் அனுமதி பெறாமலேயே தங்கியிருப்பதாக குறிப்பிட்டனர். 70 பேருக்கு (16.3%) மட்டுமே சொந்த வீடுகள் இருந்தன. குழந்தைகளில் பெரும்பகுதியினர் (288, 62%) ஒரே ஒரு அறை மட்டுமே உள்ள வீடுகளில் வசிப்பதாகக் கூறினர்.


வாழும் இடங்கள் எவ்வளவு நெரிசலாக இருக்கின்றன என்பதையும், இதுதான் பொதுவான நிலவரம் என்பதையும் இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இவை வாழ்க்கை நிலைமைகளின் தரத்தை குறைக்கின்றன, நலவாழ்வுக்கும், குழந்தைகளின் வள வாழ்வுக்கும் ஆபத்தாக இருக்கின்றன. பெரும்பான்மையினர் (288, 62%) ஒரே ஒரு அறை மட்டுமே உள்ள வீடுகளில் வசிப்பதாகக் கூறியிருப்பதாலும், பல வீடுகளில் ஐந்துக்கும் அதிகமானவர்கள் இருப்பதாலும், குறிப்பாக இந்தப் பெருந்தொற்று காலப் பின்னணியில் இது கவலை அளிப்பதாகும். 115 பேர் (24.6%) தங்கள் வீடுகளில் இரண்டு அறைகள் இருப்பதாகவும், 43 பேர் (9%) மூன்று அறைகள் உள்ளதாகவும், 20 பேர் (4%) மட்டுமே நான்கு அறைகள் இருப்பதாகவும் கூறினர்.




*வரைபடம் 05: அறைகளின் எண்ணிக்கை*

### 4.3. பள்ளிகளின் வகை


பதில் அளித்தவர்களில் பெரும்பான்மையினர் (419-ல் 288, 69%) அவர்களது சொந்த மாநிலத்தில் அரசுப் பள்ளிகளிலும்,11% தனியார் பள்ளிகளிலும் படித்துக் கொண்டிருந்தவர்கள். பொது முடக்கத்துக்கு சற்று முன்பு வரையில் பள்ளிக்கு போய்க் கொண்டிருந்த போதிலும், இப்போது எந்தப் பள்ளிக்கும் போகவில்லை என அவர்களில் 27 பேர் (6%) கூறினர். பெருந்தொற்று காரணமாக எழுந்த நிதி நெருக்கடியினால், அவர்கள் பள்ளியிலிருந்து இடை நிற்க வேண்டியதாயிற்று. பள்ளியில் இருந்து இடை நின்றவர்களில் 14 (51%) பேர் 9 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.




*வரைபடம் 06: தற்போது படித்துவரும் பள்ளிகளின் வகை*

### 4.4. பதில் அளித்தவர்களின் கல்வி

பதில் அளித்த Module B (தங்கள் வேலைக்காக மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகள்) மற்றும் Module C1 (வேலை செய்வதற்காக மாநிலத்துக்கு-உள்ளேயே (மாவட்டங்களுக்கு இடையே) புலம் பெயர்ந்த குாந்தைகள்) வகைகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் படிப்பைத் தொடரவில்லை என்பதால், Module A மற்றும் Module C2 வகைகளைச் சேர்ந்த குழந்தைகளிடம் மட்டும் தரவுகளை சேகரிக்க நாங்கள் முடிவு செய்தோம். புலம் பெயர்ந்த குழந்தைகளில் 162 (38.6%) பேர் தற்போது தொடக்கப் பள்ளிகளில் உள்ளனர். 134 (31.9%) பேர் நடுநிலைப் பள்ளிகளில் பயில்கிறார்கள். 71 (16.9%) பேர் உயர் நிலைப் பள்ளிகளில் படிக்கிறார்கள். 38 (9%) பேர் மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் தொடர்கிறார்கள். 12 (2.8%) பேர் படிக்கவில்லை அல்லது எந்தப் பள்ளியிலும் சேரவில்லை (வரைபடம் 07).




*வரைபடம் 07: பதில் அளித்தவர்கள் தற்போது படிக்கும் வகுப்பு*

### 4.5. தங்கியுள்ள மாநிலத்தில் கற்றல் சூழல்


மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயரும் தொழிலாளர்பெற்றோர்களுடன் தமிழ்நாடு வந்த குழந்தைகள் அவர்களது பெற்றோர்களின் வேலைக் காலம் முடிந்தவுடன் தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்புகின்றனர். இந்த குறிப்பிட்ட கால புலம்பெயர்தல் காரணமாக, குறிப்பாக செங்கல் சூளை தொழிலாளர்களைப்

பொருத்தவரையில், அவர்களது குழந்தைகளின் கல்வி கடுமையாக பாதிக்கப்பட்டது. தங்களது பெற்றோர்களது ஒப்பந்தப் பணிக் காலம் முடியும் வரையில் ஆறு மாதங்களுக்கு மட்டுமே ஒரு இடத்தில் தங்கியிருப்பதாக அவர்களில் ஐந்து பேரில் ஒருவர் (46, 20.8%) கூறினர். ஆறு மாதங்களுக்குத் தான் செங்கல் சூளைகளில் வேலை என்பதையும் அதன் பிறகு அவர்கள் தங்கள் சொந்த மாநிலங்களுக்குத் திரும்ப முனைகின்றனர் என்பதையும் இந்த நேர்காணல்கள் வெளிப்படுத்தியுள்ளன. சிறிது காலத்துக்குப் பிறகு அவர்கள் இன்னொரு மாநிலத்துக்கு புலம் பெயர்கின்றனர் அல்லது தமிழ்நாட்டுக்குத் திரும்பி வருகின்றனர்.

தங்கள் பெற்றோர்களுடன் மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்து வந்த குழந்தைகள் 221 பேரில், ஏறக்குறைய சரிபாதிப் பேர் (110, 49.6%) ஆண்டுக்கு ஒரு முறை (74, 33.4%) அல்லது ஒன்றுக்கும் அதிகமான முறை (36, 16.2%) புலம் பெயர்ந்தவர்கள். அடிக்கடி புலம் பெயர்வது, பள்ளியில் கல்வி கற்பதை கெடுதல் ஏற்படுத்தும் வகையில் பாதிக்கிறது. மிகவும் அடிக்கடி புலம் பெயரும் குழந்தைகளை இன்னும் பெரிய அளவில் பாதிக்கிறது. ஆக குழந்தைகளுக்கு கல்வி மறுக்கப்படுகிறது. மேலும், அடிக்கடியும் ஒழுங்கில்லாமலும் புலம் பெயர்வதன் காரணமாக அவர்களால் முறையாக பள்ளிக்குச் செல்ல முடிவதில்லை. இதன் விளைவாக, பல குழந்தைகள் பள்ளியில் இருந்து இடையில் நின்றுவிடுகிறார்கள். சில நேரங்களில் செங்கல் சூளைகளில் அவர்களது பெற்றோர்களுடன் சேர்ந்து வேலை செய்வதற்கு கட்டாயப்படுத்தப்படுகிறார்க்ள்.

தங்கள் சொந்த மாநிலத்துக்கு அதிகமாக அடிக்கடி போவதில்லை அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே போவது என்று இவர்களில் கால்வாசிப் பேர் (55, 24.8%) குறிப்பிட்டனர். சொந்த மாநிலத்துக்கு திரும்பியதும் பள்ளிக் கல்வியைத் தொடர்வது பற்றி கேட்டதற்கு, தாங்கள் படிப்பை தொடர்வதில்லை என்று 134 (60.6%) பேர் பதில் அளித்தனர் (Figure 08). இவர்களில் 80 (59.7%) பேர் ஆண் குழந்தைகள். கல்வி தடைப்படும் விகிதம் பெண் குழந்தைகளைக் காட்டிலும் ஆண் குழந்தைகள் மத்தியில் அதிகமாக இருக்கிறது. தமிழ்நாட்டில் இருந்து தங்கள் சொந்த மாநிலத்துக்குத் திரும்பியதும் பள்ளிக்குச் செல்வதாக 87 (39%) பேர் மட்டுமே தெரிவித்தனர்.

**சொந்த மாநிலத்துக்கு திரும்பியதும் படிப்பைத் தொடருதல்**




*வரைபடம் 08: சொந்த மாநிலத்துக்கு திரும்பியதும் படிப்பைத் தொடருதல்*

## 4.6. பெற்றோர்களின் கல்வித் தகுதி

குழந்தைகளின் கல்விரீதியான, நடத்தை ரீதியான விளைவுகளை முன்னறிவிக்கும் ஒரு முக்கியமான அம்சம் பெற்றோர்களின் கல்வி நிலையாகும். புலம் பெயர்ந்த குடும்பங்களின் கல்வித் தகுதியையும், எழுதப் படிக்கத் தெரியாத பெற்றோர்களின் தாக்கம் அவர்களது குழந்தைகளின் மீது எப்படி இருக்கும் என்பதையும் நாங்கள் வெளிக் கொண்டு வருவதற்கு முயன்றிருக்கிறோம். குழந்தைகளின் கல்வியில் தாய், தந்தையின் பங்களிப்பு மிகப்பெரும் அளவுக்கு முக்கியம் என்பதை பல்வேறு ஆய்வுகள் கண்டறிந்து கூறியுள்ளன. பெற்றோர்கள் தங்களது சொந்த கல்வி சாதனை நிலைக்கு ஏற்ப அவர்களது குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்கவோ அல்லது தங்களது பிள்ளைகளுக்கு கூடுதலாக தனிப்பயிற்சி தருவதற்கான ஏற்பாடுகளை செய்யவோ இயலும். குறைந்த கல்வி சாதனைத் தகுதிகளைக் கொண்டுள்ள பெற்றோர்கள் வழிகாட்டுதல் மற்றும் ஊக்கம் இல்லாத காரணத்தால் கல்வியின் மதிப்பை உணர்வதில்லை. அப்படியே உணர்ந்தாலும், அடைவதற்கு எவ்வித நியாயமான வாய்ப்புகளும் இல்லை என தாங்கள் கருதும் கனவுகளை எட்டுவதற்கு தங்கள் குழந்தைகளுக்கு ஊக்கம் அளிக்க அவர்கள் அஞ்சுகிறார்கள். மேலும் கனவு காணாமல் இருப்பதே நிலைமையை சமாளிக்க உதவும் வழிமுறை எனக் கருதுகிறார்கள். எப்படிப் பார்த்தாலும், பள்ளியில் முறையாக அதிகம் படிக்காத பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் பள்ளிக் கல்வி பெறுவதற்கு அதிகம் தடையாகத்தான் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த குழந்தைகள் 221 பேரில் 176 பேர் அவர்களது தந்தையருடன் வசிக்கின்றனர். இவர்களில் 68 (38.6%) தந்தைகள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். 39 (22%) பேர் தொடக்கக் கல்வியை முடித்தவர்கள். 0.5% பேர் மட்டுமே பட்டதாரிகள். குழந்தைகளில் 14 (7.9%) பேருக்கு அவர்களது தந்தைகளின் கல்வித் தகுதி பற்றி எதுவும் தெரியாது. பதில் அளித்த 221 குழந்தைகளில் 161 (72%) பேர் அவர்களது தாயார்களுடன் வசிக்கிறார்கள். தாயார்களில் 76 (47%) பேருக்கு முறையான கல்வியறிவு எதுவும் இல்லை.

**அட்டவணை 2: மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர் குழந்தைகளது பெற்றோர்களின் கல்வித் தகுதி**

| | தந்தை | தாய் | காப்பாளர் | 1-வது உடன்பிறப்பு | 2-வது உடன்பிறப்பு | 3-வது உடன்பிறப்பு | 4-வது உடன்பிறப்பு | 5வது உடன்பிறப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| **படிக்காதவர்** | 68 | 76 | 3 | | 9 | 4 | 2 | 3 |
| **தொடக்க நிலை** | 39 | 35 | | 30 | 23 | 11 | 1 | |
| **நடு நிலை** | 28 | 15 | | 34 | 15 | 4 | 1 | |
| **உயர் நிலை** | 23 | 11 | | 21 | 9 | | 2 | |
| **மேல் நிலை** | 3 | 5 | | 8 | 4 | 1 | | |
| **பட்டதாரி** | 1 | 1 | | | 0 | | | |
| **தொழில் கல்வி** | | 0 | | | 0 | | | |
| **தெரியாது** | 14 | 18 | 3 | | 1 | | | |
| **மற்றவர்கள்** | | | | | 3 | 1 | 1 | |
| **மொத்தம்** | **176** | **161** | **6** | **93** | **64** | **21** | **7** | **3** |

*பலவகை வாய்ப்புகள் அனுமதிக்கப்பட்டிருப்பதால் மொத்த எண்ணிக்கைகள் கூட்டப்படவில்லை*

மறுபுறம், தங்கள் பெற்றோர்களுடன் மாநிலத்துக்கு - உள்ளேயே புலம்பெயர்ந்த 198 குழந்தைகளில் 186 (9%) பேர் அவர்களது தந்தைகளுடன் வசிக்கிறார்கள். தந்தைகளில் 54 (29%) பேர் படிக்காதவர்கள். தந்தைகளில் 56 (30%) பேர் தொடக்கப் பள்ளி நிலைக் கல்வியை முடித்தவர்கள். தங்களது தந்தைகள் நடுநிலைப் பள்ளிக் கல்வி வரை படித்தவர்கள் என 26% குழந்தைகள் தெரிவித்தனர். தந்தைகளில் எவரும் பட்டதாரிகளோ அல்லது தொழில்முறைக் கல்வி தகுதி உடையவர்களோ இல்லை. மாநிலத்துக்கு- உள்ளேயே புலம்பெயர்ந்த 178 (90%) குழந்தைகள் அவர்களது தாய்களுடன் வசிக்கிறார்கள். பதில் அளித்த 178 பேரில், 46 (25%) தாயார்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். 73 (41%) தாயார்கள் தொடக்கப் பள்ளி நிலைக் கல்வியை முடித்தவர்கள். மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளின் பெற்றோர்களுடன் ஒப்பிடுகையில் மாநிலத்துக்கு -

உள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளின் பெற்றோர்கள் மத்தியில் எழுதப் படிக்கத் தெரியாத நிலை அதிகமாக இருக்கிறது.

| அட்டவணை 3. மாநிலத்துக்கு உள்ளேயே புலம்பெயர் குழந்தைகளது பெற்றோர்களின் கல்வித் தகுதி | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தந்தை | தாய் | காப்பாளர் | 1-வது உடன்பிறப்பு | 2-வது உடன்பிறப்பு | 3-வது உடன்பிறப்பு | 4-வது உடன்பிறப்பு | 5வது உடன்பிறப்பு |
| **படிக்காதவர்** | 54 | 46 | 1 | - | - | - | 7 | 3 |
| **தொடக்க நிலை** | 56 | 73 | - | 15 | 10 | 2 | - | - |
| **நடு நிலை** | 50 | 27 | - | 14 | 2 | - | - | - |
| **உயர் நிலை** | 22 | 23 | - | 4 | - | - | - | - |
| **மேல் நிலை** | 1 | 3 | - | 2 | - | - | - | - |
| **பட்டதாரி** | 0 | 1 | - | - | - | - | - | - |
| **தொழில் கல்வி** | 0 | 0 | - | - | - | - | - | - |
| **தெரியாது** | 3 | 5 | 1 | - | - | - | - | - |
| **மொத்தம்** | **186** | **178** | **2** | **35** | **12** | **2** | **7** | **3** |

## 4.7. பெற்றோர்கள் வேலையின் வகை அல்லது வேலை செய்யும் துறை

தங்களது பெற்றோர்களுடன் புலம் பெயர்ந்துள்ள 419 குழந்தைகளின் பெற்றோர்களில் 13% பேர் நூற்பு ஆலைகளில் பணி புரிகின்றனர். 36% பேர் செங்கல் சூளைகளிலும், 14% பேர் ஆடை தயாரிப்பிலும், 14% பேர் தொழிற்சாலை தொழிலாளர்களாகவும் வேலை செய்கின்றனர்.

| அட்டவணை 4. பெற்றோர்கள் வேலையின் வகை / வேலை செய்யும் துறை | |
|---|---|
| நூற்பு ஆலைகள் | 57 |
| செங்கல் சூளைகள் | 132 |
| மரபான கைவினைத் தொழில்கள் | 13 |
| குறிசொல்லும் பூம் பூம் மாட்டுக்காரர்கள் | 2 |
| கட்டுமானம் | 23 |
| ஆடை தயாரிப்பு | 59 |
| தொழிற்சாலைகள் | 52 |
| விற்பனையாளர்கள் | 18 |
| தினக் கூலித் தொழிலாளர்கள் | 16 |
| மர வேலைக்காரர்கள் | 16 |
| வண்ணம் பூசுபவர்கள் | 2 |
| விவசாயிகள் | 19 |
| கூடை முடைபவர்கள் | 2 |
| மீன் பிடிப்பவர்கள் | 7 |
| மற்றவர்கள் | 1 |
| **மொத்தம்** | **419** |

## 4.8. தினசரி வழக்கம்

பெருந்தொற்றை எதிர் கொள்வதற்கான வியூகங்களில் செய்யப்படும் வேகமான மாற்றங்களால் குறிப்பாக அதிகம் பாதிக்கப்படுவோரில் குழந்தைகளும் அடங்குவர். எதிர்பாராத பொதுமுடக்கங்கள்,

தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் நடத்தை விதிகள் ஆகியவை மன அமைதியை குலைத்து, பல்வேறு உளவியல் பிரச்சினைகளால் பாதிக்கப்படும் நிலைக்கு அவர்களைத் தள்ளுகின்றன.

நேரத்தைப் போக்குவதற்கு எளிதான, சோம்பலான வழிகளை குழந்தைகள் கண்டறிகிறார்கள். எங்கள் ஆய்வில் பதிலளித்த 419 பேரில், 215 (51%) குழந்தைகள், பொது முடக்கத்தின்போது தங்கள் குடியிருப்பு பகுதியில் சுற்றித் திரிவது வழக்கம் எனக் கூறினர். இவர்களில் 40%பேர் பெரும்பகுதி நேரம் வீட்டில் தூங்கிக் கழிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

பொதுமுடக்கத்தின் போது வீட்டில் டி.வி. பார்ப்பதாக புலம் பெயர்ந்த குழந்தைகளில் 32% பேர் கூறியபோதிலும், 6.5% பேர் மட்டுமே ஆன்லைன் வகுப்புகளில் அல்லது டி.வி. கல்வி நிகழ்ச்சிகளில் பங்கேற்பதாக தெரிவித்தனர். நண்பர்களுடன் விளையாட வாய்ப்பு கிடைத்ததாக 40% பேர் குறிப்பிட்டனர். கடந்த மாதம் தாங்கள் படித்துக் கொண்டிருந்ததாக 16% பேர் மட்டும் கூறினர்.

**அட்டவணை 5. புலம் பெயர்ந்த குழந்தைகளின் தினசரி வழக்கம்**

| செயல்பாடு | ஆண் | % | பெண் | % | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|
| பள்ளிக்குச் செல்லுதல் | 16 | 3.8% | 29 | 6.9% | 45 | 10.7% |
| குடியிருப்பை சுற்றித் திரிதல் | 114 | 27.2% | 101 | 24.1% | 215 | 51.3% |
| வீட்டு வேலைகள் செய்தல் | 57 | 13.6% | 56 | 13.4% | 113 | 27.0% |
| தம்பி, தங்கைகளை கவனித்தல் | 23 | 5.5% | 23 | 5.5% | 46 | 11.0% |
| குடும்ப முதியவர்களை கவனித்தல் | 9 | 2.1% | 7 | 1.7% | 16 | 3.8% |
| தூக்கம் | 98 | 23.4% | 68 | 16.2% | 166 | 39.6% |
| டி.வி. பார்த்தல் | 73 | 17.4% | 61 | 14.6% | 134 | 32.0% |
| ரேடியோ கேட்டல் | 4 | 1.0% | 3 | 0.7% | 7 | 1.7% |
| படிப்பு (வீட்டுப் பாடம், புத்தக வாசிப்பு) | 35 | 8.4% | 32 | 7.6% | 67 | 16.0% |
| மொபைல் போனில் பேசுதல் அல்லது மெசேஜ் செய்தல் முதலியவை ஆன்லைன் வகுப்பு அல்லது டி.வி. கல்வி நிகழ்ச்சிகளில் பங்கேற்றல் | 20 | 4.8% | 9 | 2.1% | 29 | 6.9% |
| பெற்றோர்களுடன் வேலை இடத்துக்குச் சென்று வேலையில் | 16 | 3.8% | 11 | 2.6% | 27 | 6.4% |
| அவர்களுக்கு உதவி செய்தல் | 20 | 4.8% | 20 | 4.8% | 40 | 9.5% |
| நண்பர்களுடன் விளையாடுதல் | 96 | 22.9% | 75 | 17.9% | 171 | 40.8% |
| பொருளாதார ரீதியில் குடும்பத்துக்கு ஆதரவாக வேலைக்கு செல்லுதல் | 14 | 3.3% | 3 | 0.7% | 17 | 4.1% |
| மற்றவை | 7 | 1.7% | 1 | 0.2% | 8 | 1.9% |
| **மொத்தம் பதில் அளித்தவர்கள் (n) 419** | | | | | | |

குழந்தைகளின் வாழ்க்கையில் குழந்தை தொழிலாளர் முறை ஊடுருவல் செய்திருக்கிறது. தங்களது பெற்றோர்களுடன் வேலை இடத்துக்கு சென்று வேலையில் அவர்களுக்கு உதவி செய்வதாக ஏறக்குறைய 10% குழந்தைகள் தெரிவித்தனர். பொருளாதார ரீதியில் தங்களது குடும்பங்களுக்கு ஆதரவாக, பொது முடக்கத்தின்போது தாங்கள் வேலைக்குச் செல்வதாக 4% பேர் குறிப்பிட்டனர். இவர்களில் 3.3% பேர் ஆண் குழந்தைகள். 3% பேர் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள். கட்டாயத்தின் பேரில் வேலைக்குச் செல்வது மன அழுத்தத்துக்கு வழி வகுக்கிறது. உழைப்பவர்கள் அணியில் சேர்ந்துவிட்டாலே போதும் நிரந்தரமாக பள்ளியில் இருந்து இடை நிற்பதற்கான வாய்ப்பு அதிகம் என்பதால், ஏற்கெனவே உள்ள பிரச்சினைகளுடன் இதுவும் சேர்ந்துகொள்ளும் நிலை உருவாகிறது.

## 4.9. தாய்மொழி

### *4.9.1. ஆசிரியர்களை அவர்களின் தாய்மொழியில் அணுகுதல்*

இந்த துணைப்பிரிவில், தாய்மொழி கல்வி பயிற்று மொழியாக இருப்பதன் முக்கியத்துவத்தை நாம் பகுப்பாய்வு செய்கிறோம் (மேலே இருக்கிற 2.3-ஐப் பார்க்கவும்). மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த பெற்றோருடன் இணைந்து சென்ற வினாப் பட்டியலுக்குப் பதிலளித்த 221 குழந்தைகளை நாங்கள் பரிசீலித்துள்ளோம். புலம் பெயர்ந்த குழந்தைகளுக்கு அவர்களின் தாய்மொழியில் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களை அணுக முடியுமா என்பதைக் கண்டறிவது இதன் நோக்கமாகும். இந்தப் பகுப்பாய்வு செய்வது முக்கியமானது, ஏனெனில் குழந்தைகள் தங்கள் தாய்மொழியில் கற்றுக்கொள்ளும்போது, அறிவார்ந்த சிந்தனை மற்றும் எழுத்தறிவு போன்ற பிற அத்தியாவசிய திறன்கள் ஒரே நேரத்தில் வளர்ச்சி அடைகிறது மற்றும் இது ஒரு குழந்தையின் சமூக, தனிப்பட்ட மற்றும் கலாச்சார அடையாளத்தை உருவாக்கும் ஒரு ஊடகமாகிறது.

| அட்டவணை 6. புலம்பெயர்ந்த குழந்தைகள் வகுப்பு வாரியாக தாய்மொழியில் கற்கும் அணுகல் | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் | மொத்தம் | துறை | மொத்தம் | வகுப்பு | மொத்தம் |
| ஈரோடு | 32 | நூற்பாலைகள் | 6 | ஆரம்பக் கல்வி | 55 |
| நாமக்கல் | 5 | செங்கல் சூளை | 62 | நடுத்தரக் கல்வி | 30 |
| திருவள்ளூர் | 62 | கட்டுமானம் | 1 | உயர்நிலைக் கல்வி | 6 |
| திண்டுக்கல் | 2 | ஆடைகள் | 30 | மேல்நிலைக் கல்வி | 5 |
| | | மற்றவைகள் | 2 | படிக்கவில்லை/ பள்ளியில் சேரவில்லை | 3 |
| | | | | மற்றவைகள் | 2 |
| **மொத்தம்** | **101** | **மொத்தம்** | **101** | **மொத்தம்** | **101** |

குாந்தைகள் அவர்களது சொந்த மொழியில் கற்பிக்கப்படும் போது அதிகமாகக் கற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியுறுகிறார்கள். அவர்கள் பள்ளியை அதிகமாக இரசிக்கிறார்கள். மேலும் நன்றாகத் தெரிந்த ஒரு மொழியைப் பேசும் மாணவர்களும் ஆசிரியர்களும் அவர்களைச் சூழ்ந்திருப்பது தாங்கள் வீட்டில் இருப்பதுபோன்று உணர்கிறார்கள். அவர்கள் தங்களுக்குள் தன்னம்பிக்கையுடனும் மற்றும் புதிய கருத்துகளை எளிதாகவும் எடுத்துக்கொள்கிறார்கள், இது அறிவு செறிந்த கல்வித் திறனுக்கு வழிவகுக்கிறது.

இந்த ஆய்வில், 221 புலம்பெயர்ந்த குழந்தைகளில் 101 (46 விழுக்காடு) தங்கள் தாய்மொழியில் கற்பிக்க மொழி ஆசிரியர்களை அணுக இயலுவதாகத் தெரிவித்தனர். அவர்களில் 62 (61 விழுக்காடு) பேர் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ளனர், அவர்கள் அனைவரும் செங்கல் சூளைத் தொழிலாளர்களின் குழந்தைகள் ஆவர். 55 (54 விழுக்காடு) ஆரம்பப் பள்ளியிலும், 30 (29.7 விழுக்காடு) நடுநிலைப் பள்ளியிலும் படித்து வருகின்றனர். உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 11 (10.8 விழுக்காடு) குழந்தைகள் மட்டுமே படித்து வருகின்றனர். அதில் 5.9 விழுக்காடு நூற்பாலைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு மட்டுமே தாய்மொழி ஆசிரியர்களை அணுக முடிகிறது.

ஆடைத் தொழிலாளர்களின் குழந்தைகளில் 29.7 விழுக்காடு பேரும், செங்கல் சூளைத் தொழிலாளர்களில் 61.3 விழுக்காடு பேரும் இந்த வசதியைப் பெற்றுள்ளனர். ஆடைத் தொழிலாளர்களின் குழந்தைகளில் 29.7 விழுக்காட்டினருக்கும் மற்றும் செங்கல் சூளை தொழிலாளர்களில் 61.3 விழுக்காட்டினருக்கும் அத்தகைய அணுகல் இருக்கிறது. நூற்பாலைகள் மற்றும் ஆயத்த ஆடை தொழிலாளர்களின் குழந்தைகளை விட செங்கல் சூளைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தாய் மொழியில் கல்வி கற்பதற்கான வாய்ப்பு சற்று அதிகம் உள்ளது.

**அட்டவணை 7. புலம்பெயர்ந்த குழந்தைகள் தாய்மொழியில் கற்பதற்கான அணுகல்**

| மாவட்டம் | மொத்தம் | துறை | மொத்தம் | படிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஈரோடு | 2 | நூற்பாலைகள் | 24 | ஆரம்பக் கல்வி | 9 |
| நாமக்கல் | 15 | செங்கல் சூளை | 3 | நடுத்தரக் கல்வி | 11 |
| திருவள்ளூர் | 3 | கட்டுமானம் | | உயர்நிலைக் கல்வி | 6 |
| திண்டுக்கல் | 9 | ஆடைகள் | | மேல்நிலைக் கல்வி | 2 |
| | | மற்றவைகள் | 2 | படிக்கவில்லை/ பள்ளியில் சேரவில்லை | 1 |
| **மொத்தம்** | **29** | **மொத்தம்** | **29** | **மொத்தம்** | **29** |

### 4.9.2. தாய்மொழி அல்லாத ஆசிரியர்களால் ஏற்படும் பின்விளைவு

கீழே உள்ள தரவுகள் ஒரு குழந்தையின் தாய்மொழியிலான பள்ளிப் படிப்பில் பற்றாக்குறை இருப்பதைக் காட்டுகிறது. கல்வி உரிமையை நிறைவேற்றவும், குழந்தைக்கு தரமான கல்வியை வழங்கவும் இது சரிசெய்யப்பட வேண்டும்.

மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான குழந்தைகள் (36 விழுக்காடு) தங்களுக்கு தாய்மொழி ஆசிரியர்களை அணுக முடியவில்லை என்று தெரிவித்தனர், ஆனால் அவர்கள் இன்னும் தங்கள் படிப்பைத் தொடர முயற்சிக்கிறார்கள். அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாநிலங்களுக்கு இடையேயான புலம்பெயர்ந்த 221 குழந்தைகளில் 102 பேருக்கு, பெரும்பாலான பாடங்கள் தமிழில் கற்பிக்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் தமிழ் பயிற்று மொழியாக இருப்பதால், தமிழில் கற்பிப்பது இந்தக் குழந்தைகளுக்கு விருப்பமாக இருக்காது.

**அட்டவணை 8, தாய்மொழியில் கற்பதற்கான அணுகல் இல்லாமை ஆனால் படிப்பைத் தொடர முயற்சிப்பது: வகுப்பு வாரியாக**

| மாவட்டம் | மொத்தம் | துறை | மொத்தம் | படிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஈரோடு | 20 | நூற்பாலைகள் | 8 | ஆரம்பக் கல்வி | 23 |
| நாமக்கல் | 2 | செங்கல் சூளை | 2 | நடுத்தரக் கல்வி | 24 |
| திருவள்ளூர் | 58 | கட்டுமானம் | 13 | உயர்நிலைக் கல்வி | 20 |
| திண்டுக்கல் | | பாரம்பரிய கை வினைப் பொருட்கள் | 10 | மேல்நிலைக் கல்வி | 10 |
| | | ஆடைகள் | 11 | படிக்கவில்லை/ பள்ளியில் சேரவில்லை | 2 |
| | | மற்றவைகள் | 36 | மற்றவைகள் | 1 |
| **மொத்தம்** | **80** | **மொத்தம்** | **80** | **மொத்தம்** | **80** |

தாய்மொழயில் பயிற்றுவிப்பிற்காக மாற்று அல்லது துணை வழிமுறைகள் ஆராயப்பட வேண்டும். ஒரு பகுதியில் ஒரு குறிப்பிட்ட மொழியில் பள்ளிப்படிப்பைத் தொடங்குவதற்கு போதுமான குழந்தைகள் இருந்தால், அதை நடத்தும் மாநில அரசு ஒப்புக்கொண்டால், சொந்த மாநில அரசின் உதவியுடன் நடத்த முயற்சி செய்யலாம்.

### 4.10. ஊரடங்கு / பள்ளி அடைப்பின் போது தங்கள் பெற்றோருடன் வந்த மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த குழந்தைகளின் கற்றலுக்கான அணுகல்

பள்ளி அடைப்பின் போது பெரும்பாலான (59 விழுக்காடு) குழந்தைகளுக்கு கல்விக்கான அணுகல் கிடைக்கவில்லை (அட்டவணை 9). கல்விக்கான

| அட்டவணை 9. ஊரடங்கு / பள்ளி அடைப்பின்போது கற்றல் அணுகல் | |
|---|---|
| ஆம் | 90 |
| இல்லை | 131 |
| மொத்தம் | **221** |

அணுகல் இல்லாதது ஒரு குழந்தையின் கற்றலின் முன்னேற்றத்திற்கு கடுமையான தீங்கு விளைவிக்கும், ஏனெனில் இது திட்டமிடப்படாத மற்றும் காலவரையற்ற பள்ளித் தடைகளுக்கு வழிவகுக்கிறது. பெருந்தொற்றின் போது கல்விக்கான அணுகல் எவ்வாறு சிறப்பு உரிமையுடன் நேரடியாக தொடர்புடையது என்பதை இது மேலும் நிரூபிக்கிறது.

அணுகல் இல்லாமை படித்தளங்களில் எவ்வித குறிப்பிடத்தக்க மாறுபாட்டையும் காட்டவில்லை (அட்டவணை 9). ஊரடங்கின் போது பாலின ரீதியான அணுகலானது சிறுவர்களுக்கு மிகவும் வளைந்து கொடுத்திருக்கிறது. பள்ளி மூடப்பட்ட காலத்தில் கல்விக்கான அணுகல் கிடைத்த 90 குழந்தைகளில், 38 (40 விழுக்காடு) பேர் மட்டுமே சிறுமிகள். அணுகல் இல்லாத 131 பேரில் 82 பேர் (62.5 விழுக்காட்டினர்) சிறுமிகள்.

**அட்டவணை 10. ஊரடங்கு/பள்ளி அடைப்பின்போது கற்றலுக்கான அணுகல்**

| பதில் | ஆரம்பக் கல்வி | நடுத்தர கல்வி | உயர்நிலை கல்வி | மேல்நிலை கல்வி | படிக்கவில்லை/ பள்ளியில் சேரவில்லை | இதர | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஆம் | 37 | 29 | 15 | 8 | 1 | | **90** |
| இல்லை | 53 | 37 | 18 | 10 | 10 | 3 | **131** |

பள்ளி அடைப்பின் போது பெரும்பாலான (59 விழுக்காடு) குழந்தைகளுக்கு கல்விக்கான அணுகல் கிடைக்கவில்லை (அட்டவணை 10).

**அட்டவணை 11. ஊரடங்கு / பள்ளி அடைப்பின்போது பாலின அடிப்படையில் கற்றலுக்கான அணுகல்**

| பதில் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| ஆம் | 52 | 38 | **90** |
| இல்லை | 49 | 82 | **131** |

*மாநிலத்திற்குள் புலம்பெயர்ந்த பெற்றோருடன் வந்த குழந்தைகள்*

மாநிலத்திற்குள் புலம்பெயர்ந்தவர்கள் என்பது யாரெனில் ஒரு மாநிலத்திற்கு உள்ளேயே இடம் மாறி குடிபெயர்ந்தவர்கள். அவர்களுக்கும் இடையூறுகள் இருக்கும் என்றாலும், கலாச்சார உறவு மற்றும் நிர்வாக இசைவு காரணமாக, மாநிலங்களுக்கு இடையிலான புலம் பெயர்ந்தவர்களுக்கு ஏற்பட்டதைப் போன்று இந்த இடையூறு இருக்காது என்று எதிர்பார்க்கப்பட்டது.

இருப்பினும், மாநிலத்திற்குள் புலம்பெயர்ந்த 198 குழந்தைகளில், 28.7 விழுக்காடு மட்டுமே பள்ளி அடைப்பின் போது கற்றலுக்கான அணுகலைப் பெற்றுள்ளனர்.

| அட்டவணை 12. ஊரடங்கு / பள்ளி அடைப்பின்போது கற்றலுக்கான அணுகல் | |
|---|---|
| ஆம் | 57 |
| இல்லை | 141 |
| **மொத்தம்** | **198** |

விழுக்காடு மட்டுமே பள்ளி அடைப்பின் போது கற்றலுக்கான அணுகலைப் பெற்றுள்ளனர்.

**அட்டவணை 13. ஊரடங்கு/பள்ளி அடைப்பின்போது வகுப்பு வாரியாக கற்றலுக்கான அணுகல்**

| பதில் | ஆரம்பக் கல்வி | நடுத்தர கல்வி | உயர்நிலை கல்வி | படிக்கவில்லை/ பள்ளியில் சேரவில்லை | மேல்நிலை கல்வி | இதர | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஆம் | 17 | 22 | 12 | 6 | | | **57** |
| இல்லை | 53 | 46 | 26 | 14 | 1 | 1 | **141** |

அட்டவணை 14 அட்டவணை 11-ன் தொடர்புடையது, இது கல்விக்கான அணுகலுடன் மிகவும் தெளிவான பாலின ஏற்றத்தாழ்வுகளைக் குறிக்கிறது. இங்கு 55.3 விழுக்காடு சிறுமிகளுக்கு கல்வி கற்பதற்கான அணுகல் இல்லை.

பெருந்தொற்றின் போது இந்த மாணவர்களுக்கு டிஜிட்டல் அணுகலுக்கான வழிகள் இல்லை. சமூகத் திறன்கள் மற்றும் எதிர்கால வாய்ப்புகளின் அடிப்படையில் குழந்தைகள் மீதான இந்த கல்வியின்மையின் தாக்கத்தின் முழு அளவு படிப்படியாக மட்டுமே தெளிவாகும். பள்ளி மூடல்கள் எல்லொருக்குமான கல்வி உரிமையில் அதிகரித்து வரும் சமநிலையின்மை மற்றும் முதல் நிகழ்வில் கல்வியை அணுகுவதற்குத் தேவையான சிறப்புரிமை ஆகியவற்றில் அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வை மேலும் உயர்த்துகிறது.

*மாநிலம் விட்டு மாநிலம் மற்றும் மாநிலத்திற்கு உள்ளேயே புலம்பெயர்ந்த பெற்றோருடன் வந்த குழந்தைகள்*

பதிலளித்தவர்களில் 35 விழுக்காட்டினர் பள்ளி அடைப்பின் போது கற்றல் அணுகல் இருப்பதாக தெரிவித்தனர். அவர்களில் 61 விழுக்காட்டினர் மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகள் ஆவர். மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளுடன் ஒப்பிடுகையில் மாநிலத்திற்கு உள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளின் இந்த விகிதம் மிகவும் குறைவாக உள்ளது.

### 4.11. நிகழ்நிலைக் (ஆன்லைன்) கல்வி

2020-ம் ஆண்டின் தொடக்கத்தில், இருந்து கோவிட்-19 பெருந்தொற்று மக்களின் வாழ்க்கையை சீர்குலைத்தபோது, நிகழ்நிலை உலகமானது அதை அணுகக் கூடியவர்களின் உயிர்நாடியாக மாறியுள்ளது. வேலையிலிருந்து ஓய்வு வரை, கல்வி, சடங்குகள், திருமணங்கள் மற்றும் குடும்பச் சண்டைகள் என எவையெல்லாம் நிகழ்நிலைக்கு மாறமுடியுமோ, அவை அனைத்தும் நிகழ்நிலையில் இயக்கப்பட்டன.

| அட்டவணை 14. ஊரடங்கு / பள்ளி அடைப்பின்போது பாலின அடிப்படையில் கற்றலுக்கான அணுகல் | | | |
|---|---|---|---|
| பதில் | ஆண் | பெண் | மொத்தம் |
| ஆம் | 34 | 23 | **57** |
| இல்லை | 63 | 78 | **141** |

| அட்டவணை 15. பாலினம் வாரியாக நிகழ்நிலை வகுப்புகளில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை | |
|---|---|
| ஆம் | 147 |
| இல்லை | 272 |
| **மொத்தம்** | **419** |

உலகம் முழுவதும் இந்தப் பெருந்தொற்று கல்வியை ஆழமாகப் பாதித்தது. கிருமி பரவுவதைத் தடுக்க பள்ளிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டதால், பலர் கற்பித்தல் மற்றும் கற்றல் செயல் முறையைத் தொடரும் முயற்சியில் தொழில் நுட்பத்தை நோக்கித் திரும்பினர்.

| அட்டவணை 16. நிகழ்நிலைக் (ஆன்லைன்) கல்வி | |
|---|---|
| ஆம் | 50 |
| இல்லை | 97 |
| **மொத்தம்** | **147** |

பள்ளிகள் வகுப்புகளை நிகழ்நிலையில் மாற்றியது. இதன் விளைவாக, நிகழ்நிலை கல்வியானது தனிப்பட்ட வகுப்புகளுக்கு, ஆரம்பநிலை முதல் பல்கலைக்கழக நிலை வரை, ஒரு மாற்றாக உருவானது,

இருந்தாலும், புலம் பெயர்ந்தோரின் குழந்தைகள் உட்பட பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் அணுகல் இல்லாமை மற்றும் உள்கட்டமைப்பில் உள்ள இடைவெளிகளில் நிகழ்நிலைக் கல்வியின் பலவீனம் தெளிவாகத் தெரிகிறது. அவர்களில் பலருக்கு கற்பித்தல்-கற்றல் உள்கட்டமைப்பு இல்லை மற்றும் தொழில்நுட்பத்திற்கான அணுகல் மிகவும் குறைவாக உள்ளது. புலம்பெயர்ந்த குழந்தைகளில் 97 (65.9 விழுக்காட்டினர்) தாங்கள் எந்த ஒரு நிகழ்நிலை வகுப்புகளிலும் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

| அட்டவணை 17. படிப்பு வாரியாக நிகழ்நிலை வகுப்புகளில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|
| பதில் | ஆரம்பக் கல்வி | நடுத்தர கல்வி | உயர்நிலை கல்வி | மேல்நிலை கல்வி | மொத்தம் |
| ஆம் | 12 | 14 | 16 | 8 | **50** |
| இல்லை | 42 | 37 | 11 | 7 | **97** |

பதிலளித்தவர்களில் 43 விழுக்காட்டினர் ஆரம்பப் பள்ளிகளில் படிக்கிறார்கள், அவர்களில் 43 விழுக்காட்டினர் சிறுமிகள்.

டிஜிட்டல் பிளவு புதியது அல்ல, ஆனால் பின் விளைவுகள் ஊரடங்கின் போது அப்பட்டமாக கொண்டு வரப்பட்டுள்ளது. அட்டவணை 17 படிப்பு வாரியாக நிகழ்நிலை வகுப்புகளில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை

டிஜிட்டல் பிளவு பள்ளிப்படிப்பை அணுகக்கூடிய சில குழந்தைகளைக்கூட தடுத்துவிட்டது.

தொலைதூர கிராமங்களில் சிலவற்றில் இணையம் அல்லது கைபேசி செயலெல்லை இல்லை, அதாவது தொண்டு நிறுவனங்களால் கைபேசி சாதனங்கள் வழங்கப்பட்டாலும், உள்கட்டமைப்பில் முதலீடு இல்லாமல் அணுகல் இருக்காது. இந்த உள்கட்டமைப்பு வணிக ரீதியாக சாத்தியமற்றதாக இருக்கும் என்பதால், சந்தை அதை வழங்காது, மேலும் அட்டவணை 18 பாலினம் வாரியாக நிகழ்நிலை வகுப்புகளில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை

### 4.12. நிகழ்நிலை வகுப்புகளுக்குச் செல்லாததற்கான காரணங்கள்

நிகழ்நிலை வகுப்புகளில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவித்த 97 குழந்தைகளில், 62 (63.9 விழுக்காடு) ஆண்ட்ராய்டு கைபேசிகள் இல்லை,

| அட்டவணை 18. பாலினம் வாரியாக நிகழ்நிலை வகுப்புகளில் கலந்து கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| பதில் | ஆண் | பெண் | மொத்தம் |
| Yes | 31 | 19 | **50** |
| No | 55 | 42 | **97** |

அவர்களில் 46 விழுக்காட்டினர் சிறுமிகள். 42 விழுக்காடு குழந்தைகள் தங்கள் வீட்டில் மடிக்கணினி அல்லது தனிப்பட்ட கணினி இல்லை என்று தெரிவித்துள்ளனர். 42 வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டி இல்லை. 31 விழுக்காடு குழந்தைகள் தங்கள் கைபேசியை மறுஊட்டம் (ரீசார்ஜ்) செய்ய இயலாத நிலையில் இருப்பதால் நிகழ்நிலை வகுப்புகளுக்குச் செல்ல முடியவில்லை என்று தெரிவித்தனர். மறுஊட்டம் செய்ய பணம் இல்லாததால் கல்வி கிடைக்காமல் போனது துரதிருஷ்டமானது.

| அட்டவணை 19. நிகழ்நிலை வகுப்புகளுக்குச் செல்லாததற்கான காரணங்கள் | | | |
|---|---|---|---|
| | பதில் | ஆண் | பெண் |
| தனிப்பட்ட கணினி/ மடிக்கணிணி இல்லை | 20 | 21 | **41** |
| தொலைக்காட்சி பெட்டி இல்லை (அல்லது கேபிள் டிவி இணைப்பு இல்லாதது) | 16 | 22 | **38** |
| ஆண்ட்ராய்டு கைபேசி இல்லை | 29 | 33 | **62** |
| முன்பணம் செலுத்தப்பட்ட கைபேசிகளை மறுஊட்டம் செய்வதில் உள்ள நிதி சிக்கல்கள் | 10 | 21 | **31** |
| சமிக்ஞை சிக்கல்கள் (கைபேசி கோபுரங்களுக்கான மோசமான அணுகல் போன்றவை) | 4 | 9 | **13** |
| மின் இணைப்பு இல்லை | 2 | 8 | **10** |
| வகுப்புகள் சலிப்பாக இருந்தன/கற்பித்தல் பிடிக்கவில்லை | 1 | 6 | **7** |
| வேலைக்காக வெளியூர் போக வேண்டியிருந்தது | 1 | 0 | **1** |
| அவசர வீட்டு வேலைகளில் கலந்து கொள்ள வேண்டியிருந்தது | 3 | 4 | **7** |
| அடிக்கடி மின்வெட்டு காரணமாக | 1 | 3 | **4** |
| நோய்வாய்ப்பட்டது/நீண்டகால நோய் | 1 | 1 | **2** |
| எனது தாய்மொழியில் இல்லாததால் பயிற்றுமொழியை பின்பற்ற முடியவில்லை | 1 | 3 | **4** |
| வீட்டில் சாதகமான சூழல் இல்லாதது | 2 | 8 | **10** |
| நிகழ்நிலை வகுப்புகள் நடத்தப்படவில்லை | 4 | 4 | **8** |
| **மொத்தம்** | **95** | **143** | **238** |

### 4.13. எழுத்தறிவு கொண்ட சுற்றுப்புரம்

13 விழுக்காடு குழந்தைகள் மட்டுமே (466-ல் 64) தங்கள் வீடுகள் / தங்கும் இடங்களில் பாடநூல்கள் அல்லது மத நூல்கள் தவிர வேறு நூல்களைக் கொண்டுள்ளனர். 168 (36 விழுக்காட்டினர்) மட்டுமே பாடநூல்ககளை வைத்துள்ளனர். செய்தித்தாள்கள், பருவ இதழ்கள், குழந்தைகள் இதழ்கள், குழந்தைகள் விளக்கப்பட்ட கதை நூல்கள் மற்றும் நகைச்சுவை நூல்கள் போன்ற பொது அறிவைப் பெற உதவும் பிற வாசிப்புப் பொருட்கள் ஒரு சில குழந்தைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன. 204 (43 விழுக்காடு) குழந்தைகள் தங்கள் வீடுகளில்

| அட்டவணை 20. பாலின வாரியாக எழுத்தறிவுச் சூழல் | | | |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் |
| நூல்கள் (பாடநூல்கள் அல்லது மத நூல்கள் அல்ல) | 34 | 30 | **64** |
| பாடநூல்கள் | 71 | 97 | **168** |
| செய்தித்தாள்கள் | 14 | 13 | **27** |
| கால இதழ்கள் | 1 | 1 | **2** |
| குழந்தைகள் இதழ்கள் | 2 | 4 | **6** |
| குழந்தைகளுக்கான விளக்கப்படக் கதை நூல்கள் | 3 | 7 | **10** |
| நகைச்சுவை நூல்கள் | 3 | 2 | **5** |
| அகராதி போன்ற குறிப்பு நூல்கள் | 2 | 3 | **5** |
| மற்றவைகள் | 1 | | **1** |
| படிக்கும் பொருட்கள் கிடைக்கவில்லை | **96** | **108** | **204** |
| **மொத்தம் (n) 466** | | | |

வாசிப்புப் பொருட்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்தனர், அவர்களில் 52 விழுக்காட்டினர் சிறுவர்கள். 53 விழுக்காடு சிறுமிகளின் வீடுகளில் (உரை அல்லது மத நூல்கள் தவிர) இதர நூல்கள் உள்ளன. சிறுவர்களைக் கொண்ட குடும்பங்களை விட சிறுமிகளைக் கொண்ட குடும்பங்கள் அதிக எழுத்தறிவுச் சூழலைக் கொண்டுள்ளன.

| அட்டவணை 21. சாதி வாரியாக புலம் பெயர்ந்த குழந்தைகளுக்கு எழுத்தறிவு பெறும சூழல் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | SC | ST | MBC | BC | OC | IDK | மறுத்தது | மொத்தம் |
| நூல்கள் (பாடநூல்கள் அல்லது மத நூல்கள் அல்ல) | 3 | 28 | 11 | 2 | 3 | 13 | 4 | 64 |
| பாடநூல்கள் | 15 | 50 | 34 | 23 | 4 | 41 | 1 | 168 |
| செய்தித்தாள்கள் | 5 | | 15 | 5 | | 2 | | 27 |
| கால இதழ்கள் | 1 | 1 | | | | | 2 | |
| குழந்தைகள் இதழ்கள் | 1 | | | 1 | | 3 | 1 | 6 |
| குழந்தைகளுக்கான விளக்கப்படக் கதை நூல்கள் | 1 | | 1 | | | 7 | 1 | 10 |
| நகைச்சுவை நூல்கள் | 1 | | 1 | | | 1 | 2 | 5 |
| அகராதி போன்ற குறிப்பு நூல்கள் | 2 | | | 1 | 1 | | | 5 |
| மற்றவைகள் | 1 | | | | | | 1 | |
| படிக்கும் பொருட்கள் கிடைக்கவில்லை | 6 | 30 | 9 | 10 | | 31 | 28 | 204 |
| **மொத்தம்** | **36** | **110** | **71** | **42** | **8** | **98** | **40** | **492** |

தங்கள் வீட்டில் / தங்கும் இடத்தில் வாசிப்பு பொருட்கள் எதுவும் இல்லை என்று அறிவித்த 204 குழந்தைகளில், 14 விழுக் காட்டினர் பட்டியல் பழங்குடியினரைச் சேர்ந்தவர்கள். 15 விழுக்காடு குழந்தைகளுக்கு தங்கள் வீட்டில் இந்த வாசிப்புப் பொருட்கள் இருப்பதை அறிந்திருக்கவில்லை அல்லது உறுதியாகத் தெரியவில்லை. தங்கள் வீடுகளில் செய்தித்தாள்கள் இருப்பதாகக் கூறி பதிலளித்த 27 பேரில் 15 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக (எம்பிசி) வகைப்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள். மொத்தத்தில், 6 விழுக்காட்டிற்கும் குறைவான குழந்தைகளிடம் பருவ இதழ்கள், குழந்தைகள் இதழ்கள், குழந்தைகள் விளக்கப்பட்ட கதை நூல்கள், நகைச்சுவை நூல்கள், அகராதிகள் போன்ற வாசிப்பு பொருட்களைக் கொண்டுள்ளனர், மேலும் இந்த விகிதம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மட்டுமல்லாமல் மற்ற சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளையும் உள்ளடக்கியது.

## 4.14. வாசித்தல்

### *4.14.1. தொடர்ச்சியான வாசித்தல்*

*நூல்கள் / பத்திரிகைகள் / செய்தித்தாள்கள் (கல்வி / பாட நூல்கள் / மத நூல்கள் தவிர)*

பாடப்புத்தகங்களைத் தவிர மற்ற நூல்கள்/ பத்திரிகைகள் /செய்தித்தாள்களை அவர்கள் எத்தனை முறை படிக்கிறார்கள் என்ற கேள்விக்கு, 45 விழுக்காடு குழந்தைகள் தங்கள் வீடுகளிலோ தங்கும் இடத்திலோ இந்த நூல்களைப் படிப்பதே இல்லை என்று கூறியுள்ளனர். 33 விழுக்காடு குழந்தைகள் அரிதாகவே படிப்பதாகத் தெரிவித்து உள்ளனர்.

புலம் பெயர்ந்த குழந்தைகளில் 11 விழுக்காட்டினர் மட்டுமே தினசரி நூல்கள் /பத்திரிகைகள் / செய்தித்தாள்களைப் படிக்கும் பழக்கத்தைக் கொண்டுள்ளனர். பெண் குழந்தைகளுடன் ஒப்பிடுகையில் ஆண் குழந்தைகளிடையே தினசரி படிக்கும் பழக்கம் அதிகமாக உள்ளது. அவர்களில் 7 விழுக்காட்டினர் வாரத்திற்கு சில முறை அவற்றைப் படிப்பதாகக் கூறினர்.

**அட்டவணை 22.**
**புலம் பெயர்ந்த குழந்தைகளின் வாசிப்புப் பழக்கம்**

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| தினமும் | 29 | 25 | **54** |
| வாரத்தில் சில முறை | 14 | 20 | **34** |
| அரிதா | 75 | 82 | **157** |
| இல்லவே இல்லை | 91 | 123 | **214** |
| பதில் இல்லை | 4 | 3 | **7** |
| மொத்தம் | **213** | **253** | **466** |

| அட்டவணை 23. புலம்பெயர்ந்த குழந்தைகள் வாசிப்பதில் மற்றவர்களிடமிருந்து உதவி பெறுகிறார்கள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பதில் | மாநிலங்களுக்கு இடையே | % | மாநிலத்திற்கு உள் | % | மொத்தம் | % |
| நானே படிக்கிறேன் | 78 | 35.29% | 94 | 47.47% | 172 | 41.05% |
| தாய் | 27 | 12.22% | 32 | 16.16% | 59 | 14.08% |
| ஆசிரியர் | 32 | 14.48% | 0 | 0.00% | 32 | 7.64% |
| உடன்பிறப்பு (பெண்) | 19 | 8.60% | 5 | 2.53% | 24 | 5.73% |
| நெறியாளர் | 18 | 8.14% | 0 | 0.00% | 18 | 4.30% |
| என்.ஜி.ஓ | 8 | 3.62% | 9 | 4.55% | 17 | 4.06% |
| உடன்பிறந்த ஆண் | 9 | 4.07% | 4 | 2.02% | 13 | 3.10% |
| நண்பர்கள் | 1 | 0.45% | 11 | 5.56% | 12 | 2.86% |
| உறவினர்கள் பெண் | 3 | 1.36% | 7 | 3.54% | 10 | 2.39% |
| சக குழந்தைகள் | 2 | 0.90% | 9 | 4.55% | 11 | 2.63% |
| தந்தை | 9 | 4.07% | 2 | 1.01% | 11 | 2.63% |
| அக்கம்பக்கத்தினர் ஆண் | 1 | 0.45% | 6 | 3.03% | 7 | 1.67% |
| உறவினர் (ஆண்) | 0 | 0.00% | 0 | 0.00% | 0 | 0.00% |
| மேலே எதுவும் இல்லை | 14 | 6.33% | 19 | 9.60% | 33 | 7.88% |
| **மொத்தம்** | **221** | **100.00%** | **198** | **100.00%** | **419** | **100.00%** |

### 4.14.2. பாட வாரியாக தொடர்ச்சியாக வாசிப்பவர்கள்

*நூல்கள் /பத்திரிகைகள் / செய்தித்தாள்கள் (கல்வி / பாட நூல்கள் / மத நூல்கள் தவிர)*

| அட்டவணை 24. நடப்பு கல்வி ஆண்டிற்கான பாட நூல்களைப் பெறும் குழந்தைகளின் விழுக்காடு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பதில் | மாநிலங்களுக்கு இடையே | % | மாநிலத்திற்குள் | % | Total | % |
| ஆம் | 130 | 58.82% | 117 | 59.09% | 247 | 58.95% |
| இல்லை | 91 | 41.18% | 80 | 40.40% | 171 | 40.81% |
| பதில் இல்லை | | | 1 | 0.51% | 1 | 0.24% |
| இல்லை | மொத்தம் (n) 221 | | மொத்தம் (n) 198 | | மொத்தம் (n) 419 | |

### 4.14.3. வாசிப்பதில் மற்றவர்களின் உதவி

ஆரம்ப கால எழுத்தறிவில் பெற்றோரின் ஈடுபாடு நேரடியாக கல்வி சாதனையுடன் இணைக்கப்பட்டுள்ளது.

எழுத்தறிவுத் திறன்களில் தொடங்கி வெற்றிகரமாகச் செல்லவும், தினசரி பயிற்சியுடன் பெற்றோர்கள் அவர்களின் வாசிப்புக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். வீட்டில் வாசிப்பு நடவடிக்கைகளில் ஈடுபாடு, வாசிப்பு சாதனையில் மட்டுமல்ல, மாணவர்களின் வாசிப்பு ஆர்வம், வாசிப்பு மீதான மனப்பான்மை மற்றும் வகுப்பறையில் கவனம் செலுத்துதல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க

| அட்டவணை 25. படிப்பு வாரியாக நடப்பு கல்வி ஆண்டிற்கான பாட நூல்களைப் பெறும் குழந்தைகளின் விழுக்காடு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **பதில்** | **ஆரம்பக் கல்வி** | **நடுத்தர கல்வி** | **உயர்நிலை கல்வி** | **மேல்நிலை கல்வி** | **மேல்நிபடிக்கிறது இல்லைலை** | **இதர** | **மொத்தம்** |
| ஆம் | 94 | 76 | 44 | 30 | **கல்வி** | 3 | 247 |
| இல்லை | 66 | 58 | 27 | 7 | 12 | 1 | 171 |
| பதில் இல்லை | | | | 1 | | | 1 |
| **மொத்தம்** | **160** | **134** | **71** | **38** | **12** | **4** | **419** |

நேர்மறையான தாக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை பல ஆய்வுகள் குறிக்கிறது. பெற்றோர்கள் ஆரம்பம்தொட்டு தங்கள் குழந்தைகளின் எழுத்தறிவு பயிற்சிகளில் ஈடுபடுவதால் ஆழமான மற்றும் நீண்ட கால விளைவுகள் ஏற்படுகினறன என்று ஆராய்ச்சி காட்டுகிறது,

இந்த ஆய்வு (அட்டவணை 2 மற்றும் அட்டவணை 3) புலம்பெயர்ந்த குழந்தைகளின் பெற்றோர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் படிப்பறிவில்லாதவர்கள் என்று கண்டறிந்தது. மாநிலம் விட்டு மாநிலம் மற்றும் மாநிலங்களுக்குள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளில், பெற்றோருடன் வாழ்ந்து வரும் குழந்தைகளில் 58 விழுக்காடு (பதிலளிப்பவர்களின் எண்ணிக்கை 419-ல் 244 பேர்) தங்கள் பெற்றோர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள் என்று பதில் அளித்துள்ளனர்.

எனவே இது நிச்சயமாக கற்றல் விளைவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். 41 விழுக்காடு குழந்தைகள் தாங்களாகவே படிக்கிறார்கள். 16 விழுக்காடு குழந்தைகள் மட்டுமே தங்கள் தந்தைகள் / தாய்மார்கள் வாசிப்புக்கு உதவியதாக தெரிவித்துள்ளனர். இந்த விகிதம் மாநிலம் விட்டு மாநிலம் மற்றும் மாநிலங்களுக்குள் புலம்பெயர்ந்த குழந்தைகளிடையே ஒரே மாதிரியாக இருக்கிறது.

மாநிலம் விட்டு மாநிலம் புலம் பெயர்ந்த பெரும்பாலான குழந்தைகள் (35 விழுக்காடு, மாநிலங்களுக்குள் 47 விழுக்காடு, மற்றும் ஒட்டுமொத்தமாக 41 விழுக்காடு) தாங்களாகவே படிக்க வேண்டியிருந்தது, அல்லது அவர்களின் தாய்மார்கள் அல்லது சகோதரிகளை சார்ந்திருந்தனர். மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்தவர்களின் தந்தைகள் மற்றும் சகோதரர்கள் தங்கள் குழந்தைகள் மற்றும் உடன்பிறப்புகளுக்கு மாநிலங்களுக்குள் புலம்பெயர்ந்தவர்களை விட உதவுவதில் அதிக ஆர்வம் காட்டினர். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு

மிகவும் உதவியிருந்தாலும், மாநிலங்களுக்குள் புலம்பெயர்ந்த தாய்மார்கள் கொஞ்சம் சிறப்பாக செயல்பட்டனர், ஒருவேளை மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்தவர்கள் குறைந்த முறையான பள்ளி, திறன் அல்லது வாய்ப்பைக் கொண்டுள்ளனர் (பலர் வேலை நேரங்கள் கிட்டத்தட்ட 24 மணி நேரமும் செங்கல் சூளைகளில் வேலை செய்து கொண்டிருந்தனர்) அல்லது இந்த அனைத்து காரணிகளின் கலவையையும் குறிக்கிறது.

### 4.15. நடப்புக் கல்வி ஆண்டிற்கான பாடநூல்கள்

மாணவர்களின் வாழ்க்கையில் பாட நூல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. நூல்கள் மாணவர்களின் அறிவை அதிகரித்து, அவர்களின் அறிவை மேம்படுத்துகின்றன. பாட நூல், உண்மையில், பள்ளியின் இதயம் ஆகும் மற்றும் சம்பாதிக்கும் நடவடிக்கைகளை கற்பிக்கின்றது, பாடம் இல்லாமல், பள்ளிகள் இருக்காது. பாட நூல்கள் பரந்த அளவிலான புதிய மற்றும் சுவாரஸ்யமான உண்மைகளை எடுத்துச் செல்கின்றன மற்றும் ஒரு புதிய அனுபவத்தின் உலகத்திற்கான கதவுகளைத் திறக்கின்றன. பாட நூல்களை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் ஒவ்வொரு குழந்தையின் படைப்பாற்றல் திறனை வளர்ப்பதிலும் ஆதரிப்பதிலும் ஆசிரியர்கள் முக்கிய மற்றும் தீர்மானிக்கிற பங்கை வகிக்க முடியும். பாட நூல்கள் ஆசிரியர்களை மேலும் உத்வேகம் மற்றும் ஊக்கம் அளிப்பவர்களாக மாற்ற உதவுகின்றன. பாட நூல்களின் மதிப்பை ஒரு முக்கியமான கற்பித்தல் மற்றும் கற்றல் ஆதாரமாக உணர்ந்தால் மட்டுமே ஆசிரியர்கள் பாட நூல்களை திறம்பட பயன்படுத்த முடியும் என்பது மிகவும் தெளிவாக உள்ளது.

கல்வி முறையின் தரமானது வகுப்பறையில் பாட நூல்களைப் பயன்படுத்தும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான தொடர்புகளின் தரத்தை முற்றிலும் சார்ந்துள்ளது. அவர்கள் மாணவர்களின் முன்னேற்றத்திற்கு பாடங்களின் கட்டமைப்பை வழங்குவது மட்டுமல்லாமல், முக்கிய கருத்துக்கள் மற்றும் அடிப்படை அறிவைப் பற்றிய தெளிவைக் கொடுக்கிறார்கள். புலம் பெயர்ந்த குழந்தைகளின் கற்றலுக்கு பாடப்புத்தகங்கள் மட்டுமே ஆதாரப் பொருட்களாகும்.

இந்த தொற்றுநோய் காரணமாக, மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளில் சுமார் 41 விழுக்காட்டினர் தங்கள் பள்ளியில் இருந்து எந்த கற்றல் பொருட்களையும் பெறவில்லை என்று தெரிவித்துள்ளனர். மாநிலங்களுக்குள்

புலம்பெயர்ந்த குழந்தைகளின் சராசரியும் அதேதான். மாநிலங்களுக்கு இடையிலான மற்றும் மாநிலங்களுக்குள் புலம்பெயர்ந்த குழந்தைகளை கருத்தில் கொள்ளும் போது (பதிலளிப்பவர்களின் எண்ணிக்கை 419) கல்வியாண்டிற்கான தங்கள் பாடப்புத்தகங்களைப் பெறவில்லை என்று தெரிவித்த குழந்தைகளில் 38 விழுக்காட்டினர் தொடக்கப் பள்ளியையும், 31 விழுக்காடு குழந்தைகள் நடுநிலைப் பள்ளியையும் சேர்ந்தவர்கள். பாடப்புத்தகங்களின் பற்றாக்குறை அல்லது பள்ளிகள் மற்றும் குழந்தைகளுக்கு அவற்றை விநியோகிப்பதில் ஏற்படும் தாமதம், குறிப்பாக புலம்பெயர்ந்த குழந்தைகளுக்கான கற்பித்தல்-கற்றல் நடவடிக்கைகளை பெரிதும் பாதிக்கிறது.

அரசும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களும் பாட நூல்களின் பற்றாக்குறை அல்லது பற்றாக்குறையின் தீவிரத்தையும் அதன் துளிர்விடும் விளைவையும் புரிந்து கொள்ளாத வரையில், சமூகப் பள்ளிகளின் கல்வித் தரத்தை மேம்படுத்த முடியாது, இது குழந்தைகளின் கல்வி உரிமையை இழக்கச் செய்யும். ஒட்டுமொத்த கல்வியின் தரத்தை மேம்படுத்தும் வகையில் தரமான பாட நூல்களை சரியான நேரத்தில் கிடைக்கச் செய்ய சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் முனைப்புடன் செயல்பட வேண்டும். அவர்கள் புலம்பெயர்ந்த குழந்தைகளைப் பற்றி சிந்திக்க வேண்டும், மேலும் அவர்களுக்கு தாய்மொழி ஆசிரியர்களிடம் அணுகல் இல்லாததால் பாட நூல்களை தங்கள் தாய்மொழியில் கிடைக்கச் செய்ய வேண்டும். இது குறைந்தபட்சம் நூல்களை அவர்களாகவே படிக்க மேலும் உதவலாம்.

## 4.16. பொருட்களுக்கான அணுகல்

### *4.16.1. உலர் உணவுப்பொருட்கள்*

**அட்டவணை 26.**
**மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளுக்கான பொருட்களை அணுகுதல் (உலர் உணவுகள்)**

| பதில் | # | % |
|---|---|---|
| ஆம் | 85 | 38.46% |
| இல்லை | 136 | 61.54% |
| **மொத்தம் (n) 221** | | |

இந்த பெருந்தொற்றின்; போது, மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் மாநில கல்வி அமைச்சர்களிடம் மதிய உணவுத் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள குழந்தைகளின் ஊட்டச்சத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், கோவிட்-19 தீவிர நோய் பரவலின் போது அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியைப் பாதுகாக்கவும், சூடான சமைத்த மதிய உணவு அல்லது தானியங்கள், அத்துடன் சமையல் செலவுகள் அல்லது அதற்கு சமமான உணவுப் பொருட்கள் அடங்கிய

உணவு பாதுகாப்பு படி, கோடை விடுமுறைகளிலும் கூட தகுதியான குழந்தைகளுக்கு வழங்கப்படலாம் என்று கூறியது. ஆனால் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள் இந்த வசதியைப் பெறவில்லை என்பது எங்கள் ஆய்வில் இருந்து தெளிவாகிறது. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளில் 61 விழுக்காட்டினர் தங்கள் பள்ளிகளில் இருந்து எந்த உலர் உணவுகளையும் பெறுவதில்லை. மாநிலத்திற்குள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளில் 47 விழுக்காட்டினர் இதையே தெரிவித்துள்ளனர். ஆனால் மாநிலங்களுக்குள் புலம்பெயர்ந்த குழந்தைகளுடன் ஒப்பிடும்போது மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளின் இந்த விகிதம் மிகவும் அதிகமாக உள்ளது.

**அட்டவணை 27. மாநிலத்திற்குள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளுக்கான பொருட்களை அணுகுதல் (உலர் உணவுகள்)**

| பதில் | # | % |
|---|---|---|
| ஆம் | 103 | 52.02% |
| இல்லை | 94 | 47.47% |
| பதில் இல்லை | 1 | 0.51% |
| **மொத்தம் (n) 198** | | |

### 4.16.2. குழந்தையை மையப் படுத்திய நிவாரணம்

புலம்பெயர்ந்த குழந்தைகளின் மீது கோவிட்-19 ஏற்படுத்திய தாக்கம் கல்வியை வழங்குவது மட்டுமல்லாமல், அரசால் உணவுப் பொருட்கள் மற்றும் சுகாதாரப் பரிசோதனைகள் போன்ற கூடுதல் உரிமைகளையும் பாதித்தது. இந்திய அரசு 22 வழிகாட்டுதல்களை வெளியிட்டது, இது அனைத்து மாநிலங்களுக்கும் ஒன்றிய பிரதேசங்களுக்கும் பள்ளிகள் மூடப்படும் போது சூடான சமைத்த உணவு அல்லது உணவு தானியங்கள்

**அட்டவணை 28. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளை மையப்படுத்திய நிவாரணம் பெறுகின்றனர்**

| | |
|---|---|
| உணவுப் பொருட்கள் | 135 |
| ஆரோக்கிய பரிசோதனை/ | 61 |
| ஆரோக்கியம் (வைட்டமின்) இணைப்புதனை/ | 22 |
| பிற | 96 |
| | **மொத்தம் (n) 221** |

**அட்டவணை 29. மாநிலத்திற்குள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளை மையப்படுத்திய நிவாரணம் பெறுகின்றனர்**

| | |
|---|---|
| உணவுப் பொருட்கள் | 137 |
| ஆரோக்கிய பரிசோதனை/ | 19 |
| ஆரோக்கியம் (வைட்டமின்) இணைப்புதனை/ | 8 |
| பிற | 1 |
| | **மொத்தம் (n) 198** |

மற்றும் சமைப்பதற்கான செலவுகள் (அல்லது அதற்கு சமமான பருப்பு வகைகள், எண்ணெய் போன்றவை) அடங்கிய உணவு பாதுகாப்பு கொடுப்பனவை, மதிய உணவு திட்டத்தின் கீழ் உள்ள தகுதியுள்ள அனைது குழந்தைகளுக்கும் வழங்குவது பற்றி அறிவுறுத்தியது. பள்ளிகள் தொடர்ந்து மூடப்பட்டதைத் தொடர்ந்து, பள்ளிகள் மீண்டும் திறக்கப்படும் வரை இந்த நடவடிக்கை தொடர நீட்டிக்கப்பட்டது. ஆனால் பள்ளி அடைப்பின் போது மாநிலம் விட்டு மாநிலம் குழந்தைகளில் 61 விழுக்காட்டினரும், மாநிலங்களுக்குள் புலம்பெயர்ந்த குழந்தைகளில் 69 விழுக்காட்டினர் மட்டுமே உணவுப் பொருட்களைப் பெற்றுள்ளனர் என்று ஆய்வு கண்டறிந்துள்ளது. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த 27 விழுக்காடு குழந்தைகளில் 9.5 விழுக்காட்டினர் மட்டுமே சுகாதார பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

### 4.17. கற்றல் நடத்தை

### *4.17.1. ஆர்வமுள்ள பாடங்கள் மற்றும் அவற்றின் மதிப்பீடுகள்*

மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளில் 52 விழுக்காடு தங்கள் பள்ளிகளில் தாய்மொழி வகுப்புகளில் கற்பிக்கப்படுவதாக தெரிவித்துள்ளனர். அவர்களில் 72 விழுக்காட்டினர் தாய்மொழி வகுப்புகள் தங்களுக்கு மிகவும் குறைந்த அளவே விருப்பத்துக்குகந்தது என்று கூறியுள்ளனர். கணிதம் 47

**அட்டவணை 30. மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயர்ந்த குழந்தைகளின் விருப்பமுள்ள பாடங்கள் மற்றும் அவற்றின் விகிதங்கள்**

| பாடங்கள் | குறைவாகப் பிடித்தது | மிகவும் பிடித்தது | உறுதியாகத் தெரியவில்லை/ கருத்து இல்லை | மொத்தம் |
|---|---|---|---|---|
| தாய்மொழி | 83 | 21 | 11 | 115 |
| கணிதம் | 41 | 55 | 9 | 105 |
| அறிவியல் | 26 | 39 | 9 | 74 |
| ஆங்கிலம் | 57 | 57 | 9 | 123 |
| பிற மொழிகள் | 13 | 20 | 7 | 40 |
| சமூக அறிவியல் | 16 | 24 | | 40 |
| தொழில் (கைவினை கலை போன்றவை) | 1 | 1 | | 2 |
| விளையாட்டு நடவடிக்கைகள் | 15 | 3 | 1 | 19 |
| கணினி வகுப்பு | 1 | 1 | | 2 |
| மற்றவைகள் | 1 | 2 | 14 | 17 |
| மொத்தம் (n) 221 | | | | |

| அட்டவணை 31. மாநிலத்திற்குள்ளே இடம்பெயர்ந்த குழந்தைகளின் விருப்பமுள்ள பாடங்கள் மற்றும் அவற்றின் விகிதங்கள் | | | | |
|---|---|---|---|---|
| **பாடங்கள்** | **குறைவாகப் பிடித்தது** | **மிகவும் பிடித்தது** | **உறுதியாகத் தெரியவில்லை/ கருத்து இல்லை** | **மொத்தம்** |
| தாய்மொழி | 89 | 67 | 6 | 162 |
| கணிதம் | 64 | 65 | 11 | 140 |
| அறிவியல் | 31 | 57 | 20 | 108 |
| ஆங்கிலம் | 32 | 35 | 15 | 82 |
| பிற மொழிகள் | 3 | 2 | 3 | 8 |
| சமூக அறிவியல் | 11 | 45 | 6 | 62 |
| தொழில் (கைவினை கலை போன்றவை) | 1 | 12 | | 13 |
| விளையாட்டு நடவடிக்கைகள் | 5 | 21 | | 26 |
| கணினி வகுப்பு | 3 | 1 | | 4 |
| மற்றவைகள் | 1 | 4 | | 5 |
| **மொத்தம் (ே) 221** | | | | |

விழுக்காடு குழந்தைகளுக்கு மட்டுமே கற்பிக்கப்படுகிறது, மேலும் இது 52 விழுக்காடு குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த பாடமாக உள்ளது, அவர்கள் தங்கள் பள்ளிகளில் ஒரு கணித பாடத்தைக் கொண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளனர். 33 விழுக்காடு குழந்தைகளுக்கு மட்டுமே அறிவியல் வகுப்புகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் இது 52 விழுக்காடு குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த பாடமாகும்.

உடற்கல்வி மற்றும் விளையாட்டுகள் தகுதியான முக்கியத்துவத்தைப் பெறவில்லை என்றாலும் இது கல்வி முறையில் ஒரு முக்கிய பகுதியாகும். கல்வியின் ஆரம்ப கட்டங்களில் இருந்து பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இது சேர்க்கப்பட்டிருந்தாலும், கல்வி நிர்வாகிகளால் அது ஒருபோதும் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. விளையாட்டு மாணவர்களிடையே தலைமைத்துவம், ஒழுக்கம், பகிர்வு, குழுப்பணி, நேர்மை, குழு உணர்வு, சகிப்புத்தன்மை மற்றும் பல பண்புகளை மனதில் ஆழப் பதிய வைக்கிறது. எங்கள் ஆய்வில், 8 விழுக்காடு குழந்தைகள் மட்டுமே தங்கள் பள்ளிகளில் விளையாடுவதாக தெரிவித்துள்ளனர்.

1 விழுக்காடுக்கும் குறைவான குழந்தைகள் தங்கள் பள்ளியில் கணினி வகுப்புகளைக் கொண்டுள்ளனர். மாநிலத்திற்குள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளுடன் ஒப்பிடுகையில் அனைத்து விகிதங்களும் மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளுக்கு மிகவும் குறைவாக உள்ளது.

### 4.17.2. கடந்த ஒரு மாதத்தில் கற்றல்

கற்றல் நடவடிக்கையில் சரிவு ஊரடங்கின் விளைவாகும், பெரும்பாலான குழந்தைகள் கற்றல் நடவடிக்கைகளில் அதிக நேரம் செலவிடவில்லை என்று ஆய்வு கூறுகிறது. மாநிலங்களுக்கு இடையே புலம்பெயர்ந்த குழந்தைகளில் 3.1 விழுக்காட்டினர் மட்டுமே ஒரு நாளைக்கு 4 மணி நேரத்திற்கும் மேலாக படித்ததாக தெரிவித்தனர். 20.3 விழுக்காட்டினர் பாட நூல்கள், கதை நூல்கள், இதழ்கள்

**அட்டவணை 32. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளால் கடந்த ஒரு மாதத்தில் கற்றல் நடவடிக்கைகள்**

| | அரை மணிக்கும் குறைவாக | ஒரு மணிக்கும் குறைவாக | 1 முதல் 2 மணி | 2 முதல் 4 மணி | 4 மணிக்கும் மேலாகணி | ஞாபகம் இல்லை/ உறுதியாக தெரியவில்லை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| பாடப்புத்தகங்கள், கதை புத்தகங்கள், இதழ், செய்தித்தாள் | 13 | 19 | 22 | 7 | 2 | 1 | 64 |
| எழுதும் பயிற்சி (குறிப்புகள், கடிதங்கள் போன்றவை) | 16 | 22 | 23 | 1 | 1 | 2 | 65 |
| கணிதம் செய்தல் (வீட்டுப்பாடம், பொது ஆர்வம்) | 11 | 13 | 6 | 1 | 1 | 4 | 36 |
| வரைதல், ஓவியம் வரைதல் போன்ற ஆக்கப்பூர்வமான செயல்களைச் செய்தல் | 12<br>7 | 9<br>7 | 17<br>5 | | | 1 | 39<br>19 |
| ஆன்லைன் கற்பித்தல் அமர்வுகளில் கலந்து கொள்வது | | | | | | | |
| டிவி பார்ப்பது (கல்வி திட்டம்) | 2 | 3 | 1 | 3 | | 1 | 10 |
| வானொலி-கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்பது | | 1 | | | | 1 | 2 |
| இளைய சகோதர சகோதரிகளுக்கு கற்பித்தல் | | 2 | | 1 | | 1 | 4 |
| நண்பர்களுடன் குழுவாகப் படித்தல் | 5 | 1 | 10 | 4 | | | 20 |
| பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள (நேரில்) | | 1 | 8 | 8 | 3 | 1 | 21 |
| தொழில் திறன்களைக் கற்றுக்கொள்ள (என்ஜிஓ/அரசு/ தனியார்) | 2 | 2 | 7 | 4 | 1 | 16 | 32 |
| சிறப்பு பயிற்சி வகுப்பு (நேரில்) | 0 | | | | | | 0 |
| மற்ற நடவடிக்கைகள் | | | | 1 | | 6 | 7 |
| **மொத்தம் (n) 221** | | | | | | | |

மற்றும் செய்தித்தாள்களை அரை மணி நேரத்திற்குள் மட்டுமே படிப்பதாகக் கூறியுள்ளனர். எழுதுதல், கணிதம் செய்தல், வரைதல் மற்றும் ஓவியம் போன்ற ஆக்கப்பூர்வமான செயல்களைச் செய்தல் போன்ற மற்ற அனைத்து நடவடிக்கைகளுக்கும் நிலைமை மிகவும் ஒரே மாதிரியாக உள்ளது.

40.6 சதவிகிதம் மாநிலத்திற்குள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகள் பாட நூல்கள், கதை நூல்கள், இதழ்கள் மற்றும் செய்தித்தாள்களை அரை மணி நேரத்திற்கும் குறைவாகவே படிப்பதாகக் கூறியுள்ளனர்.

| அட்டவணை 33. இடம்பெயர்ந்த குழந்தைகள் உடல் ஆரோக்கியத்திற்காக அணுகுமிடம் | | |
|---|---|---|
| **பதில்கள்** | **எண்ணிக்கை** | **%** |
| அரசு மருத்துவமனை | 353 | 75.8% |
| தனியார் மருத்துவமனை | 142 | 30.5% |
| தனியார் தொண்டு/ இலாப நோக்கற்ற மருத்துவமனை | 4 | 0.9% |
| இந்திய மருந்துகளின் தனியார் மருத்துவப் பயிற்சியாளர் | 2 | 0.4% |
| தாலுகா/மாவட்ட மருத்துவமனை | 2 | 0.4% |
| மருந்து கடைகள் | 16 | 3.4% |
| சுய மருந்து | 10 | 2.1% |
| மற்றவைகள் | 1 | 0.2% |
| **மொத்தம் பதில்கள் (n) 466** | | |

## 4.18. ஆரோக்கியம்

பதிலளித்த 466 பேரில், 353 பேர் (76 விழுக்காடு) அவர்கள் தங்கள் நோய்க்கான சுகாதாரப் பரிசோதனை சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்குச் செல்வதாகத் தெரிவித்துள்ளனர். 30 விழுக்காடு குழந்தைகள் தனியார் மருத்துவமனைகளுக்கு செல்வதாக கூறியுள்ளனர். பதிலளித்தவர்களில் 3 விழுக்காடு பேர் தாங்கள் மருத்துவமனைகளுக்குச் செல்லமாட்டோம் என்றும் மருந்துக் கடைகளில் நேரடியாக மருந்துகளை வாங்குவோம் என்றும் கூறியுள்ளனர். அவர்களில் 2 விழுக்காடு பேர் மருத்துவமனைகளுக்குச் செல்வதை விட சுயமாக மருந்து எடுத்துக் கொள்வதாகக் கூறியுள்ளனர்.

| அட்டவணை 34. மாநிலத்திற்குள்ளேயே புலம்பெயர்ந்த குழந்தைகளால் கடந்த ஒரு மாதத்தில் கற்றல் நடவடிக்கைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அரை மணிக்கும் குறைவாக | ஒரு மணிக்கும் குறைவாக | 1 முதல் 2 மணி | 2 முதல் 4 மணி | 4 மணிக்கும் மேலாகமணி | ஞாபகம் இல்லை/ உறுதியாக தெரியவில்லை | மொத்தம் |
| பாடப்புத்தகங்கள், கதை புத்தகங்கள், இதழ், செய்தித்தாள் | 39 | 31 | 19 | 1 | 2 | 4 | 96 |
| எழுதும் பயிற்சி (குறிப்புகள், கடிதங்கள் போன்றவை) | 21 | 21 | 12 | 1 | | | 55 |
| கணிதம் செய்தல் (வீட்டுப்பாடம், பொது ஆர்வம்) | 2 | 3 | 9 | 1 | | | 15 |
| வரைதல், ஓவியம் வரைதல் போன்ற ஆக்கப்பூர்வமான செயல்களைச் செய்தல் | 3<br>1 | 8 | 10<br>3 | 1<br>1 | | <br>? | 22<br>5 |
| ஆன்லைன் கற்பித்தல் அமர்வுகளில் கலந்து கொள்வது | 1 | 1 | 1 | 1 | | | 4 |
| டிவி பார்ப்பது (கல்வி திட்டம்) | 1 | | | | 1 | | |
| வானொலி-கல்வி நிகழ்ச்சிகளைக் கேட்பது | 3 | | 1 | | | 4 | |
| இளைய சகோதர சகோதரிகளுக்கு கற்பித்தல் | 6 | 8 | 1 | 1 | | 16 | |
| நண்பர்களுடன் குழுவாகப் படித்தல் | 2 | 10 | | | | 12 | |
| பயிற்சி வகுப்புகளில் கலந்து கொள்ள (நேரில்) | 5 | 5 | 12 | 3 | | 1 | 26 |
| தொழில் திறன்களைக் கற்றுக்கொள்ள (என்ஜிஓ/அரசு/ தனியார்) | 3 | 1 | | | 4 | | |
| சிறப்பு பயிற்சி வகுப்பு (நேரில்) | 1 | 1 | | | | | |
| மற்ற நடவடிக்கைகள் | 54 | | | | | | 54 |
| **மொத்தம் (ே) 221** | | | | | | | |

## 4.19. பாதுகாப்பு

புலம்பெயர்ந்தவர்களின் பொருளாதார மந்தநிலைகள் குழந்தைகளுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தற்போதைய கோவிட்-19 நெருக்கடியில் குழந்தைகள் துன்புறுத்தல் கணிசமாக அதிகரிப்பது குறித்து உலகெங்கிலும் இருந்து செய்திகள் வந்துள்ளன. பெருந்தொற்றின்; போது குழந்தைகளுக்கு எதிரான உடல், உணர்ச்சி மற்றும் பாலியல் வன்முறைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஒவ்வொரு இடத்திலும் பதிவாகியுள்ளது. சமூக கட்டுப்பாடு இல்லாமை மற்றும் தொடர்பு கொள்ளும் திறன் குறைபாடு காரணமாக, இந்த ஆபத்து அதிகரிக்கலாம்.

மோசமான குழந்தைப் பருவ அனுபவங்கள் மனநலப் பிரச்சினைகளுக்கு அதிக ஆபத்துடன் தொடர்புடையவை. குழந்தைகள் எல்லாவிதமான துஷ்பிரயோகங்களையும் அனுபவித்திருக்கிறார்கள் என்பதை கீழே உள்ள அட்டவணை தெளிவாகக்

காட்டுகிறது. இதன் அடிப்படையில், எதிர்காலத்தில் எந்தவொரு தொற்றுநோக்கும் மத்தியில் தவறான நடத்தையிலிருந்து குழந்தைகளை சிறப்பாகப் பாதுகாக்கும் வகையில் எந்தவொரு பெருந்தொற்றின் போதும் புலம்பெயர்ந்த குழந்தைகளின் கவனம் மற்றும் பாதுகாப்பிற்கான உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான கோட்பாடு மற்றும் நடைமுறை இரண்டையும் முன்னெடுக்க வேண்டிய அவசர தேவையை பெருந்தொற்று வலியுறுத்தியுள்ளது என்று நாங்கள் முடிவு செய்கிறோம்.

## 20. பெருந்தொற்றுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள்

கோவிட்-19 பரவலை ஒடுக்கவும், அதன் மூலம் உயிர்களைக் காப்பாற்றவும் ஒரு முக்கிய நடவடிக்கையாக முகக்கவசம் அணிய வேண்டும் என்று உலக சுகாதார அமைப்பு வலியுறுத்துகிறது. உடல் இடைவெளி, நெரிசலான, மூடிய மற்றும்

**அட்டவணை 35. தொற்றுநோய்களின் போது துஷ்பிரயோகத்தை எதிர்கொள்ளும் புலம்பெயர்ந்த குழந்தைகளின் விழுக்காடு**

| பதில்கள் | எண்ணிக்கை | % |
|---|---|---|
| அப்படி எதுவும் இல்லை | 197 | 42.3% |
| பெற்றோரால் வாய்மொழி (அல்லது சைகைகள்/முகபாவங்கள் மூலம்) துன்புறுத்தல் | 110 | 23.6% |
| பெற்றோரால் உடல் உபாதைகள், அடிப்பது போன்றவை | 98 | 21.0% |
| மற்ற மூத்த உடன்பிறப்புகள் அல்லது பிற பராமரிப்பாளர்கள் மற்றவர்கள் தங்குமிடத்தைப் பகிர்ந்து கொள்ளும் உடல் ரீதியான துன்புறுத்தல் | 79 | 17.0% |
| பதில் சொல்ல மறுத்தல் | 40 | 8.6% |
| மற்ற உடன்பிறப்புகளுடன் தனிப்பட்ட மோதல்கள் | 37 | 7.9% |
| மற்ற மூத்த உடன்பிறப்புகள் அல்லது பிற பராமரிப்பாளர்கள் மற்றவர்கள் தங்குமிடத்தைப் பகிர்ந்துகொள்வதன் மூலம் வார்த்தைகளால் துன்புறுத்தல் (அல்லது சைகைகள் முகபாவங்கள் மூலம்) | 25 | 5.4% |
| பெற்றோருடன் தனிப்பட்ட மோதல்கள் | 17 | 3.6% |
| மற்ற பராமரிப்பாளர்கள் மற்றவர்கள் தங்குமிடத்தைப் பகிர்ந்துகொள்பவர்களுடன் தனிப்பட்ட முரண்பாடுகள் துணபிரயோகத்தின் பிற வடிவங்கள் (குறிப்பிடவும்) | 1 | 0.2% |
| **மொத்தம் பதில்கள் (n) 466** | | |

நெருங்கிய தொடர்பு அமைப்புகளைத் தவிர்த்தல், நல்ல காற்றோட்டம், அடிக்கடி கைகளைச் சுத்தம் செய்தல், தும்மல் மற்றும் இருமலை மறைத்தல் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய விரிவான 'அனைத்தையும் செய்யுங்கள்!' அணுகுமுறையின் ஒரு பகுதியாக முகக்கவசங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் இங்கே, தரவுகளிலிருந்து, கோவிட்-19 பரவலை திறம்பட கட்டுப்படுத்துவதற்காக வழிகாட்டுதல்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை புலம்பெயர்ந்த சமூகங்கள் அதிகம் அறிந்திருக்கவில்லை என்பதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. இத்தகைய செயலூக்கமான நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை பலர் அறிந்திருந்தாலும், நடைமுறையில் உள்ள அலட்சியத்தை தரவு காட்டுகிறது. 49 விழுக்காடு குழந்தைகள் மட்டுமே வெளியே செல்லும் போது முகக்கவசம் அணிந்து செல்வதாக தெரிவித்துள்ளனர். அவர்களில் 42 விழுக்காடு பேர் மட்டுமே சோப்பு சுத்திகரிப்பான் மூலம் தங்கள் கைகளைக் கழுவப் பயன்படுத்துவதாகக் கூறியுள்ளனர். 37 விழுக்காடு குழந்தைகள் அவர்கள் வெளியே செல்லும் போதெல்லாம் அல்லது சில நேரங்களில் தங்கள் வீடுகள் விடுதி அறைகளில் கூட உடல் இடைவெளி விதிமுறைகளை பின்பற்றுவதாக கூறியுள்ளனர்.

**அட்டவணை 36. தொற்றுநோய்க்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள்**

| பதில் | சுயமாக | % | பெற்றோர்/ மற்றவர்கள் | % | அறை தோழர்கள் | % | யாரும் இல்லை | % | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| முகக் கவசம் அணியுங்கள் (வெளியே செல்லும் போது) | 232 | 49.8% | 215 | 46.1% | 71 | 15.2% | 150 | 32.2% | 668 |
| சோப்பு/ சுத்திகரிப்பானால் கைகளை கழுவுத | 175 | 37.6% | 105 | 22.5% | 71 | 15.2% | 222 | 47.6% | 573 |
| வீடு/ விடுதி அறையில் உடல் இடைவெளியை கடைபிடிக்கவும் | 201 | 43.1% | 185 | 39.7% | 72 | 15.5% | 191 | 41.0% | 649 |

## 4.21. ஊரடங்கு

### *4.21.1. ஊரடங்கு மற்றும் எதிர்பார்ப்புகள் பற்றிய பார்வைகள்*

கோவிட்-19 நேரத்தில் குடும்ப வன்முறை நிகழ்வுகளின் அபாயகரமான அதிகரிப்புக்கு காரணமான பல காரணிகளை ஆராய்ச்சியாளர்கள் அடையாளம் கண்டுள்ளனர். ஆரோக்கியம் பற்றிய கவலைகள், நிதிச் சிக்கல்கள், வீடுகளில் அடைத்து வைத்தல் ஆகியவை இதில் அடங்கும். இந்தியாவின் குழந்தைகள் உதவி எண், குழந்தைகளுக்கு அவசர உதவிகளை வழங்கும் தொலைபேசி அமைப்பு

| அட்டவணை 37. ஊரடங்கு மற்றும் எதிர்பார்ப்புகள் பற்றிய கருத்துகள் | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| பதில் | மாநிலம் விட்டு மாநிலம் | % | மாநிலத்திற்கு உள் | % | மொத்தம் | % |
| குழந்தைத் திருமணம் | 11 | 2.6% | 53 | 12.6% | 64 | 15.2% |
| குழந்தைத் தொழிலாளர்கள் | 50 | 11.9% | 56 | 13.4% | 106 | 25.3% |
| குழந்தைகள் மீதான வன்முறை உடல் மற்றும் உளவியல் | 13 | 3.1% | 54 | 12.9% | 67 | 16% |
| குடும்ப வன்முறை | 13 | 3.1% | 38 | 9.1% | 51 | 12.2% |
| மற்றவைகள் | 10 | 2.4% | 1 | 0.2% | 11 | 2.6% |
| தெரியாது | 154 | 36.8% | 100 | 23.9% | 254 | 60.7% |
| மொத்தம் பதில்கள் (n) 419 | | | | | | |

(சைல்ட்லைன்), 2020-ல் குழந்தைகள் துன்புறுத்தல் மற்றும் வன்முறையைப் பற்றி 92,000 அழைப்புகளைப் பெற்றது. கீழேயுள்ள அட்டவணையானது, ஊரடங்கின் அசிங்கமான முகத்தையும் அது சமூகத்தில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகளையும் வெளிப்படுத்துகிறது. வீட்டிலேயே வன்முறைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதையும், குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும், பல குடும்பங்கள் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாமல் தவிப்பதையும் ஊரடங்கு வெளிப்படுத்துகிறது.

### 4.21.2. ஒட்டுமொத்த ஊரடங்கு பற்றிய உணர்வு

தரவு (பதிலளிப்பவர்களில் 758, 79 விழுக்காடு) தனிமைப்படுத்தப்பட்ட அனுபவம் பெரும்பாலும் எதிர்மறையாக இருக்கும் என்று வெளிப்படுத்துகிறது. மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமான குழந்தைகள் வகுப்புகளைத் தவறவிட்டுள்ளனர் மற்றும் பள்ளிகள் விரைவில் (355, 37 விழுக்காடு) மீண்டும் திறக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதை இது வெளிப்படுத்துகிறது. நண்பர்கள் (207, 21 விழுக்காடு) தடைசெய்யப்பட்ட அணுகல் மற்றும் அவர்களின் இயக்க சுதந்திரத்திற்கான கட்டுப்பாடுகள் (43, 4.46 விழுக்காடு) ஆகியவற்றுடன் பலர் தொற்றுநோயின் சுமையை எதிர்கொண்டுள்ளனர். நண்பர்கள் (207, 21 விழுக்காடு) மற்றும் பலர் அவர்களின் நடமாடும் சுதந்திரத்திற்கான கட்டுப்பாடுகள் (43,4.46 விழுக்காடு) இந்த பெருந்தொற்றின் சுமையை எதிர்கொண்டுள்ளனர.).

ஒரு சிலர் பெருநதொற்று தொடர்பான கட்டுப்பாடுகள் ஒரு நீண்ட விடுமுறை (75,7.78) அடிப்படையில் நேர்மறையானவை என்று பதிலளித்தனர், தங்கள் குடும்பங்களுடன் (39,4 விழுக்காடு). மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்கு (32, 3.32 விழுக்காடு) அதிக நேரம் செலவிட முடிந்தது.

| அட்டவணை 38. ஊரடங்கு பற்றிய ஒட்டுமொத்த உணர்வு | | |
|---|---|---|
| **பதில்கள்** | **எண்ணிக்கை** | **%** |
| நண்பர்களை சந்திப்பதையும் அவர்களுடன் விளையாடுவதையும் தவறவிட்டேன் | 207 | 44.4% |
| விரைவில் பள்ளி திறந்தால் மகிழ்ச்சி | | |
| பள்ளிக்குச் செல்வதில் நீண்ட இடைவெளி மற்றும் பள்ளியில் கற்றலைத் தவறவிட்டது குறித்து மகிழ்ச்சி இல்லை | 166 | 35.6% |
| நீண்ட காலவரையற்ற விடுமுறை நாள் என்பதால் ஊரடங்கை அனுபவித்து மகிழ்ந்தேன் | 75 | 16.1% |
| எந்நேரமும் வீட்டில் இருப்பது சலிப்பாக இருந்தது | 68 | 14.6% |
| பயணக் கட்டுப்பாடுகள் சொந்த மாநிலத்திற்குத் திரும்புவதைத் தடுத்தன, குடும்பத்தின் வருமானம் வீழ்ச்சியடைந்ததால் சிரமங்களை எதிர்கொண்டது. | 65 | 13.9% |
| நண்பர்களைச் சந்திக்க வெளியே செல்வது, மால்களுக்குச் செல்வது, திரையரங்குகளில் படம் பார்ப்பது, உணவகங்களில் சாப்பிடுவது போன்ற வாய்ப்புகள் இல்லாததால் மகிழ்ச்சியாக இல்லை. | 43 | 9.2% |
| பள்ளிக்கூடம் இல்லாததால் படிக்கவோ, வீட்டுப்பாடம் செய்யவோ தேவை இல்லை | 41 | 8.8% |
| குடும்ப உறுப்பினர்களுடன் அதிக நேரம் செலவிட முடியும் | 39 | 8.4% |
| தொலைக்காட்சி பெட்டி/கைபேசியில் திரைப்படம் பார்ப்பதிலும், மொபைலில் நண்பர்களுடன் அரட்டை அடிப்பதிலும் அதிக நேரம் செலவிட முடிகிறது | 32 | 6.9% |
| பள்ளி மீண்டும் திறக்கப்பட்டது, ஆனால் நான் கணிசமான கற்றலை தவறவிட்டதாக உணர்கிறேன் | 20 | 4.3% |
| கற்றல் பாதிக்கப்பட்டாலும், தடுப்பு சுகாதார நடவடிக்கையாக ஊரடங்கு நன்றாக இருந்தது | 19 | 4.1% |
| மற்றவைகள் | 0 | 0.0% |
| **மொத்த பதில்கள் (n) 466** | | |

# பரிந்துரைகள்

## 5. பரிந்துரைகள்

### 5.1. அடித்தளம்

1. பல மாநில-அரசுகளுக்கு இடையிலான அணுகுமுறை:

   குழந்தைகளின் சிறந்த நலன்களை உறுதி செய்ய சொந்த மற்றும் புலம் பெயர்ந்து வசிக்கும் மாநில அரசுகள் நெருக்கமாகவும், இணக்கமாகவும் வேலை செய்ய வேண்டும். தரவு சேகரிப்பு முதல் பள்ளிக் கல்வி, பாடநூல்கள், உரிமைகள் மற்றும் பாதுகாப்பு வரை பல நடவடிக்கைகளை ஒரு பகுதியில் மட்டுமே செய்ய முடியாது, அல்லது இணக்கமான திறன்களின் பெரும்பகுதியை இழக்காமல், சொந்த மற்றும் புலம் பெயர்ந்து வசிக்கும் மாநிலங்களால் சுயாதீனமாக கூட செய்ய முடியாது. கல்வி, தொழிலாளர், சுகாதாரம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாடு ஆகிய துறைகளுக்கு இடையே கல்வி, ஊட்டச்சத்து மற்றும் குழந்தை உரிமைகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்க, மாநிலங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மிகவும் அவசியம். பயனுள்ள விளைவுகளை பெறவும் இணக்கமான நடைமுறை அவசியமானதாக உள்ளது. இதற்கு அரசியல் தலையீடு மற்றும் நிர்வாக அறிவு தேவைப்படுகிறது. ஆய்வின் அடிப்படையில் இவை இரண்டும் இந்த மாநிலங்களில் பற்றாக்குறையாக உள்ளது தெரியவருகின்றது.

2. நிதி: குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது தொடர்பான சட்டங்களை, குறிப்பாக கல்விக்கான உரிமையை முறையாக செயல்படுத்த போதுமான வரவு செலவு திட்டங்கள் ஒதுக்கப்படவேண்டும். இது சொந்த மற்றும் புலம் பெயர்ந்து வசிக்கும் மாநில அரசுகளின் வரவு செலவுத் திட்டங்களில் பிரதிபலிக்கப்பட வேண்டும். மாநில அரசுகளின் மிகப்பெரும் நிதி பற்றாக்குறை மற்றும் பாதிப்படைந்த கருகூலங்களினால் பள்ளிகளுக்கு நிதியளிப்பது (ஆசிரியர்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் நல்ல விளைவுகளை பெற முக்கியமானவை என்று கண்டறியப்பட்டது) சர்ச்சைக்குரியதாக இருக்கும். வளங்களைப் பகிர்வதற்கான ஒரு சமமான சூத்திரம் சொந்த மாநிலத்திற்கும் (பாடப்புத்தகங்கள் மற்றும் ஆசிரியர்கள்) மற்றும் பிழைக்க வந்த மாநிலத்திற்கும் (சீருடைகள் மற்றும் உள்கட்டமைப்புகள்) இடையே உருவாக வேண்டும். மற்றொரு வாய்ப்பாக தொழிலாளர்களின் நலனுக்காக சேகரிக்கப்பட்ட நிதி அல்லது முதலாளிகளின் மீதான வரியினை எடுத்துக் கொள்ளலாம். மதிய உணவினை 'ஒரே நாடு ஒரே அட்டை' என்ற பொது விநியோக முறையின் கீழ் உள்ளடக்கலாம்.

3. கொள்கை, நிதி மற்றும் செயல் முறைகளை சீரமைத்தல்:
நீண்ட காலமாக, கொள்கை கட்டமைப்பைப் பற்றிய ஒரு விரிவான பார்வை, வரவு செலவு திட்டம் மற்றும் அதனை செயல்படுத்துதல் - இவற்றிற்கான சமநிலை, குறிப்பாக புவி சார்ந்த மற்றும் புவி-அஞ்ஞான உரிமைகள் இவை அனைத்தும் தாமதமாக உள்ளது. புவி சார்ந்த உரிமைகள் - குறிப்பாக பழங்குடியின சமூகங்களுக்கான பாதுகாப்புகள் மற்றும் ஆதரவு- இவற்றில் ஒரு பெரிய மாற்றம் தேவை. 1955-ம் ஆண்டில், ஜனாதிபதி உத்தரவு நிறைவேற்றப்பட்டபோது, மாநிலங்களுக்கு இடையே அதிகமான இடப்பெயர்வு இல்லை, மேலும் இடப்பெயர்வைக் கண்காணித்து தேவையான சேவைகளை வழங்க முடியவில்லை. இப்போது தொழில்நுட்பம் அதை சாத்தியமாக்குவது மட்டுமல்லாமல் எளிதாகவும் ஆக்கிவிட்டது. இந்த உரிமைகள் புவி-அஞ்ஞானவாதியாகவும் மாற்றப்பட வேண்டும். ஒரு குழந்தையின் உரிமைகள், கல்வி உரிமை, வேலை செய்யும் உரிமை போன்ற புவி-அஞ்ஞான உரிமைகள், கொள்கை தலையீடுகள் மற்றும் வரவு செலவுத் திட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும், இது புலம்பெயர்வின் புதிய யதார்த்தத்தின் காரணியாக இருக்க வேண்டும்.

4. எளிமையான ஒதுக்கீடுகள்: மாநிலங்களுக்கு இடையே சேவைகள் செய்வதற்கான பொருளாதாரப் பூர்வமான ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்பதை விதிமுறையாக மாற்ற வேண்டும். ஏழைகள் தங்களை ஏழைகள் என்று பதிவு செய்வதிலும், அவர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பதிவு செய்யாமல் மாறிச்செல்வதை அபாயமாக கருத்துவதையும் நாம் எளிதாக மறந்து விடுகின்றோம் - மாநிலத்தில் உள்ள உள்ளூர் அதிகாரிகள் இனவெறியர்கள் அல்ல என்றும் கூட அனுமானித்துக் கொள்கிறோம். தொழில்நுட்பமானது மானியங்கள், சுகாதாரம் (காப்பீடு), உதவித்தொகைகள் (சர்வதேச மற்றும் தேசிய) போன்ற சில ஒதுக்கீடுகளை எளிதாக ஆக்கியுள்ளது. இந்த ஒதுக்கீடுகள் குழந்தைகள் மற்றும் புலம்பெயர்ந்தோருக்கு மிகவும் இன்றியமையாதது, எனவே இவைகள் எழுத்து மற்றும் செயல் வடிவாக்கம் பெற வேண்டும்.

5. சிறப்பு விதிகளை உருவாக்குதல்: புலம்பெயர்ந்த குழந்தைகளை கல்வி உரிமைச் சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டுவர சிறப்பு விதிகள், நெறிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட வேண்டும். இவை அவர்களின்

குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். வணிக ரீதியாக சாத்தியமற்ற பகுதிகளில் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய உள்கட்டமைப்பை உருவாக்குவதும் இதில் அடங்கும். கல்விக்கான உரிமை என்பது புவி-அஞ்ஞானம் உள்ளது. எனவே அவர்களின் வசிப்பிடத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து குழந்தைகளுக்கும் கல்விக்கான உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும்.

## 5.2. பள்ளிகளை மீண்டும் துவங்குதல்

1. கல்வி உரிமையை உறுதி செய்வது மற்றும் எழுத்து, செயல் வடிவில் இவற்றை கொண்டுவருவது - இவற்றுக்கிடையே உள்ள இடைவெளி அடையாளம் காணப்பட்டது. எனவே, தாய்மொழியை பயிற்றுவிக்கும் ஊடகமாக கொண்ட பள்ளிகள் தொழிலாளர்களின் குடியிருப்பு அல்லது வேலை இடத்திற்கு அருகில் திறக்கப்பட வேண்டும். ஒரே மொழி பேசும் தொழிலாளர்களை (மற்றும் அவரகளது குழந்தைகள்) ஒன்று சேர்க்கவும், மாநில சேவைகள், பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்பு கட்டமைப்பை சிறந்ததாக வழங்குவதற்கும் வழிவகுக்கின்றது. எனினும் ஒதுக்கிவைக்கும் முறையை நாம் எதிர்க்க வேண்டும். இதை செயல்படுத்துபவர்கள் காவல்துறையின் பொறுப்பை தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு சமுதாயத்தில் அடக்குமுறையை கையாளுகிறார்கள்.

2. பள்ளி மீண்டும் திறப்பதற்கான தயார்நிலை. ஏற்கனவே பலவீனமான அடித்தளம் இன்னும் மோசமடைந்துள்ளது, சமுதாயத்தில் வாழ்வதற்கு தேவைப்படும் திறமைகள் மற்றும் கற்றல் திறன்களை மீண்டும் பெற பல ஆண்டுகள் ஆகலாம். ஒரு திடீர் தொடக்கம் நிலைமையை மோசமாக்கும் மற்றும் குழந்தைகளை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்கும். கோவிட்-19 பெறுந்தொற்றுக்கு முன்பு உள்ள நேரங்களுடன் ஒப்பிடுகையில் கணிசமான இழப்பினை கல்வி சந்தித்துள்ளது.

3. பள்ளியை மீண்டும் தொடங்குவதற்கு முன் கற்றல் மதிப்பீடு, இதுவரை பயின்ற கல்வியின் பயனைக் குறித்த தகவல் சேகரிப்பு ஆகியவை மீட்பு முயற்சியில் கவனம் செலுத்துவதில் பெரிதும் உதவும்.

4. உட்கட்டமைப்பு ஆளிடைவெளி பேணல் மற்றும் சுகாதார தேவைகளுக்கு இணங்க பள்ளி உட்கட்டமைப்பு அதிகரிக்கப்பட வேண்டும். இடம் பெயர்ந்தோருக்கான வீட்டுவசதி போன்ற பிற உள்கட்டமைப்புகளும் மருத்துவ மற்றும் சுகாதாரத் தேவைகளும் மிகவும் அவசியமாக காணப்படவேண்டும். கல்வி கற்பதற்கான அனைத்து பொருள்களும் சரியான நேரத்தில் அவர்களுக்கு கிடைக்கப்பெறுதல் ஒரு பெரிய வித்தியாசத்தை உணரச் செய்யும். இடம் பெயர்ந்த குழந்தைகள் படிக்கும் பள்ளிகளின் உள்கட்டமைப்பானது பாதுகாப்பான பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் விளையாட்டு மைதானங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

5. கற்பித்தல் மற்றும் உளவியல் திறன்கள். மனக்காயம், பாலியல் மற்றும் பிற வன்முறைகளை கடந்து வந்த குழந்தைகளின் தேவைகளைபூர்த்தி செய்ய ஆசிரியர்களுக்கு கற்பித்தல் மற்றும் உளவியல் திறன்கள் தேவை ஆசிரியர்கள் இந்த திறன்களை மாணவர்களுக்கு வழங்க வேண்டும், இதனால் குழந்தைகள் தங்கள் அசாதாரண அனுபவத்தை சமாளிக்கவும் எதிர்காலத்திற்கு தயாராகவும் இருக்க முடியும். இரண்டு ஆண்டுகளாக வீட்டில் இருக்கும் குழந்தைகள் கற்றுக்கொள்ள உதவும் திறன்களுக்கு கூடுதலாக இவை உள்ளன. 'பொருத்தமான வயது' மறுவரையறை செய்யப்பட வேண்டும். பல குழந்தைகள் இணையவழிக் கல்வியை அணுகாத நிலையில், குழந்தைகள் பள்ளிக்குத் திரும்புவதற்கு சக குழந்தைகளின் தொடர்பு ஒரு பெரிய ஊக்கமாகும். அவர்களை ஒரே இடத்தில் அமர்த்தி கற்பிக்க ஆசிரியர்களுக்கு, குறிப்பாக மூத்த வகுப்புகளின் ஆசிரியர்களுக்கு புதிய திறன்கள் தேவைப்படும்.

### 5.3. மாநிலங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பு:

1. இடம்பெயர்ந்த குழந்தைகள் தங்கள் சொந்த கிராமத்திற்குத் திரும்பியதும் சொந்த மாநிலத்தில் மீண்டும் பள்ளியில் நுழையும் வகையில், உள்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் பள்ளி சமநிலைக்கான, மாநிலங்களுக்கு இடையிலான வழிமுறைகள் செய்யப்பட வேண்டும். இதேபோல், பிறந்த இடத்தில் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ்கள் சொந்த மாநிலத்தால் ஏற்றுக்கொள்ள படவேண்டும். ஏனென்றால் பிற மாநிலங்களிலும் இருப்பிடத்தைச் சார்ந்த சலுகைகளான ஜாதி சான்றிதழ்களை வைத்துப் பெறக்கூடிய சலுகைக்

கட்டணம், புலமைப்பரிசில்கள் மற்றும் பிற கல்வி உதவிகளைப் பெற உறுதுணையாக இருக்கும்.

2. புலம் பெயர்ந்த குழந்தைகளின் பள்ளிப் படிப்பு சீர்குலைவதைத் தடுக்க மாநிலங்களுக்கு இடையேயான நெறிமுறைகளை உருவாக்குதல். இது ஆசிரியர்கள், ஆலொசகர்கள் பாடப்புத்தகங்களை வழங்குவது மற்றும் நீண்ட கால சிக்கல்களான, ஒரு கல்வி ஆண்டில் ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலத்திற்கு பரிமாற்ற சான்றிதழ்கள் இல்லாமல் அல்லது குறைந்தபட்ச ஆவணங்களுடன் பல முறை தடையற்ற விதத்தில் பரிமாற்றம் நடப்பதையும் உள்ளடக்கியது. கல்வி தொடர்பான அனைத்து சட்ட மற்றும் அரசியலமைப்பு விதிகளுக்கும் இணங்குவதை உறுதி செய்ய, அரசுகள் மற்றும் துறைகளிடையே மாநிலங்களுக்கு இடையிலான தகவல் தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.

3. வரைபடம் எழுதுதல்: அடையாளம் காணப்பட்ட குறிப்பிடத்தக்க இலக்குப் பகுதிகள் மற்றும் மக்கள் தொகை மிகுதியாக உள்ள பகுதிகளில் இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் விரிவான வரைபடமானது அரசாங்கத்தினால் உருவாக்கப் படவேண்டும். பிறப்பிடம் மற்றும் தற்போது வாழுமிடம் என இரு இடங்களிலும், இடம்பெயர்ந்த தொழிலாளர்கள், அவர்களது குடும்பங்கள், குழந்தைகள், அவர்களது பணித்தளங்கள் மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு, ஆகியவற்றின் துல்லியமான தகவல்களின் அடிப்படையில் ஒரு தகவல் தளத்தை உருவாக்கவும்.

4. உரிமைகளின் பெயர்வுத்திறன்: பொது விநியோக அமைப்பு, ஒருங்கிணைந்த குழந்தைகள் நலத்திட்டம், இடம்பெயர்ந்த குழந்தைகளுக்கு தாய்மொழியில் பள்ளிக்கல்வி, சுகாதாரம் மற்றும் காப்பீடு ஆகியவை மாநில மற்றும் மத்திய அரசுகளின் கொள்கையாக தொடங்கப்பட வேண்டும். இடைத்தரகர்களின் உதவியில்லாமல், இடம்பெயர்ந்தவர்களால் பின்பற்றப் படக்கூடிய எளிய நடைமுறைகளுடன், மாநிலங்கள் முழுவதும் உரிமைகளை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

5. குடிமைச் சமுதாயம் மற்றும் தொழில்துறையுடன் இணைந்து பணியாற்றல்: கையில் உள்ள பிரச்சினை மிகப்பெரியது மற்றும் உணர்வுபூர்வமானது என்பதால், அரசாங்கம் இடம்பெயர்ந்த மக்கள் வாழும் மற்றும் பிறந்த பகுதிகளில், ஏற்கனவே அவர்களுக்கான நிவாரணம் மற்றும் சேவைகளை வழங்கும் குடிமைச் சமுதாயம் மற்றும் சமூக அமைப்புகளுடன் இணைந்து முறையாக வேலை செய்ய வேண்டும்.

### 5.4. மாநிலம் விட்டு மாநிலம் புலம்பெயர்ந்த குழந்தைகளைப் பாதுகாத்தல்:

1. செயல்படக்கூடிய தகவல்களைச் சேகரிக்கவும்: 'கண்ணைவிட்டு மறைந்தது, நினைவைவிட்டு மறைந்துவிடும்'. இடம்பெயர்ந்த மக்கள் நம் கண்களுக்கு வயப்படுவதில்லை. அதேபோல் தான் இடம்பெயர்ந்த தொழிலாளர்களும் அவர்களது குழந்தைகளும். இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்பற்றாக்குறை உள்ளது, இதனால் அவர்கள் பாதிக்கப்படுதல் மற்றும் ஒதுக்கப்படுத்தல் அதிகரிக்கின்றது. கல்வித் துறையால் நடத்தப்படும் ஆய்வுகள் பள்ளியிலிருந்து வெளியேறிய குழந்தைகள் பற்றிய தரவுகளைசேகரித்து, அவர்களை பள்ளிக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்கலாம். பிற மாநிலங்களைச் சேர்ந்த குழந்தைகள் தங்கள் தாய்மொழியில் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைப் பெற வேண்டும். தகவல்களை சேகரித்தப்பிறகு, தாய்மொழியில் பள்ளிப்படிப்பு இருப்பதை உறுதி செய்ய சொந்த மாநிலங்கள் களம் இறங்க வேண்டும்.

2. உள்ளடக்கிய தவல்கள்: தொழில்துறையில் பணிபுரியும் இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்காக, சட்டவிரோத குடியேறுவோர் மற்றும் சமூக விரோத சக்திகளை அடையாளம் காணவும், தொழில் துறை வாரியான வேலைவாய்ப்பு காட்சிகள் குறித்த தரவு இணையதளமும் கொண்ட இலக்க முறை தகவல் வங்கி உருவாக்கப்படும் என்று அறிவித்த முதல் மாநிலமாக தமிழ்நாடு அரசு உள்ளது. உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பான பல்வேறு திட்டங்களை அணுகுவதைத் தடுக்க அல்லது குடும்பங்களுக்கு, குறிப்பாக குழந்தைகளுக்கு ஒரு தடுப்பாக இருக்க இந்த தகவல்கள் தவறாகப் பயன்படுத்தப்படலாம். கவனமாக வடிவமைக்கப்படாவிட்டால், இடம்பெயர்வால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் கல்வியினை வலுப்படுத்துவதற்கான தலையீடுகளை உருவாக்கும் முயற்சிகளுக்கு இது தடையாக இருக்கும்.

3. இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் நல வாரியம் இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் அவர்களது குடும்ப விவரங்களுடன் குறிப்பாக குழந்தைகள் பற்றிய தகவல்களை பதிவு செய்ய அமைக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை சொந்த மாநிலங்களில் பதிவு செய்யும் பொறுப்பு ஒப்பந்தக்காரர்களுடன் இருக்க வேண்டும், மற்றும் அவர்கள் பணி புரியும் மாநிலங்களில் பொறுப்பு முதலாளிகளுடையதாக இருக்க வேண்டும். 100% பாதுகாப்பை இலக்காகக் கொண்டு, அனைத்து இடம்பெயர்ந்த குழந்தைகளையும் பதிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

4. பாலர் பள்ளி கவனிப்பு: 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சரியான கவனிப்பும் பாதுகாப்பும் இல்லை. குழந்தைகளை மழலையர் பள்ளிகளில் சேர்க்க ஏற்பாடு செய்து, தேவைப்பட்டால், அவர்களின் குடியிருப்புக்கு அருகில் புதிய மழலையர் பள்ளிகளைத் தொடங்க வேண்டும்.

5. கிராம குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள்: கிராமக் குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள் அனைத்து கிராமங்களிலும் செயல்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு கிராம மட்டத்திலும் கிராமக் குழந்தைகள் பாதுகாப்பு குழுக்கள் கிராமத்தில் உள்ள குழந்தைகளின் விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் இடம்பெயரும் குழந்தைகளைக் கண்காணிக்க வேண்டும்.

### 5.5. சொந்த மாநிலங்கள் (ஆரம்ப பகுதி)

1. இடம்பெயர்ந்த குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதில் முனைப்புடன் செயல்படுதல்: குழந்தைகள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் எவ்வளவு காலம் தங்கியிருந்தாலும், அவர்கள் தங்கள் சொந்த மாநிலத்துடன், தங்கள் வீட்டோடு ஒரு சிறப்பு பிணைப்பை வைத்திருக்கிறார்கள். இந்த தொற்றுநோய் காலம் அவர்களின் இதயம் எங்கே இருந்தது, மற்றும் அவர்கள் எங்கு இருந்தாலும் மிகவும் கடினமான அல்லது ஆபத்தான சூழ்நிலையில் இருக்கும்போது எங்கே திரும்ப விரும்பினார்கள் என்பதை நிரூபித்தது. சொந்த மாநிலங்கள் அவர்கள் நலனைப் பாதுகாக்க அவர்கள் தங்கியிருக்கும் மாநிலத்துடன் ஒருங்கிணைக்க முன்முயற்சி எடுக்க வேண்டும்.

2. இடைத்தங்கல் பள்ளிகள் மற்றும் பருவகால விடுதிகள்:
பருவக்காலத்திற்கு ஏற்ப இடம்பெயர்பவர்கள் இருக்கிறார்கள். இத்தகையவர்களுடைய மாநிலங்கள் அவர்களுக்கு உதவி புரியும் வகையில் பெற்றோர்கள் வேலைக்காக இடம்பெயரும் போது தங்கள் குழந்தைகளை பருவகால விடுதிகள் மற்றும் பள்ளிகளில் அவர்கள் மாநிலத்திலேயே விட்டு செல்ல வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

3. திட்டமிடப்பட்ட இடம்பெயர்வு வழக்கமாக இருக்க வேண்டும், ஏனெனில் இது மாநிலத்திலிருந்து வெளியேறும் குழந்தையின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் தேவையான உள்கட்டமைப்பைத் தயாரிக்க அவர்கள் இடம்பெயரும் மாநிலங்களுக்கு உதவுகிறது. துயரத்துடன் இடம்பெயர்தல் பல கொள்கை தலையீடுகளால் தடுக்கப்பட வேண்டும், ஏனெனில் இதனால் அவர்கள் போகும் இடங்களில் நீண்ட கால விளைவாக குழந்தைப் பருவத்தை இழக்கிறார்கள்.

4. இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் அனைவரையும் பதிவு செய்தல், மாநிலங்களுக்கு இடையிலான இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் சட்டத்தின் படி அனைத்து இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களையும், அவர்களின் இல்லத்திற்கு மிக அருகில் உள்ள பதிவேட்டில், பதிவு செய்யவும்.

5. இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் உரிமைகளைப் பற்றி உணர்தல், உரிமைகளும் சமூகப் பாதுகாப்பு ஏற்பாடுகளும், குறிப்பாக குழந்தைகளுடன் தொடர்புடையவை. பள்ளிகள், உள்ளூர் இடம்பெயர்ந்தோர் ஆதரவு அமைப்புகள் மற்றும் குடிமைச் சமூக அமைப்புகளின் தரவுத்தளம் அவர்கள் தங்கள் பயணத்தைத் தொடங்குவதற்கு முன் அவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்.

### 5.6. தங்கியிருக்கும் மாநிலம் (சேரும் பகுதி):

1. இடம்பெயர்ந்த குழந்தைகளுக்கான குறிப்பிட்ட நெறிமுறைகள், விதிகள் மற்றும் விதிமுறைகள், சரியான பங்கீட்டை வழங்குவதற்கான சேவை வழங்கல் தரநிலைகள், கல்வி, தங்குமிடம் மற்றும் சுகாதார வசதிகள் இவற்றினை உருவாக்குதல். இது வணிக ரீதியாக சாத்தியமற்ற கல்வி மற்றும் தகவல் தொடர்பு உள்கட்டமைப்பை வழங்குவதை உள்ளடக்கியது.

2. பள்ளிகள்: பதிவு செய்யப்பட்ட முழுமையான செயல்பாட்டுபள்ளிகள் குடியிருப்புகளுக்கு நெருக்கமாகவும், இடம்பெயர்ந்த குழந்தைகளின் மொழியிலும் அமைக்கப்பட வேண்டும். நூலகங்கள் மற்றும் வாசிப்பு அறைகள் பள்ளி இல்லாத நேரங்களிலும் அணுகக்கூடியதாக இருக்க வேண்டும். குழந்தைகள் உரிமைகள் மையங்கள் நடத்தும் மாநிலங்களுக்கிடையே-இடம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கான மத்திய புள்ளியியல் அலுவலகங்களானது, தேசிய குழந்தை வளர்ச்சி அமைச்சகத்தின் ஆதரவுடன் எந்த குழந்தையும் புறக்கணிக்கப் படுவதில்லை என்ற கொள்கை கொண்ட பள்ளிகளாக மாற்றப்பட வேண்டும். ஆசிரியர்களுக்கு சம்பள ஆதரவு, ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.500 மற்றும் மதிய உணவு ஆகிய வழங்கப்பட வேண்டும்.

3. தகவல்கள் மற்றும் வகைப்பாடு: பருவகால இடம்பெயர்வுக்கு பெற்றோருடன் வரும் குழந்தைகள் அனைவரும் இடம்பெயர்ந்த-குழந்தைகளாக கணக்கிடப்பட வேண்டும், மேலும் அத்தகையவர்களின் அனைத்து வேலைகளும் தடை செய்யப்பட வேண்டும். இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் வேலை செய்வதற்கான முன்நிபந்தனையாக அவர்களின் பள்ளிக் கல்விக்கான போதுமான ஏற்பாடு (அரசால் அல்லது முதலாளியால்) உறுதி செய்யப்பட வேண்டும். தன்னிச்சையாக இடம்பெயரும் குழந்தை-தொழிலாளர்கள் (18 வயதுக்கும் குறைவானவர்கள்) ஆட்கடத்தல் செய்யப் பட்டவர்களாக கருதப்பட வேண்டும். இடம்பெயர்ந்த குழந்தைகளை வேலையில் ஈடுபடுவதை தடுக்கவும், அவர்களை பள்ளிகளுக்கு அனுப்ப பெற்றோரை ஊக்குவிக்கவும் குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிராக அவர்கள் வேலை செய்யும் மாநிலங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. பல-பங்குதாரர் கூட்டாண்மை: எதிர்காலத்தில் எத்தனை இடையூறுகள் இருந்த போதிலும் தடையற்ற கற்றலை உறுதி செய்ய அனைத்து குடியிருப்புகளிலும் தொழில்துறை (ஆலை மேலாண்மை, செங்கல் சூளை உரிமையாளர்கள்) மற்றும் குடிமைச் சமூகத்துடன் இணைந்து அரசு செயல்பட வேண்டும். கணிசமான எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் துறைகளில், தொழில்துறை தளங்களுடன் ஈடுபட்டு, இடம்பெயர்ந்த குழந்தைகளின் கல்வியில் எதிர்கால இடையூறுகளைத் தடுக்க எந்த இக்கட்டான சூழ்நிலைகளையும் தாங்கும் அமைப்புகள் இருப்பதை உறுதி

செய்ய பல பங்குதாரர்களின் தளங்கள் அமைக்கப்படவேண்டும். அத்தகைய கற்றலுக்கு ஆதரவு கொடுக்கும் உள்கட்டமைப்பானது விரைவில் நடைமுறை படுத்தப் பட வேண்டும்.

5. விழிப்புடன் கண்காணிக்கும் நிறுவனங்கள்: அனைத்து இடம்பெயர்ந்த குழந்தைகளுக்கும் சட்டப்பூர்வ தரநிலைகள் பராமரிக்கப்படுவதை மாநில குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

### 5.7. குடிமைச் சமூக அமைப்புகள்

1. பிறந்த மற்றும் வாழும் இடங்களைக் கொண்டு குழந்தை இடப்பெயர்வை வரைபடமாக்கவும். அச்சு, ஒலி-ஒளி காட்சி, சமூக ஊடகங்கள், விரிவான ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் இவைகளின் மூலம் பல்வேறு பங்குதாரர்களுக்கு இவைகளை திட்டமிட்ட அணுகுமுறையுடன் ஆவணப் படுத்தவும் பரப்பவும் வேண்டும்.

2. உரிமைகளுக்கான விழிப்புணர்வு: இடம்பெயர்ந்த குழந்தைகளுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களின் உரிமைகள் தெரிவிக்கப்பட வேண்டும். இவை நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்கும், அவை இல்லாதபோது நீதியைப் பெறுவதற்கும் ஒப்பந்தக்காரர்கள்/முதலாளிகள் மற்றும் அரசு அதிகாரிகளைக் கையாள்வதற்கு அவர்களுக்கு ஆதரவளிக்கவும்.

3. மீள்திறம் கொண்ட சமூக ஆதரவு அமைப்புகள்: குறிப்பாக சாதாரண தகவல் தொடர்பு அமைப்புகள் உடைந்து போகும்போது, குழந்தைகள் தங்கள் குடும்பங்கள் மற்றும் நண்பர்களுடன் தொடர்பில் இருக்க சமூக ஆதரவு வழிமுறைகளை உருவாக்குங்கள்.

4. தொழிலாளர் ஒப்பந்தக்காரர்களுடன் இணைந்து பணியாற்றி அவர்களுக்கு பொதுவாக இடம்பெயர்தல் மற்றும் குறிப்பாக குழந்தை இடம்பெயர்வு பிரச்சினையில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

5. கருத்து முனைபவர் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்: சரியான தரவுகள் மற்றும் பகுப்பாய்வுகளுடன், இடம்பெயர்ந்த சமூகங்களின் அவலநிலை குறித்து அரசியல் வர்க்கம், அதிகாரத்துவம் மற்றும் ஊடகங்களுடன் ஈடுபடுங்கள்.

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

குறிப்பு

மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை
m: 86680 91451 | e: sdgwatch@hrf.net.in | w: hrf.net.in